108

1-7-1989

1-9-1989

52
V211m N46
N 89.20.1-2
162339


தமிழரசு
Tamil Arasu
தமிழரசு
1-7-1989 ரூ.1.



11.6.89 அன்று திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தை
மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்

# 20

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2020

சுக்ல-ஆனி 17

மலர்: 20 இதழ்: 1

1-7-1989

'தமிழரசு' 20-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள், சாதனைகள் குறித்த செய்திகள், தமிழ்ச் சான்றோர்கள், தேசத் தலைவர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் புதுமைகள், கவிதை மாலைகள், மாணவர்க்குரிய கட்டுரை, கவிதைகள் என இப்படிப் பல்வேறு பயனுள்ள எழுத்தோவியங்களை வழங்கித் தொண்டாற்றி வருகிறது 'தமிழரசு'.

அரசின் சார்பில் நடத்தப் பெறும் ஏடு என்ற போதிலும், பொதுமக்கள் விரும்பிப் படிக்கும் பொலிவு மிக்க ஏடாக தமிழரசு விளங்கி வருகிறது.

இன்னும் பல புதிய பகுதிகள் 'தமிழரசு' இதழின் மூலம் பவனி வர இருக்கின்றன.

'தமிழரசு' இதழுக்கு, தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்குகிறோம்.

-ஆசிரியர்

## இந்த இதழில்


| | | |
|---|---|---|
| மாண்புமிகு முதல்வர் செய்தி | ... | 2 |
| மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கட்டுரை | ... | 4 |
| செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் கட்டுரை | ... | 6 |
| வான் சிறப்பு- கவிஞர் கு.மா.பா. கவிதை | ... | 9 |
| திண்டுக்கல் - காயிதேமில்லத் மாவட்டம் உதயம் | ... | 10 |
| தருமபுரி மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் | ... | 12 |
| இலக்கியத்தில் தன்னம்பிக்கை ஊட்டும் செய்திகள் | ... | 18 |
| கண்ணியத்துக்குரிய காயிதேமில்லத் | ... | 21 |
| சேலம் மாவட்டத்தில் முதல்வர் நிகழ்ச்சிகள் | ... | 24 |
| தெலுங்கு கங்கைத் திட்டம் | ... | 35 |
| அறிவாலயம் (கன்னிமாரா நூலகம்) | ... | 39 |
| சிறிய சுயசரிதம்- கவியரசர் கண்ணதாசன் கவிதை | ... | 41 |
| வளரும் வேளாண்மை | ... | 42 |

162339
3L
V211m N46
N89.2001-2



# உங்கள் கைகளில்... முதல்வர் வாழ்த்துகிறார்

[illegible]

உழைப்புக்கு ஊக்கம் -

[illegible]

முதல் இதழ் உங்கள் கைகளில்!

[illegible]

வாழ்க தமிழரசு!

வணக்கம்

[illegible signature]

27/6/70

'தமிழரசு' முதல் இதழில் (1-7-1970) வெளிவந்துள்ள முதல்வர் கலைஞர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

# தமிழரசு - வெளியீட்டு விழா (1970)

தமிழக அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பல பத்திரிகைகள் நடத்தப் பெற்று வந்தன. அவை, பொதுமக்கள் விரும்பிப் படிக்குமாறு அமைந்திருக்கவில்லை. அந்தக் குறைபாட்டை நீக்க விரும்பினார் தமிழக முதல்வர் கலைஞர். எல்லா ஏடுகளையும் ஒருங்கிணைத்து 'தமிழரசு' என்னும் பெயரில் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித் தனியே இரு பத்திரிகைகளை வெளியிட விரும்பினார். அந்த விருப்பம் 1970 ஜூன் திங்களில் நிறைவேறியது. தமிழ் கூறும் நல்லுலகை மகிழ்விக்கத் 'தமிழரசு' தோன்றியது.

முதல்வர் கலைஞர் அவர்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்வதற்கு முந்திய நாளன்று (30.6.1970) தமிழரசு இதழ் வெளியிடப்பட்டது.

'தமிழரசு' - தமிழ்ப் பதிப்பை டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்களிடமும், ஆங்கிலப்பதிப்பைதிரு.ம.பொ.சிஅவர்களிடமும் வழங்கினார் முதல்வர் கலைஞர்.

அன்றைய வெளியீட்டு விழா தொடர்பான புகைப் படங்கள் ஜூலை 16 (1970) இதழில் வெளிவந்தன.

அந்நாளைய வாசகர்களுக்கு மலரும் நினைவாகவும், இந்நாளைய வாசகர்களுக்கு அரும் விருந்தாகவும் அந்தப் புகைப் படங்களை மீண்டும் வெளியிடுகிறது தமிழரசு.





# தமிழரசு போற்றுதும்!

-மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

**திரு. பொன். முத்துராமலிங்கம்**





**வ**ளர்ச்சித் திட்டங்களில் முதலீடும் செய்ய வேண்டும். அதே சமயத்தில் மக்களுக்கு உடனடி நன்மைக்கான நல்வாழ்வுத் திட்டங்களும் செயல்படுத்தப்படவேண்டும் என்ற சீரான கண்ணோட்டத்தோடு செயல்பட்டு வருகிறது நமது தமிழக அரசு.

மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, நல்வாழ்வு, குடிநீர், குடியிருப்பு, வீட்டுமனை முதலிய பணிகளை நிறைவேற்றிக் கொண்டு, ஏழை எளிய மக்களுக்கு வாழ்க்கையில் குறைந்தபட்சப் பாதுகாப்பேனும் வழங்கும் விதத்தில் பல்வேறு சமூக நலத் திட்டங்களை நிறை வேற்றி வருகிறோம்.

கடந்த ஐந்து மாதங்களில், நாளொரு பணியும் பொழுதொரு திட்டமுமாக நமது அரசின் பணிகள் தொடருகின்றன.

அண்மையில், சென்னையில் ஒரு கூட்டத்தில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார்கள், "கடந்த ஐந்து மாதங்கள் நாம் ஆற்றியுள்ள பணிகள் 'மாநில வளம்' என்ற புத்தகத்தின் முகப்புரைதான்; முழுமையான புத்தகத்தை இனிமேல்தான் நாம் எழுதியாக வேண்டும்" என்று.

இந்தக் குறுகிய கால கட்டத்தில் நாம் ஆற்றியுள்ள பணிகள் ஏராளமாக இருந்தாலும், நாம் தொடர்ந்து செய்ய வேண்டிய பணிகள்- மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள்- நாட்டு நலனுக்காக உருவாக்க வேண்டிய திட்டங்கள் ஏராளமாக உள்ளன என்பதைச் சுட்டிக் காட்டவே, நமது முதல்வர் கலைஞர் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்கள்.

நாம் நிறைவேற்றி வரும் திட்டங்களின் பயனும், சட்டங்களின் பாதுகாப்பும் உரிய மக்களுக்குத் தடையின்றி எட்டிட வேண்டும்.





அரசு ஆற்றிடும் பணிகள் அடித்தளத்து மக்களுக்கு எட்டிட வேண்டும். அதற்கு நமக்கு உறுதுணையாக அமைந்துள்ள சாதனங்களில் ஒன்றுதான் 'தமிழரசு'. எனவே, தமிழரசின் வளர்ச்சி மக்களுக்கு நன்மை பயக்கும் பணியாக விளங்குகிறது.

இன்று மாநில அரசு மக்களுக்கு ஆற்றிவரும் பணியை விளக்கிட நமக்குள்ள வாய்ப்பு-

திரைப்படப் பிரிவின் செய்திப் படங்கள்-

'தமிழரசு' இதழ்

புகைப்படப் பிரிவு

செய்தி வெளியீடுகள்

புத்தக வெளியீடுகள்

விளம்பரங்கள்

பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் முதலியன ஆகும்.

இப்பணிகளில் நமக்கு ஒரு படைக்கலனாக உள்ள தமிழரசு அனைவராலும் பாராட்டப்படும் பெருமைக்கு உரியதாக விளங்குகிறது.

நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கரத்தால் பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட 'தமிழரசு'-

இப்போது, மேலும் புதிய பொலிவுடன் வெளிவரத் தொடங்கியுள்ளது.

பொற்காலம் படைத்து வரும் நமது தமிழ்நாடு அரசின் படைக்கலன்களில் ஒன்றாக விளங்கும், தமிழரசு போற்றுதும்! தமிழ்நாடு அரசு போற்றுதும்!

# வயது இருபது வளர் பெருமை பெரிது!

நமது 'தமிழரசு' இதழ் இருபதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

1970-ஆம் ஆண்டில் அரசின் சார்பில் நடைபெற்ற பல்வேறு இதழ்களை ஒருங்கிணைத்து 'தமிழரசு' இதழை உருவாக்கித் தந்தார்கள், நமது முதல்வர் கலைஞர் அவர்கள்.

பத்தொன்பது ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இன்று, தமிழரசுக்கு இருபதாவது ஆண்டுத் தொடக்கம்!

மாநில அரசுகள் தத்தம் பணிகளை மக்களுக்கு விளக்கிடவும், மக்கள் நல்வாழ்வுக்குரியவைகளைக் கற்பிக்கவும் இந்த இதழ்கள் பயன்படுகின்றன.

நம் மாநிலத்திலும் பல்வேறு துறைகளில் பல இதழ்கள் நடந்தன. ஆனால், அவை அனைத்தும் விற்பனை எண்ணிக்கையில் மிகமிகக் குறைவாகவும், வனப்பில்லா ஏடுகளாகவும் இருந்தன. எனவே அவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் 'தமிழரசு' இதழ் வெளிவரத் தொடங்கியது.




பல்துறைப் பணிகளையும் விளக்கிடும் ஏடாக வெளிவரும் 'தமிழரசு', இலக்கிய மணங்கமழும் இதழாக வெளிவந்து கொண்டிருப்பது தமிழார்வம் கொண்டோரால் அடிக்கடி போற்றப்படுகிறது.

**-கி. ராஜமாணிக்கம்**
**இயக்குநர்**
**செய்தி மக்கள் தொடர்புத்துறை**
**மற்றும்**
**மாண்புமிகு முதல்வர் அவர்களின்**
**துணைச் செயலாளர்**

'தமிழரசு வளர்த்த தமிழ்' என்று பல்கலைக் கழக மாணவர்கள் ஆய்வுசெய்வதற்கான கருப்பொருளையும் வழங்கி வந்திருக்கிறது 'தமிழரசு'.

கருநாடக மாநிலத்தின் பெங்களூரில் நடைபெற்ற ஒரு புத்தகக் கண்காட்சியில், மாநில அரசுகள், மத்திய அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் வெளியீடுகள் அனைத்தும் தொகுத்து வைக்கப்பட்டிருந்தன. மாநில, மத்திய அரசுகளின் வெளியீடுகள் அனைத்திலும், அழகிய அமைப்பிலும் அச்சு நேர்த்தியிலும் சிறந்ததாகத் 'தமிழரசு' இதழ் இருப்பதாகப் பாராட்டப்பட்டது.

வெளி மாநிலங்களிலிருந்து வரும் செய்தி-மக்கள் தொடர்பு அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் பலமுறை 'தமிழ்ரசு' இதழ் அமைப்பையும், வனப்பையும் வியந்து பாராட்டியிருக்கிறார்கள். நம் நாட்டில் அரசுத் துறையில் நடத்தப்படும் அனைத்து இதழ்களில் சிறந்ததாகத் 'தமிழரசு' விளங்குகிறது என்பதை, இதழ்த்துறையாளர்கள் அனைவரும் கூறியுள்ளனர்.

'தமிழரசு'-

அரசின் ஆக்கப்பணிகளை விளக்கிடும் பட்டயமாக விளங்குகிறது.

ஒரு காலத்தில் ஓர் இலட்சம் பிரதிகள் அச்சிடப்பட்ட தமிழரசின் விற்பனை எண்ணிக்கை இடையே குறைந்தாலும், மீண்டும் மிகப் பெரிய இலக்கை எட்டுமளவுக்குப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நவீன வளர்ச்சிக்கு ஏற்ப அச்சுப் பணிகளிலும் மாற்றங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. 'தமிழரசு' இதழ்ப் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் குழுவினர் அனைவரும் தேர்ந்த அனுபவமும் திறனும் பெற்றவர்கள். 'தமிழரசு' இதழின் வளர்ச்சியிலும் பெருமையிலும் இவர்களுக்கு நிரம்பப் பங்கு உண்டு.

மாநில அரசு மக்களுக்குச் செய்யும் பணிகள் - திட்டங்களின் நோக்கங்கள் மக்களுக்கு எட்டுமளவுக்குப் பணியாற்றும் 'தமிழரசு',

மாநில அரசின் மக்கள் தொடர்புச் சாதனங்களில் முக்கியமானதாக விளங்குகிறது

பணிகளை விளக்குதல்
பயனுள்ள செய்திகளை அளித்தல்

பைந்தமிழ் வளர்ச்சிக்குத் துணையாய் அமைதல் -

படிப்போரைக் கவரும் வகையில் கருத்துகளைச் சொல்லுதல்-



வனப்பிலும் வடிவமைப்பிலும் சிறந்து இருத்தல் -

தமிழரசின் தலையாய பணியாக, இன்று போல என்றும் அமையும் என்றுரைக்கும் இந்த நேரத்தில் ஆதரவளித்து வரும் வாசகர் அனைவருக்கும் நன்றி பாராட்டுவது நமது கடமை!

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலிருந்து வெளியாகும் மாநில அரசின் ஏடுகள் அனைத்துக்கும் வழிகாட்டியாக விளங்குகிறது என்று சொல்லும் நிலை தொடர

தொண்டாற்றுவோம்!
வெற்றி குவிப்போம்!





15-6-89 அன்று மதியம் பாட்னா செல்லும் வழியில், சென்னை விமான நிலையம் வந்திறங்கிய மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்றார்.

## செங்கை அண்ணா மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

செங்கை அண்ணா மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின் கீழ் புதிய உறைக் கிணறுகள் ரூ. 8 இலட்சம் செலவிலும். 933 திறந்த வெளிக் கிணறுகள் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் ஆழப்படுத்தவும், 429 ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் பழுது பார்க்கவும், ரூ. 11 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு 131 வேலைகள் முடிந்துள்ளன. ரூ. 16 இலட்சத்தில் 191 இடங்களில் லாரிகள், வண்டிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டு உள்ளது.

நீர்ப் பாசனத்துறை மூலம் பழுது பார்க்கவும், வரவுக் கால்வாய்களைச் சீர் செய்ய ரூ. 7 இலட்சமும். பொதுப்பணித் துறை மூலம் ஏரி, ஊருணி, தடை, வரவுக் கால்வாய் முதலியவற்றைச் சீர் செய்ய ரூ. 10 இலட்சமும், வனத்துறை மூலம் சம்பந்தப்பட்ட பணிகளுக்கு ரூ. 9 இலட்சமும், ஊரக வளர்ச்சித்துறை மூலம் தடை, ஏரி ஊருணி சீர் செய்யவும், சாலை அமைக்கவும் ரூ. 21.04 இலட்சமும், நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறப் பணித்துறை, மூலம் சாலைகள அமைக்க ரூ.12 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறு சேமிப்புத் திட்டத்திற்கு 1989-90-ஆம் ஆண்டுக்கு ரூ. 29 கோடி இலக்கு நிர்ணயம் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

ஆதிதிராவிட நலத்துறை சார்பில் நடப்பு ஆண்டிற்குத் தாழ்த்தப்பட்டோருக்கு உழவு மாடுகள் வழங்க ரூ. 1.60 இலட்சமும், மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்க ரூ. 28. 40 இலட்சமும், பாடப்புத்தகங்கள். நோட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்க ரூ. 10 இலட்சமும், மயானப் பாதை அமைக்க ரூ. 1.80 இலட்சமும், குடிநீர் வசதிக்காக ரூ. 1.20 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 560 வீடுகள் ரூ. 57.50 இலட்சம் செலவில் கட்டபபட்டு வருகின்றன.

வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ரூ.434.95 இலட்சமும். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ரூ. 4.19 இலட்சமும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.3.37 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டைப்பட விளக்கம்.**

கடந்த ஆண்டுகளில் வெளிவந்துள்ள தமிழரசு இதழ்களின் அட்டைப் படங்களில் சில. இந்த இதழின் முகப்பை அணி செய்கின்றன.

கால்நடைப் பராமரிப்புத்துறை மூலம் கால்நடைகளுக்கு வெக்கை நோய், சப்பை நோய், தொண்டை அடைப்பான், துள்ளு நோய், கோழிக் கழிச்சல், கோமாரி நோய்களுக்கான தடுப்பூசிகள் போடப்பட்டன. இதுவரை 1,25,619 கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

22 நியாய விலைக் கடைகளில் முறை கேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் குறைவாக இருந்ததால் 10 விற்பனையாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மாவட்டத் தொழில் மையம் சார்பில் 106 தொழில் தொடங்கப்பட்டு உள்ளது. கைத்தறி மற்றும் துணி நூல் துறை சார்பில் 129 இயங்காத தறிகள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் அரசுத் தலைமையிட மருத்துவமனையில் ரூ. 3 இலட்சத்து 98 ஆயிரம் மதிப்பில் "அல்ட்ரா சவுண்டு ஸ்கேனர்" கருவி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வயிற்றில் இருக்கும் கல் மற்றும் கட்டிகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கலாம்.

(21-6-89 அன்று நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில், செங்கை அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சமீர் விமால் இ. ஆ. ப. கூறிய தகவல்களிலிருந்து)

# கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம்

"மிக முக்கியமான கோரிக்கையாக - ஆந்திர மாநில வேளாண்மைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் கிருஷ்ண ராவ் அவர்கள், கால்நடைகளுக்கென்று ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது கால்நடைகளுக்கென்று தமிழ்நாட்டில் கல்லூரிகள் சென்னையிலும், நாமக்கல்லிலும் இருக்கின்றன. மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கால்நடை 'ரிசர்ச் சென்டர்கள்' இருக்கின்றன.

"அமைச்சர் சந்திரசேகரன் என்னிடம் பலமுறை கூறியிருக்கிறார். இந்தக் கல்லூரிகளையன்னியில், இந்த ஆராய்ச்சி நிலையங்களையன்னியில், உழவர்களுக்குப் பயிற்சி நிலையங்களை ஆங்காங்கு இந்தக் கால்நடைகளைப் பொறுத்தவரையில் அமைக்க வேண்டும். ஏனென்றால் அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில் அவர்கள் கண்ட அந்தக் கால்நடைகளைத்தான் இன்றும் கண்டு கொண்டிருக்கின்றார்கள். அதிலிருந்து மாற்றமே ஏற்படவில்லை. ஓரளவு முன்னேறியுள்ள நகர்ப்புறங்களிலே மாத்திரம் தான் வேறு இனப்பெருக்கத்தினைச் செய்வதற்கான முறைகள் இன்று கையாளப்படுகின்றன. குக்கிராமப் பகுதிகளில் இன்னும் அந்த முறைகளைச் சரிவரக் கடைப்பிடிக்கவோ, தெரிந்து கொள்ளவோ, கடைப்பிடித்து, அதன்படி நடந்து கொள்ளவோ உழவர்கள் முன்வருவதில்லை. காரணம் அதற்குத் தகுந்த பயிற்சி இல்லை. எனவே, அந்தப் பயிற்சிகளை அவர்களுக்கு அளிக்கும் வகையில் உழவர் பயிற்சி நிலையங்களை ஆங்காங்கு அமைக்க வேண்டுமென்று பலமுறை என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

"நான் அதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கின்றேன். இதுகுறித்து நான் துறையிலே உள்ள அதிகாரிகளிடத்திலே கலந்து பேசியதில் எனக்குக் கிடைத்த விவரங்கள் இந்தக் கால்நடைகளுக்கென்று பல்கலைக் கழகங்கள் உலகத்திலே ஆஸ்திரியா, அங்கேரி, புருனைல், பர்மா, பிரான்ஸ், நார்வே, சோவியத் போன்ற நாடுகளில் இருக்கின்றது. ஆனால், இந்தியாவிலே அப்படிப்பட்ட ஒரு பல்கலைக் கழகம் இல்லை என்பது தெரிந்து கொள்கிறேன்.

"சென்னையிலே உள்ள கல்லூரியில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு போன்றவைகளுக்கான வசதிகளும், அதைத் தவிர ஆராய்ச்சிக்கான பி.எச்.டி. போன்ற பட்டங்கள் பெறுவதற்கான வாய்ப்பு வசதிகளும் கூட இருக்கின்றன. எனவே, அதனைப் பயன்படுத்திக் கொண்டும்-நாமக்கல்லிலே இருக்கின்ற கல்லூரியை இணைத்துக் கொண்டும்-பல்வேறு ரிசர்ச் சென்டர்களை இணைக்கின்ற வகையிலும் புதிதாகத் தொடங்கவிருக்கின்ற உழவர் பயிற்சி நிலையங்களை இணைக்கின்ற வகையிலும் சென்னையிலே கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இந்தப் பல்கலைக் கழகத்தை, பிராணிகளிடத்திலே, கால்நடைகளிடத்திலே அதிக அளவிற்கு அன்பு காட்டிய அறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் தேதியன்று தொடங்குவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

"மற்றும் ஒரு கோரிக்கை 56 கால்நடை மருத்துவமனைகளிலே பணியாற்றுகின்ற கால்நடை உதவி மருத்துவர்களை, கால்நடை மருத்துவர்களாகப் (வெடினரி சர்ஜன்களாக) பதவி உயர்வு தரவேண்டுமென்று கேட்டார்கள். அந்தப் பதவி உயர்வும் தரப்படும். அந்த உயர்வும் "அசிஸ்டண்ட் டைரக்டர்" கிரேடில் தரப்படும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்து—எல்லாக் கோரிக்கைகளையும் இன்றைக்கே நிறைவேற்றிவிட்டால், பிறகு பாராட்டு விழாவிற்கு அழைக்க மாட்டீர்கள் என்பதால், அடுத்த பாராட்டு விழாவிற்கு மற்றக் கோரிக்கைகளை ஒத்தி வைத்து விடை பெறுகின்றேன்!"

***-கால்நடை மருத்துவர் சங்கம் நடத்திய பாராட்டு விழாவில் (20-6-89) மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.***

## மாநில அரசின் சாதனைகளை விளம்பரப்படுத்த...

**"தமிழ்நாடு, கேரளம் போன்ற எதிர்க் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் மாநில அரசு சார்பான வெளியீடுகள் அந்தக் கட்சிகளின் பிரசாரமாகவே உள்ளதாகவும், அப்படி இருக்கையில் மத்திய அரசு மட்டும் எதிர்க்கட்சிகளின் பிரசாரத்திற்கு எப்படி இடமளிக்க முடியும் என்றும் மத்தியத் தகவல் ஒலிபரப்புத் துறைத் துணை அமைச்சர் கிருஷ்ணகுமார் கேட்டுள்ளார். அவரின் இந்த வாதம் பொருளற்றதாகும். இப்போதுள்ள நிலையில் மாநில அரசுகள் தங்களின் சாதனைகளை விளம்பரப்படுத்த ஓரளவுக்குப் பத்திரிகைகளையும் முழுவதுமாக அரசு வெளியீடுகளையுமே சார்ந்து இருக்க வேண்டியுள்ளது. மேலும் மாநில அரசு வெளியீடுகள் செய்திகளைத் திரித்துக் கூறுவதாகவோ, மத்திய ஆளுங்கட்சித் தலைமைக்கு எதிராக இழிவான பிரசாரம் செய்வதாகவோ எப்போதும் புகார் எழுந்தது கிடையாது."**

**'தினமணி' தலையங்கத்திலிருந்து.. (28-6-89)**



# வான் சிறப்பு

பூமியை அன்னை யென்று
போற்றுவோம் நாமெல் லாரும்
பூமிக்கும் அன்னை யாகிப்
புகட்டுவாள் வானப் பாட்டி!

பசியினால் தாய்மு கத்தைப்
பார்த்திடும் சேயைப் போலே
பசையின்றிக் காயும் போதில்
மண்மகள் வானம் பார்ப்பாள்!

முகக்குறி கண்ட அன்னை
முகிலெனும் துகிலை மூடி
மகள்பசி தீரும் மட்டும்
மாரியாம் அமுதம் பெய்வாள்!

மகிழ்வுடன் பால்பு கட்டும்
அன்னையாம் வான்மு கத்தில்
மஞ்சளாய் வெயிலின் தோற்ற
மாட்சிமை வான்சி றப்பே!

வானில் அன்னைமார்பில்
வளைந்துள்ள வயிர மாலை!
காணவும் கூசச் செய்யும்
கண்ணொளி மின்னல் வீச்சு!

தாளமே இடி முழக்கம்,
தாலாட்டு மழையின் சத்தம்!
பாலமு துண்ணும் பூமிப்
பாலிகை இதழோ ரத்தில்,

வழிகின்ற கோடு கள்தாம்
வளந்தரும் நதிக ளாகும்!
குழிகின்ற கன்னம் இங்கே
சுழல்கின்ற ஆற்று வெள்ளம்!

செழுமையை உலகம் காணச்
செய்திடும் பெருமை யெல்லாம்
அழகென்ற கோலம் காட்டிப்
பொழிகின்ற வான்சிறப்பே!

முன்னர்நம் பாட்டன் பாட்டி
முற்றிய காத லாலே
கண்ணுடன் கண்க லந்த
காட்சிகள் கதைக ளெல்லாம்

பண்டைநாள் பார்த்தி ருந்த
படுகிழம் வானப் பாட்டி,
இன்றைய நாளில் கூட
இளமையின் குமரி போலத்

தாரகை பதித்த நீலத்
தாவணி உடுத்தி நின்றும்
பூரண நிலவை நெற்றிப்
பொட்டென இட்டுக் கொண்டும்,

பாரதி-தாசன் போன்ற
பேரரைப் பித்த ராக்கிச்
சீருடன் கவிதை பாடச்
செய்ததும் வான் சிறப்பே!



**கவிஞர் கு. மா. பாலசுப்பிரமணியம்**



**காயிதே மில்லத் மாவட்டம், திண்டுக்கல்லில் நடைபெற்ற விழாவில் மூவ. லூர் ராமாமிர்தம் அம்மான் நினைவு திருமண திட்டத்தின் கீழ் முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு பெண்ணிற்கு ரூ.5000 வழங்குகிறார்.**

# திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் உதயம்

*இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி*

திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டத் தொடக்க விழா *11.6.89* அன்று மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், வெள்ளமெனக் கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் ஆரவாரத்திற்கிடையே மாவட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

விழாவிற்கு செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. பொன். முத்து ராமலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்—

"இந்த விழா-அண்மையில் சட்டப்பேரவையில் நான் அறிவித்தவாறு, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் பெயரால், திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் என்ற பெயர் மாற்றம் மூலம், இந்த மாவட்டத்து மக்களுக்குப் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை இணைப்பதற்கான உறுதி மொழியையும், செயல்படுவதற்கான ஆர்வத்தையும், அக்கறையையும் அனைவரும் பெறுகின்ற விழா ஆகும்.

"இந்த மாவட்டப் பெயர் மாற்றம் குறித்து சில சர்ச்சைகள் எழுந்தது உண்டு. அரசு விழாவில் சர்ச்சைக்கு இடமில்லை. இருந்தாலும் விளக்கத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

ஏற்கெனவே இருந்த மாவட்டத்திற்கு என்னுடைய அருமை நண்பர் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அண்ணா மாவட்டம் என்ற பெயரைச் சூட்டியிருந்தார். அப்பொழுதே எனக்குள்ள மனக்குறை அண்ணா அவர்கள் பிறந்த பூமியான செங்கை மாவட்டத்திற்கு அண்ணா பெயர் சூட்ட வேண்டும் என்பது. அப்போது என்னுடைய கோரிக்கை ஏற்கப்படவில்லை. அண்ணாவின் குடும்பத்தினரும் கூட அதை விரும்பினார்கள். ஆனாலும் வெற்றி கிடைக்கவில்லை. அதை நிறைவேற்றுகின்ற வாய்ப்பு இன்று கிடைத்த பொழுது இந்த மாவட்டத்துக்குத் 'திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்' என்ற பெயரைச் சூட்டி, காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட செங்கல்பட்டு மாவட்டத்துக்கு, 'செங்கை அண்ணா மாவட்டம்' என்ற பெயரைச் சூட்டினோம்.

"காயிதே மில்லத் பெயரை அவர் பிறந்த பூமிக்குச் சூட்ட வேண்டுமென்றால், அது நெல்லையில் உள்ள பேட்டைப் பகுதியில் அவர் பிறந்தார், அங்கேதான் அந்தப் பெயரைச் சூட்ட வேண்டும் என்பது உண்மையான வாதம். ஆனால் அதற்கு முன்பே 'நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்' என்ற பெயர் அங்கே சூட்டப்பட்ட காரணத்தால்— தொடர்புடைய ஒரு பகுதிக்கு அவர் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற காரணத்தால்- எல்லாவற்றிலும் மிகச் சிறந்த தொடர்பு, இல்வாழ்க்கைக்கு ஒரு துணையை ஏற்ற இடமாக காயிதே மில்லத்துக்கு இந்த இடம் அமைந்த காரணத்தால்-இந்தப் பகுதிக்குத் 'திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்' என்று சூட்டப்பட்டுள்ளது.

இது குறித்து சட்டமன்றத்தில் பிரச்சனை எழுந்தபோது சிலர் தங்களது கருத்துக்களை வெளியிட்டனர். காங்கிரஸ் இயக்கத்தை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய அருமைச் சகோதரி ஏ.எஸ். பொன்னம்மாள் கூட இந்த மாவட்டத்திலே பிறந்த சுப்பிரமணிய சிவா பெயரைச் சூட்டியிருக்கலாமே என்று ஒரு ஆதங்கத்தைத் தெரிவித்தார். நான் நீண்ட நாட்களுக்கு முன்பு சொன்னேன். கருணாநிதி நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறாரே என்று அவர் எண்ணக் கூடும்; நாட்களுக்கு முன்பு அல்ல, ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததைக் கூட ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுபவன் நான் என்பதை என்னை உணர்ந்தவர்கள் நன்றாக அறிவார்கள்.

எனவே, சகோதரியாருடைய ஆசையும் நிறைவேற வேண்டும் என்பது எனக்குள்ள ஒரு உணர்வு. சுப்பிரமணிய சிவா விடுதலைப் போராட்டத்தில் சிறையில் இருந்து பயங்கர நோயாளியாக வெளியே வந்தவர். நாடு விடுதலை பெற்றது என்றால், அவர்கள் எல்லாம் சிறைச்சாலைக்குச் சென்ற காரணத்தால் தான், நமக்கெல்லாம் விடுதலை கிடைத்தது. அவர்களுக்கு விடுதலை கிடைத்ததோ இல்லையோ, நமக்கு விடுதலை கிடைக்கப் பாடுபட்டவர்கள் சுப்பிரமணிய சிவா போன்றவர்கள். எனவே, அந்த ஆசையை நிறைவேற்றுகின்ற வகையில், திண்டுக்கல் மாவட்டத்தில் அமையவிருக்கும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குச் 'சுப்பிரமணிய சிவா மாளிகை' என்று பெயர் சூட்டப்படும்.

"இந்துக்களும், முஸ்லீம்களும் சகோதரர்களாக வாழ வேண்டும் என்பதற்கு அடையாளமாக இரண்டு பெயருமே இங்கு அழைக்கப்படும். இது என் வாழ்நாளில் என்னுடைய ஆர்வமாக இருந்து வருகிறது. பெரியார், அண்ணா, காயிதேமில்லத், காமராஜ் ஆகியோர் தமிழகத்தில் அமைதி நிலவ வேண்டும், வகுப்புக் கலவரங்கள் உருவாகக் கூடாது. மதபேதங்கள்-அதன் காரணமாக அமளிகள்-உருவாகக் கூடாது என்ற கருத்துக்களையும், அந்தக் கருத்துக்களுக்கு ஏற்ப இந்த இரு பெயரையும் சூட்டியிருக்கிறேன் என்பதையும் நினைவுக்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

"இங்கு, பல்வேறு திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன. அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. கண் சிகிச்சை முகாம் முன்பு நான் முதல்வராக இருந்தபோது துவக்கப்பட்டது. இலட்சக் கணக்கானவர்கள் பயன்பெற்றனர். இடையில் அதன் விரிவாக்கம் தடைப்பட்டது மட்டுமல்ல செயலாக்கமும் குன்றிவிட்ட காரணத்தால் இன்றைக்கு மீண்டும் கண்ணொளி வழங்கும் திட்டம் அரசு நிர்ப்பந்தத்தின்பேரில் நடந்து வருகிறது.

"மூவலூர் ராமாமிர்தத்தம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் எட்டாவது வரை படித்த ஏழை மாணவிகளுக்குத் திருமண உதவி அளிக்க 5 ஆயிரம் ரூபாய் வீதம் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டது. இந்தத் திட்டம் முதலாவதாக இங்கு ஆரம்பமாகிறது.

"தி.மு.க. ஆட்சியில் விதவை மறுமண திட்டம் ஒன்றை தொடங்கினோம். இளம் விதவைகள் வாழ்க்கையில் வீணாகி வாடி வதங்கிவிடக் கூடாது என்றுதான் இத்திட்டம் துவங்கப்பட்டது. 'கோரிக்கையற்று கிடக்கு தண்ணே இங்கு வேரில் பழுத்த பலா' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார். விதவை என்ற சொல்லுக்கே புள்ளி (பொட்டு) கிடையாது என ஒரு கவிதையில் படித்தேன். விதவை என்பது வடமொழிச் சொல். அதை 'கைம்பெண்' என்றால் ஒரு பொட்டிற்கு இரண்டு பொட்டு வைக்கலாம் அல்லவா என்று எண்ணி, பொட்டும், பூவும், மஞ்சளும் தரவேண்டும், விதவைகளுக்கு வாழ்வு தர வேண்டும் என்பதற்காக விதவைகள் மறுமணத்துக்கு 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேன்.

"ஆனால் எனக்கு ஒரு சந்தேகம், சிலர் விதவைகளை ஏமாற்றித் திருமணம் செய்வதாகச் சொல்லி ரூ.5 ஆயிரம் வாங்கி ஏமாற்றிவிட்டால் என்ன செய்வது என்று, ரூ.5 ஆயிரம் தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படுகிறது. 4,5 ஆண்டுகளுக்குப் பிறகு இதை ரூ.10 ஆயிரம் ஆகப்பெற முடியும் என்பதற்காக ஜாக்கிரதையாக வழங்கி இருக்கிறோம்.

பல்வேறு நலத் திட்டங்கள் காங்கிரஸ் ஆட்சியில் கூட ஏழை எளியவர்களுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள். இன்னொரு ஆட்சி கொண்டு வந்த திட்டங்கள் என்பதற்காகக் கைவிட்டு விடாமல் அவற்றைத் தொடர் திட்டங்களாக்கி உதவிகளை வழங்கி இருக்கிறோம்.

விழாவில் செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. பொன். முத்து ராமலிங்கம் அவர்கள் பேசியதாவது:

"ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு களஞ்சியமும், கஜானாவும் காலியாக இருந்த போதும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் 100 நாட்களுக்குள் 80 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம். வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் மக்களுக்கு அரசுத் திட்டத்தின் பயன்கள் போய்ச் சேரவேண்டும். இதுதான் அரசின் கொள்கை என்பதை முதல்வர் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காகச் சமூக நலத் திட்டங்களை முதல்வர் அறிவித்து வருகிறார். அரசு அலுவலர்கள் கனவில்கூட எண்ணிப் பார்க்க முடியாத அளவில் *400* கோடி ரூபாய்க்கு ஊதிய உயர்வினை அளித்துள்ளார்கள் என்று அரசு அலுவலர்களே என்னிடம் கூறினார்கள். பெண்ணின் விடுதலையின் மகத்தான ஆரம்பம்தான், பெண்களுக்குச் சொத்துரிமையில் பங்கு என்ற சட்டமாகும். இப்படி பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம்."

விழாவில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன், மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகரன் மற்றும் பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிவேல், நத்தம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. மூக்கையன், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஏ. தங்கராஜ், ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ. பெரியசாமி, நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திருமதி. பொன்னம்மாள் ஆகியோர் பேசினார்கள்.

வத்தலக்குண்டு கிராமத்தில் ரூ.17 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி, அம்பாத்துரையில் 6 இலட்சத்து 24 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி, ஸ்ரீராமபுரம் பேரூராட்சியில் 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 14 அங்காடிக் கட்டடங்கள், வேடசந்தூர் குடகனாற்றின் குறுக்கே 19 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட பாலம், வத்தலக்குண்டில் மஞ்சளாற்றின் குறுக்கே ரூ.22 இலட்சம் செலவில் கட்டப்பட்ட பாலம், பாப்பம்பட்டி, குப்பாம்காளையம் கிராமங்களுக்கான ரூ.26 இலட்சத்து 23 ஆயிரம் மதிப்புள்ள கூட்டு குடிநீர் திட்டம், பசுபதிபுதூர் கிராமத்தில் ரூ.24 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மேல்நிலைத் தொட்டி, ரூ.25 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கீரனூர் குடிநீர் வினியோகத் திட்டம், ரூ.35 இலட்சம் செலவிலான வேடசந்தூர் குடிநீர் வழங்கும் துணைத் திட்டம் ஆகியவைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்.

**கே.பி. நல்லதம்பி,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல்

## தருமபுரி மாவட்டத்தில்:





தருமபுரி மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணி களை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 22.6.89 அன்று பார்வையிட்டார்.

# மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்த மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள்!

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், தருமபுரி மாவட்டத்தில் 21.6.89, 22.6.89 ஆகிய இரு நாட்கள் சுற்றுப் பயணம் செய்தார். சென்ற இடமெல்லாம் பல்லாயிரக்கணக்கான மக்கள் உற்சாகத் துடன் வரவேற்றார்கள்.

அப்போது பல்வேறு நலத் திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார்.

"மாலை மரியாதைகள், மனம் நிறைந்த நன்றிகள், பாராட்டுக்கள் இவை எல்லா வற்றையும் விட, அரசு தீட்டும் மக்கள் நலத் திட்டங்கள் அந்த மக்களைச் சென்றடைய ஒத்துழைப்புத் தருவதே உயர்ந்தது" என்று கூறி, 4500 பேருக்கு 70 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள உதவிகளை வழங்கினார், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

தருமபுரியில் நடைபெற்ற (21.6.89) அரசு நல்வாழ்வுத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"இந்த மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பெரும் முயற்சி யுடன் அரசு அலுவலாளர்களின் நல்ல ஒத்துழைப்புடன் சட்டமன்ற உறுப்பினர் களின் ஆக்கப்பூர்வமான கருத்துக்களைப் பெற்று அரசின் சார்பில் நல்வாழ்வுத் திட்டங்கள் பலவற்றை இன்றைக்குத் தொடங்கி வைத்தது மாத்திரமல்லாமல், ஆதரவற்ற வர்கள், ஏழை எளியோர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் வாழ்வில் ஓரள வாவது நலம் பெறச் சில உதவிகளை இங்கே வழங்கியிருக்கின்றோம்.

"அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற உதவிகள், அடையாளமாகச் சில பேருக்கு உங்கள் முன்னிலையிலே வழங்கப்பட்டிருக் கின்றன. பலர், அதிகாரிகள் வாயிலாகத் தொடர்ந்து அந்த உதவிகளைப் பெற இருக் கின்றீர்கள். இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் பயனடையக் கூடிய நபர்கள் ஏறத்தாழ 4500—க்கு மேற்பட்டவர்கள். பயனின் மதிப்பு ஏறத்தாழ எழுபது லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையாகும்.

"இந்த வீட்டு மனைப்பட்டா ஒருவர், இருவருக்கு அடையாளமாக இங்குத் தரப்





மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 21.6.89 அன்று தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, புதிய பேருந்து வழித்தடங்களைத் துவக்கி வைத்தார்.



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின் கீழ், ஒரு ஏழைப் பெண்ணுக்கு, ரூ.5 ஆயிரத்துக்கான காசோலையை வழங்கினார்.



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், கருவுற்ற பெண்ணுக்கு நிதியுதவி வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 21.6.89 அன்று தருமபுரி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு நலத்திட்டங்களைத் துவக்கி வைத்து நலிவுற்றோர்க்கு இலவசக் கருவிகள் மற்றும் நிதி உதவி வழங்கினார்.



பட்டது. ஆனால் 1573 பேர் அந்தப் பட்டாக்களைத் தொடர்ந்து இந்த நிகழ்ச்சியின் மூலம் பெறவிருக்கின்றார்கள். நிலமற்ற ஏழைகளுக்கு நிலப் பட்டா 169 பேருக்குத் தரப்படுகிறது. இதில் ஒருவர் இருவருக்குத் தான் மேடையில் தரப்பட்டது. மற்றவர்கள் தொடர்ந்து பெறவிருக்கிறார்கள். அதைப் போல முதியோர் உதவித்தொகை இங்கு இரண்டு மூன்று பேருக்குத் தரப்பட்டது. 258 பேர் தொடர்ந்து பெறவிருக்கிறார்கள். விதவைகளுக்கு இங்கே ஒருவர் இருவருக்குத் தான் நிதி வழங்கப்பட்டது. 96 விதவைத் தாய்மார்கள் தொடர்ந்து பெறவிருக்கிறார்கள்.

"அதைப்போல விவசாயக் கூலிகள், உடல் ஊனமுற்றோர், கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்றவர்கள், காப்பீட்டுத் தொகை பெறக் கூடியவர்கள், மூன்று சக்கர வண்டி, இலவசத் தையல் இயந்திரங்கள், ஊனமுற்றோருக்கு வங்கிக் கடன், மகளிர் சுயவேலை வாய்ப்புத் திட்டம், பார்வையற்றவர்களுக்குச் சீருடை, குழந்தைகளுக்கு இலவசக் காது ஒலிக் கருவிகள், கண்ணொளி வழங்குகிற திட்டத்தோடு இலவச மூக்குக் கண்ணாடி வழங்குகிற திட்டம், நலிவுற்ற நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்குகிற நிகழ்ச்சி, தொழில் தொடங்க வங்கிக் கடன் என்று, நாலாயிரத்து ஐநூறு பேர் இந்த நிகழ்ச்சியிலே பயன் பெறுகிறார்கள்.

## ஏழை எளியோர் 4500 பேருக்கு ரூ.70 இலட்சம் உதவிகள்

"இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பெண்களின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டு அவர்களுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இங்கே மேடையிலே கண்டீர்கள். மூவலூர் இராமாமிர்தத் தம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் இவைகள் இங்கே நிறைவேற்றப்பட்ட காட்சியை நீங்கள் கண்டீர்கள்.

"இந்த நான்கைந்து மாதத்திலே நாங்கள் செய்திருக்கின்ற சாதனைகள், இனி செய்ய வேண்டிய சாதனைகளுக்காக எழுதப்படுகின்ற முன்னுரையே தவிர, இதுவே முடிவுரை அல்ல! இன்னும் ஏராளமான காரியங்களை அரசின் சார்பில் செய்ய வேண்டியிருக்கிறது".



தருமபுரி மாவட்டத்தில் வறட்சி நிவராணப் பணிகளைப் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், அங்குப் பணிபுரிபவர்களது குறைகளைக் கேட்டறிந்தார். (22.6.89).

## வறட்சி நிவாரண்ப் பணிகளைப் பார்வையிட்டார்

தருமபுரி மாவட்டத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் கொளுத்தும் வெயிலில் வறட்சி நிவரணப் பணிகளை 22.6.89 அன்று பார்வையிட்டார்.

முதல்வர் கலைஞர் அவர்கள் தருமபுரி ஒன்றியம் செம்மாண்டக் குப்பத்தில் ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வி.சி.சி. சாலை-மாரவாடிச் சாலையில் அமைக்கப்பட்டு வரும் மூன்று பால வேலைகளைப் பார்வையிட்டார். அப்போது அங்கு வேலை பார்த்து வந்தவர்களிடம் எவ்வளவு கூலி தரப்படுகிறது, எத்தனை நாட்களாக வேலை பார்த்து வருகிறீர்கள் என்பன வற்றைக் கேட்டறிந்தார்.

அடுத்து, முதல்வர் கலைஞர் அவர்கள் தருமபுரி ஒன்றியம் நாய்க்கனஹள்ளியில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் முப்பதாயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் நீர்ப்பெருக்குத் திட்டக் கட்டடத் தடுப்புச் சுவர் மற்றும் ரீவெட்மென்ட் கட்டுதல் பணிகளைப் பார்வையிட்டார். இத்திட்டம் 1-6-89-இல் தொடங்கி, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 15-7-89-இல் இத்திட்டப் பணிகள் முடிவடைகின்றன.

அடுத்து, அரூர் ஒன்றியம் செல்வசமுத்திரத்தில் ஒரு இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் கீரைப்பட்டி-அச்சுவாடி இணைப்புச் சாலைப் பணிகளைப் பார்வையிட்டார். அப்போது அங்கு வேலை பார்த்து வந்தவர்களிடம் வேலை விவரங்கள், கூலி போன்றவைகளைக் கேட்டறிந்தார்.



மலர் கொண்டு மாலை தொடுத்தலிலே கைத் திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், கைத் திறன் முழுவதும் காட்டி, காகிதப் பூமாலை தொடுத்தால், பயன் என்ன? மாலைக்கு முதற் பொருள் மணமுள்ள மலர்; அதுபோலப் பேச்சுக்கு முதற்பொருள் சுவையும் பயனுமுள்ள கருத்துக்கள்.

மகிழ்ச்சி ஊட்டுவது, புதிய எண்ணங்களைத் தூவுவது, பழைய கருத்துகளை மாற்றுவது, பண்பு தருவது, செயல் புரியும் திறன் அளிப்பது என்பன போன்ற பயன்களைப் பெறுவதற்கே படிக்கிறோம். ஒவ்வொரு வகைப் புத்தகமும் ஒவ்வொரு பயனை ஒவ்வோர் அளவுக்குத் தருவதுடன், நமது மனத்தை உருவாக்க உதவுகின்றன.

"குடல் புழுக்களை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பான்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!"




தன்னிகரற்ற

**பான்மின்த்***

(மொரண்டல் ஸிட்ரேட்)

**குடற் புழுக்களை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.**

"பாழும் குடல் புழுக்களால் — அம்மம்ம, நான் பட்ட பாடு : பலவீனம், பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பான்மின்த் தான் பலிச்சுது —அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!"

**பால் இழப்பே இல்லை.**

"அருமையான சேதி — எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும் சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பான்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பான்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால் மனிதருக்குக் கெடுதலே இல்லை — நூற்றுக்கு 100 பத்திரமானது."

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

"என் தங்கச்சி — பிள்ளைத் தாய்ச்சி — அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பான்மின்த் சினைக்காலம் முழுக்க எந்த கெடுதலும் செய்யலை; ஏன் பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆ! ஆறுதலான சுகம்!"

**வசதி மிக்கதும் கூட.**

சாப்பிட வெகு இலகு பான்மின்த். கண்டி விடுங்க ஒரு போலஸ் (பெரிய மாத்திரை) — எங்கமாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு. உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு சின்ன மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!"

பால் இழப்பே இராது
பான்மின்த்*
விலையை ஈடு செய்வது!

**கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் : சிறந்த மருந்து**

**பான்மின்த்***

குடற் புழுக்களைக் கொல்லும், ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 4 2217 TM

* யு எஸ் ஏ ஃபைஸர் நிறுவன டிரேடு மார்க்

**pfizer**

மேலும் விவரமறிய எழுதுவீர் இம் முகவரிக்கு
ஃபைஸர் லிட்., பி.ஒ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.




# புதிய நீர்த்தேக்கத் திட்டங்கள்



திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலுள்ள அடவி நயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 25.80 கோடி செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது. இந்நீர்த்தேக்கத் திட்டம் செங் கோட்டை வட்டம் மேக்கரைக் கிராமத்தில் அனுமா நதியின் குறுக்கே மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் கட்டப்பட இருக்கிறது. 174 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட இத்திட்டம் செயல் படுவதன் மூலம் 5075 மெட்ரிக் டன் கூடுதல் உணவு உற்பத்தி செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் கரிசல்குளம், பண் பொழி, இளங்காடு அம்புளி, நைனாகரம், இலத்தூர் நெடுவயல், வடகரை, கீழப் பிடாகை, வடகரை மேலபிடாகை, குத்துக் கல்வலசை, ஆய்க்குடி மற்றும் அச்சன்புதூர் கிராமங்களைச் சார்ந்த 9 அணைக்கட்டுகளிலுள்ள 6,525 ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெற உள்ளது.

மழை மற்றும் வெள்ளம் ஏற்படும் பொழுது மிக அதிக அளவிலான நீர் எவ் விதத்திலும் பயன்படாமல் வீணாகின்ற நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த நீர்த்தேக்கத்தைக் கட்டி அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற் கான நில ஆர்ஜிதம் போன்ற பூர்வாங்கப் பணிகள் யாவும் முடிவுற்ற நிலையில் உள்ளன.

## உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம்

ரூ. 15 கோடி செலவில் உள்ளார் நீர்த்தேக்கத் திட்டம் உருவாக்கத் திட்ட மிடப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப் பப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள சிவகிரி வட்டம் திருமலாபுரம் கிராமத்திற்கு அருகில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவா ரத்தில் பளயார்-வானமாலை ஆறுகளின் குறுக்கே தலை அணைக்குச் சற்று மேலே நீர்த்தேக்கம் கட்டப்பட இருக்கிறது. 245 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட இத்திட்டம் செயல்படத் தொடங்கும் பொழுது, இப்பகுதியைச் சார்ந்த ராயகிரி, சிவகிரி, தென்மலை, கரிவலம் வந்த நல்லூர், திரு மலாபுரம், நாரணபுரம். கோட்டையூர், சிந்தாமணிப்பேரி, கூடலூர், இராமநாத புரம், பனையூர் ஆகிய 11 கிராமங்களைச் சேர்ந்த 39 கண்மாய்களிலுள்ள 11 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 400 மீட்டர் நீளத்தில் இவ்வணை கட்டப்பட உள்ளது.

இவ்விரு திட்டங்களையும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு, அரசு தலைமைக் கொறடா திரு. கா.மு. கதிரவன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வை. கோபால்சாமி ஆகியோர் நேரில் பார்வை யிட்டனர்.

ரூ. 40 கோடி செலவிலான இவ்விரு திட்டங்களும் இவ்வாண்டிற்குள் செயல்படுத் தப்பட அனைத்து முயற்சிகளும் மேற் கொள்ளப்படும் என, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பின்னர் தெரிவித்தார்.

மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்ட பச்சையாறு திட்டமும் ரூ. 10 கோடி செலவில் உறுதியாக நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்தார். கேரள அரசின் எல்லையிலிருந்து நமக்குப் பயன்தரும் பழுத டைந்துள்ள செண்பகவல்லி அணைத்திட் டத்தைப் புதுப்பிக்க ஏற்கெனவே கேரள அர சிற்குத் தமிழக அரசு ரூ. 5 இலட்சம் வழங் கியுள்ளது. இத்திட்டத்தைப் புதுப்பிக்க கேரள அரசுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது எனவும் தெரிவித்தார்.

ஐரோப்பியப் பொருளாதாரத் திட்ட உதவித் திட்டத்தின் கீழ் குளங்களைச் சீரமைப்பு செய்யும் பணியின் ஆய்வு வேலைகள் சங்கரன்கோவில் வட்டத்தில் 7 கிராமங் களிலும், அம்பாசமுத்திரம் வட்டத்தில் 4 கிராமங்களிலும் நாங்குனேரி வட்டத்தில் 12 கிராமங்களிலும் தற்போது நடைபெற்று வரு வதாகவும் அமைச்சர் அவர்கள் தெரி வித்தார்.


தொகுப்பு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி.

# இலக்கிய விருந்து:



## இலக்கியத்தில் தன்னம்பிக்கை ஊட்டும் செய்திகள்

**யா**னைக்குத் தும்பிக்கை போன்று மாந்தர்க்கு நம்பிக்கை இன்றியமையாதது. "தன் கையே தனக்குதவி" என்னும் பழமொழியும் இச் செய்தியினை உணர்த்துகிறது. கவலை நீங்கவும், உவகை ஓங்கவும் நம்பிக்கையே பெரிதும் துணை புரியும். தன்னம்பிக்கை, இறை நம்பிக்கை, பிறர் நம்பிக்கை என நம்பிக்கை மூவகையாகும். இறைவனிடம் நம்பிக்கை கொள்ளவும் பிறரிடம் நம்பிக்கை வைக்கவும், தன்னம்பிக்கையே அடிப் படைத் தேவை. ஆன்றோர் வாழ்விலும், வர லாற்று ஏடுகளிலும், இலக்கியக் கருவூலங்களிலும், மாந்தர்க்குத் தன்னம்பிக்கை ஊட்டும் செய்திகள் ஒளியுடன் மிளிர்கின்றன.

**வாழ்வியல் கூறுகள்:** "நான் நிற்பதற்கும், எனது நெம்பு கோலை நிறுத்துவதற்கும், ஓர் இடம் தாருங்கள். நான் இந்த உலகத்தையே நகர்த்திக் காட்டுகிறேன்" என்றாராம் கிரேக்க அறிவியல் அறிஞர் ஆர்க்கிமிடீசு. தன்னம்பிக்கை நிறைந்த இத்தாலிய மாவீரன் மாசினி, "இளைஞர்களை என்னிடம் வரவிடுங்கள்; இப்பூவுலகையே தேவுலகாக மாற்றிக் காட்டு கிறேன்" என்பாராம். பிரான்சு நாட்டு பிர டெரிக்கு ஓசன்னாம் ஐந்து இளைஞருடன் இணைந்து உருவாக்கிய வின்சென்று தே பால் மன்றம் இன்று உலகெங்கும் நூற்றுப் பதினேழு நாடுகளில் நூறாயிரக்கணக்கான ஏழை எளி யோர்க்கு வாழ்க்கைக்கு நம்பிக்கை தந்து உறுதுணை நல்கி வருகிறது. இழுவை (அரப்பர்) மரத்திலிருந்து வடியும் பாலைப் பயன்படுத்த சார்லசு குட்டியர் பதினோராண்டளவாகத் தன்னம்பிக்கை தளராமல் மேற்கொண்ட முயற்சி பெரிய வெற்றியினை வழங்கியுள்ளது. வளரும் குழந்தையின் தசைநார்த் திரட்சியிலே ஒலிம்பிய ஓட்டப் பந்தய வீரனின் ஆற்றலை உய்த்துணரலாம். வருங்கால இந்தியாவின் வாழ்வு வகுப்பறைகளில்தாம் உருவாகிறது என்று கோத்தாரிக் கல்விக்குழு கூறியது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

**மூவேந்தரின் பெருவாழ்வு:** பழந்தமிழ் இலக்கியங்கள் சேர சோழ பாண்டியர்தம் பெரு வீரத்தையும், முயற்சி மேம்பாட்டையும், தன்னம் பிக்கைத் திறத்தையும் தெளிவுறுத்துகின்றன. பறக்கும் கோட்டையுடன் பயமுறுத்தி வந்த பகைவனைப் புறங்கண்ட பெருவீரனே "தூங் கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்" என்று பாராட்டப்படும் சோழ வேந்தனாவான். பத்துப்பாட்டுள் ஒன்றான சிறுபாணாற்றுப் படை,

> "ஓங்கெயில் கதவம் உருமுச்சுவல் சொறியும்
> தூங்கெயில் எறிந்த தொடிவிளங்கு தடக்கை
> நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பியன்"

என்று புகழ்ந்து போற்றும் இச் சோழன் பற்றிப் புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பழமொழி ஆகிய பல்வேறு இலக்கியங்கள் தொடர்ந்து பறைசாற்றியுள்ளன. சேர வேந்தன் ஒருவன் முடிசூட்டவிருந்த வேளையில் மணி மகுடம் மறைத்து வைக்கப்பட்டதாம்! அயராது செயலாற்றும் ஆண்மையாளனாம் அவன், களங் காய்களையே நாரால் தொடுத்து முடிசூடிக் கொண்டான் என்று களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரல் என்னும் அச்சேரன் குறித்துப் பதிற்றுப்பத்து வாயிலாக அறிய முடிகிறது.

பதினாறு அகவை கொண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் மீது பகைமை பாராட்டிப் பேரரசர் இருவரும், சிற்றரசர் ஐவருமாக எழுவர் போரிட வந்தபோது அனைவரையும் ஒருசேர வீழ்த்தி வாகை சூடியவனே தலையாலங்கானத் துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் என்னும் பேர் பெற்றான். தன்னம் பிக்கையின் சின்னங்களாகப் பேராற்றல் வாய்ந்த பெரியோர் பலர் உலக வரலாற்று ஏடுகளில் நின்று நிலவுகின்றனர்.

**வான்புகழ் கொண்ட வள்ளுவம்:** வையத் துள் வாழ்வாங்கு வாழ வழி மொழியும் திருக்குறள் தன்னம்பிக்கையினை முயற்சி என்னும் பெயரால் குறிப்பிடுகிறது, இம்முயற்சி யினை மன முயற்சி, மெய்ம்முயற்சி என இரு கூறுகளாகப் பகுக்கலாம், மனமுயற்சி ஊக்க முடைமை எனவும், மெய்ம்முயற்சி ஆள் வினை உடைமை எனவும் அமைந்துள்ளன என்பர் புலவர் குழந்தை. உடைமைகள் பலவாகவும், செல்வங்கள் பலவாகவும் விளங்கினாலும் ஊக்கம் உடைமையே வாழ்வின் அடிப்படை யாம். உள்ளம் தளராது வினைசெய்யும் கிளர்ச்சி உடையவராக விளங்குவோர் என்றும் புகழ்பெறுவர். "உடையர் எனப்படுவது ஊக் கம்" (591) என்பது வள்ளுவக் கொள்கை; அசைவிலா ஊக்கம் உடையவனிடம் திருமகள் வழிகேட்டுச் செல்வாள் என விளம்புகிறார் திருவள்ளுவர் (594), பொறிபுலன்கள் பழு தானாலும் ஆள்வினை உடையோராக மானிடர் வாழ்ந்திட வற்புறுத்துகிறார் திருவள்ளுவர்.

> "பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
> ஆள்வினை இன்மை பழி" (618)

உறுப்பறையாகவும், புலன்கள் பல குறைபாடு டையவையாகவும் அமைந்த போதும், தன்னம் பிக்கை நிறைந்த எலன் கெல்லர், தம் வாழ் நாளில் பத்து நூல்கள் எழுதியதோடு பார்வை யற்றோருக்கு விழுமிய தன்னம்பிக்கையூட்டி யுள்ளார். பெருவலிமை கொண்டதாகப் பேசப்படும் ஊழ்வினையினையும் புறமுதுகு காட்டி ஓடச் செய்யும் ஆற்றல் "உலைவின்றித் தாழாது உஞற்றும்" தன்னம்பிக்கை கொள்வோரி டம் உள்ளது என்று தெளிவுறுத்தியுள்ளார் திருவள்ளுவர் (620). துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும்— அடுக்கடுக்காகத் தோன்றினாலும்- தன்னம்பிக்கை இழவாதவனே "அழிவிலான்" ஆவான்; அவன் முன்னர் வரும் இடுக்கண்கள் துன்பப்படும் (625). குடும்பச் சிறப்பையும் மன்பதையின் மாண்பையும் நிலைநிறுத்த விழைந்து உழைத்திடும் தன்னம்பிக்கையாளனுக் குத் தெய்வமும் வேட்டியை வரிந்துகட்டிக் கொண்டு ஏவல்புரிய விரைந்தோடி வரும் என்பர் திருவள்ளுவர் (1023).

**தன்னம்பிக்கையும் பெருமிதமும்:** தன் னம்பிக்கை மிகுந்தவர் பெருமிதம் நிறைந்தவர் ஆவர். கற்ற கல்வியாலும், பெற்ற வெற்றியாலும், ஈட்டிய புகழாலும், வழங்கும் வண்மையாலும், ஒருவனுக்குப் பெருமிதம் தோன்றும் என்று எடுத்தியம்புவர் தொல்காப்பியர்.

> "கல்வி தறுகண் இசை கொடையெனச்
> சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"



டாக்டர் பா. வளன் அரசு,
தமிழ்ப்பேராசிரியர், தூய யோவான் கல்லூரி.
பாளையங்கோட்டை



# செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதனை அனுப்பலாம்!

செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றும் 'போபோஸ்' (Phobos) என்னும் துணைக் கோளுக்குச் சுமார் 14 ஆண்டுகளில், அதாவது 2003-ஆம் ஆண்டில் மனிதனை அனுப்பி வைப்பது சாத்தியமாகலாம்.

கி.பி. 2007-ஆம் ஆண்டில் செவ்வாய்க் கிரகத்திலேயே மனிதன் காலடி எடுத்து வைக்க முடியலாம்; 2005-ஆம் ஆண்டில் சந்திரனில் தளம் ஒன்று உருவாகி விடலாம். இந்தத் தளத்தைப் பயன்படுத்தி, 2015-இல் செவ்வாய்க் கிரகத்திலும் தளம் ஒன்றை அமைத்து விடலாம்.

அமெரிக்க விண்வெளி நிறுவனமான 'நாஸா' வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில், இந்த எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

''பூமியின் எல்லைக்கு அப்பால் சூரியமண்டலம் குறித்து 21-ஆம் நூற்றாண்டில் மனிதனின் ஆய்வுகள்'' என்பது இந்த அறிக்கையின் பெயராகும். நாஸா நிறுவனத்தின் விண்வெளி ஆய்வுத்துறை இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறது.

''நமது அடுத்த தலைமுறையினரைச் சந்திரனுக்கும், செவ்வாய்க் கிரகத்துக்கும் அனுப்பி வைப்பதற்குத் தேவையான எல்லா வசதிகளும் திறன்களும் அடுத்துவரும் ஆண்டுகளில் ஏற்பட்டுவிடும்'' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார், நாஸாவின் விண்வெளி ஆய்வுத்துறையின் தலைவரான ஜான் ஆரோன்.

பூமிக்கு அப்பாலுள்ள இதர கிரகங்களை ஆராய்வது பற்றி நாஸாவின் அறிக்கை இரு யோசனைகளைத் தெரிவிக்கிறது. இதர கிரகங்களுக்கு மனிதனை அனுப்பி ஆராய்வது, அந்தக் கிரகங்களில் ''அறிவியல் தளங்கள்'' அமைப்பது ஆகியவையே அத்திட்டங்கள்.

வேறு கிரகங்களுக்கு மனிதனை அனுப்பும் திட்டத்தின் கீழ் இரு யோசனைகள் கூறப்பட்டுள்ளன. செவ்வாய்க் கிரகத்துக்கு நேரடியாக மனிதனை அனுப்பி வைப்பது, செவ்வாயின் துணைக்கோளான போபோஸில் ஆய்வுகளை மேற்கொள்வது ஆகியவையே இவை.

''சந்திரனில் நிறையீர்ப்புச் சக்தி மிகவும் குறைவு: வளங்களோ அதிகம்; பூமியிலிருந்து மூன்றே நாட்களுக்குள் எட்டி விடக்கூடிய வகையில், மிகவும் வசதியான இடத்தில் சந்திரன் அமைந்துள்ளது. அதன் மறுபுறத்திலே அறிவியல் தளம் ஒன்றை அமைத்தால், தொலை தூரக் கிரகங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான அருமையான இடமாக அது அமையும். நமது சூரியமண்டலம் பற்றியும், பூமியைப் பற்றியும், பிரபஞ்சத்தைப் பற்றியும் இன்னமும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான முக்கிய தளமாகவும் அது விளங்கும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

பெருமையாயினும் சிறுமையாயினும் அவரவர் தம் செயற்பாடுகளே உரைகல்லாகும். செருக்கு வேறு; பெருமிதம் வேறு என்பது தெளிவு.

**குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம்:** திருமலை மன்னருக்குத் திருக்குறள் வாயிலாக அறம் கூற வந்த குமரகுருபரர் . மன்னரின் வேண்டுதலுக்கு ஏற்ப நீதிநெறி விளக்கம் எழுதினார் என்பர். முயற்சியின் தேவையினை அவர் பல பாக்களுள் மொழிந்துள்ளார் எனினும், அவற்றுள் மூன்று சிறப்பாகக் குறிக்கத் தக்கவை (48,50,52). முடிவுறாதன போல் தோன்றுபவையும் முடியக் கூடியவையே. உலையா முயற்சியைப் பற்றுக் கோடாகக் கொள்வோர் ஊழின் வலிமையும் வெல்லலாம் எனக்கூறி, எமனை மார்க்கண்டேயர் வென்ற செய்தியைச் சுட்டுவர். முயற்சியுடையார் முழு வெற்றி பெறுவார். தன்னம்பிக்கையுடன் தொடர்ந்து முயல்வோர் இயல்பினையும் விளம்புவர்:

> ''மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயி னார்'' (52)

**இருபதாம் நூற்றாண்டுப் பாவலர்:** இருபதாம் நூற்றாண்டுப் பாவலராம் பாட்டுக்கொரு புலவர் பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், பண்ணரசன் கண்ணதாசன் போன்றார் தம் எழுத்தோவியங்களில் தன்னம்பிக்கையூட்டும் எண்ணங்களைப் போற்றத்தக்க வண்ணம் வழங்கியுள்ளனர். ''நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல், இமைப்பொழுதும் சோரா திருத்தல்'' என்று தன்னம்பிக்கையும் இறை நம்பிக்கையும் கொண்டு செயலாற்றியவர் சுப்பிரமணிய பாரதியார், ''வேண்டுமடி எப்போதும் விடுதலையே!'' என்று வீறுடன் பாடியவர்,

> ''இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட் டாலும்
> பதந்திரு இரண்டும் மாறிப் பழிமிகுந் திழிவுற் றாலும்
> விதந்தரு கோடி இன்னல் விளைந்தெனை அழித்திட் டாலும்
> சுதந்திர தேவி நின்னைத் தொழுதிடல் மறக்கி லேனே''

என்று தன்னம்பிக்கையுடன் இந்திய மக்கள் அனைவரையும் எழுச்சி பெறத் தூண்டி விடுதலை பெற்றிட வழி வகுத்துள்ளார். பாவேந்தர் பாரதிதாசன், ''புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட போரிடும் உலகினை வேரொடு சாய்ப்போம்!'' என்று புரட்சி முழக்கமிட்டார். ''நம்பினை புகலினை தன்னிருள், என்றே, சிம்புட் பறவையே, சிறகை விரி, எழு'' என்று இளையோருக்கு அறைகூவல் விடுத்துத் தன்னம்பிக்கை தந்தார், ''இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால் துன்பங்கள் நீங்கும், சுகம் வரும், நெஞ்சினில் தூய்மை உண்டாகிடும்'' என்று எடுத்தோதியுள்ளார். பண்ணரசன் கண்ணதாசன் நட்புறவு பாராட்டிய சீனநாடு நயவஞ்சமாகப் பாரதத்தின் மீது படையெடுத்த போது, ''எழுகவே, எழுகவே, ஏழிரண்டு வயது கொண்ட இளைய பாரதம் எழுகவே!'' எனத் தன்னம்பிக்கை யூட்டி, நாட்டு மக்கள் அனைவரையும் ஓரணியில் சேர்ந்து செயலாற்றத் தூண்டினார்.

> ''மேருவென்ற மலையின்மீது ஏறிவந்த சீனரை
> நேருவென்ற மலையின்மீது ஏறிநின்று சாடுவோம்''

என்று வீரப் பண் பாடிய பண்ணரசன் அவர்கள்,

> ''சீனமல்ல வேறு எந்தத் தேசமேனும் எங்களை
> ஈனமாக்க முயலுமாயின் ஊனமாக்கி ஓட்டுவோம்!''

என்று முழங்கியது இன்றும் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தன்னம்பிக்கையினையும் தெளிந்த நல்லறிவினையும் தோளிலே துணிவினையும் ஊட்டியுள்ளது கருதத்தக்கது.





## கண்ணியத்துக்குரிய
# காயிதே மில்லத்

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பேட்டை என்னும் பகுதியில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார் மியாகான் ராவுத்தர். அரபி, பார்ஸி, உருது, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை அறிந்த பன்மொழிப் புலவராக விளங்கிய அவர், திருவாங்கூர் மன்னர் குடும்பத்தவர்களுக்கு அரிய ஆடைகளை விற்பனை செய்யும் வணிகராகத் திகழ்ந்தார். முன்னேற்றக் கருத்துகளுக்குத் தமது இதயத்தில் இடமளித்திருந்தார்.

மியாகான் தம்பதியருக்கு 1896 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 5 ஆம் நாளன்று மகனாகப் பிறந்தார் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிப் அவர்கள்.

இஸ்மாயில் அவர்களுக்கு 5 வயது நடைபெறும் போது அவரது தந்தையார் மியாகான் மறைவெய்தி விட்டார். அதனால், இஸ்மாயிலையும் அவரது அண்ணன்மார்கள் இருவரையும் தம்பியையும் வளர்க்கும் பொறுப்பு மியாகானின் மனைவிக்கு ஏற்பட்டது.

மியாகானின் மனைவி சற்றும் மனம் தளராமல் குழந்தைகளை நல்ல பிள்ளைகளாக உருவாக்குவதில் ஈடுபட்டார். குழந்தைகளுக்கு அரபி மொழி அறிவையும் சமய அறிவையும் ஊட்டி வந்தார்.

இஸ்மாயில் அவர்கள் குழந்தைப் பருவத்திலேயே பெரியவர்களிடம் மரியாதை காட்டும் இயல்பு பெற்றிருந்தார். அதிலும் தாயாரிடம் அளவற்ற மரியாதை வைத்திருந்தார். தன் தாயார் சொல்லும் வார்த்தைகளை மிகவும் மதித்து நடந்தார்.

அவருக்கு 5 வயது நடந்த போது ஒரு விழா நாள் வந்தது. அதன் காரணமாக அவருக்குப் புதிய ஓங்கியை அணிவித்த அவரது தாயார் ' வெளியே செல்லும் போது எக்காரணம் கொண்டும் ஓங்கியை அவிழ்க்கக் கூடாது'' என்று கட்டளை இட்டிருந்தார். அதனைச் செவிமடுத்த இஸ்மாயில், ''சரி, அம்மா! அப்படியே ஆகட்டும்'' என்று பதிலிறுத்தார். சில வினாடிகளில் வீட்டினின்றும் வெளியே சென்றார்.

அந்நாள் விழா நாளானபடியால், தெருவில் வாண வேடிக்கைகளும், வேட்டு வெடித்தலும் நடை பெற்றன. ஒரு வேட்டு இஸ்மாயிலின் ஓங்கியில் வந்து விழுந்து விட்டது. ஓங்கியில் நெருப்புப் பற்றிக் கொண்டது. அப்போதும் அவர் ஓங்கியைத் தெருவில் அவிழ்த்துப் போடாமல் அந்தச் சூழ்நிலையிலும் தாயாரின் கட்டளையை மதித்து வீட்டுக்குச் சென்றுதான் ஓங்கியைக் கழற்றினார்.

மகனுக்கு ஆங்கில அறிவு கிடைக்க வேண்டும் என்பதற்காக திருநெல்வேலியில் உள்ள சி.எம்.எஸ். உயர்நிலைப் பள்ளியில் அவரைச் சேர்த்தார் அவரது தாயார். பள்ளிப் பருவத்தில் வகுப்பில் முதல் மாணவராகத் திகழ்ந்தார் இஸ்மாயில். படிப்புக்காகப் பற்பல பரிசுகளையும் பெற்றார். இவ்வளவுக்கும் அவர் புத்தகப் புழுவாக இருந்தது கிடையாது.

தமது பன்னிரண்டாவது வயதில் (1908) முஸ்லிம் இளைஞர் சங்கம் ஒன்றினை, பதினோரு உறுப்பினர்களுடன் துவக்கினார் இஸ்மாயில்.

அந்தச் சங்கம் அந்த நாட்களிலேயே அரிய இலட்சியங்களைக் கொண்டிருந்தது. அந்த இலட்சியங்கள் எவை தெரியுமா?

- இந்திய மக்களை ஆங்கிலம் படிக்கத் தூண்டுவது
- இந்திய மக்களுக்குக் கல்வி அறிவு அளிப்பது.
- குடிசைத் தொழிலை வளர்ச்சி அடையச் செய்வது.
- வரதட்சனை ஒழிப்புப் பிரச்சாரம் செய்வது.

- இவைதான் இலட்சியங்கள்.

சமூகத் தீமைகளில் ஒன்று எனக் கருதப்படும் வரதட்சணையை ஒழிப்பதற்காக அவர் 1908 ஆம் ஆண்டிலேயே குரல் கொடுத்திருக்கிறார் என்பது வியப்பில் ஆழ்த்தும் செய்தியாக உள்ளது.

உயர்நிலைக்கல்வி முடிவடைந்த பின்னர் பட்டப்படிப்புப் பெறுவதற்காகச் சென்னைக்கு வந்த இஸ்மாயில், கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்தார்.

பி.ஏ. பட்டம் பெற வேண்டிய தருணம். அப்போது அண்ணல் காந்தி அடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியிருந்தார்.

''பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றை விட்டு மாணவர்களே வெளியே வாருங்கள்'' என்று அண்ணல் விடுத்த வேண்டுகோள் இஸ்மாயிலின் இதயத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. நாட்டுப் பற்று அவரது நாடி நரம்புகளில் ஓடித் திரியத் தலைப்பட்டது. பட்டப்படிப்பு முடிவதற்கு இரண்டே இரண்டு மாதங்கள்தான் இருந்தன. என்றாலும் சுதந்திர உணர்வு சுடர்விட்டெரிந்ததால், கல்லூரியை விட்டு வெளியேறினார் இஸ்மாயில்.

ஒத்துழையாமை இயக்கம் பொதுமக்கள் இயக்கமாக மலர்வதற்கு முழு முதற்காரணமாக விளங்கியது 1920 ஆம் ஆண்டில் நெல்லையில் நடைபெற்ற மாகாண அரசியல் மாநாடு என்பது வரலாற்றுண்மை.

சட்டமேதை சீனிவாச அய்யங்காரின் தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டில் பெரும்பங்காற்றி அதன் வெற்றிக்குப் பாடுபட்டதுடன் ஒத்துழையாமைத் தீர்மானத்தைக் கடும் எதிர்ப்புக்கிடையே நிறைவேற்றிய பெருமை இஸ்மாயிலுக்கு உண்டு.

கல்லூரிப் படிப்பை உதறித்தள்ளிய அவர் இந்தியாவிலேயே மிக அதிகமான அளவில் தோல் பதனிட்டு ஏற்றுமதி செய்து வந்த ஜமால் முஹைதீன் கம்பெனியில் உதவி அலுவலர் பணியில் சேர்ந்தார். கடும் உழைப்பின் காரணமாக நாளடைவில் நிர்வாகியாகப் பதவி உயர்வு பெற்றார்; விரைவில் நிறுவனத்தின் பங்குதாரரும் ஆனார்.

நிறுவனத்தைச் சேர்ந்த அனைவரிடமும் பாராட்டுப் பெற்ற இஸ்மாயில், நிறுவனத்தின் முக்கிய பங்குதாரரான ஜமால்

-புலவர் தமிழ்ப்பித்தன்



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் காயிதே மில்லத் அவர்களின் பிறந்த நாளையொட்டி 5.6.89 அன்று திருவல்லிக்கேணியிலுள்ள காயிதே மில்லத் சமாதியில் மலர்ப்படுகை வைத்து மரியாதை செலுத்தினார். திரு. எம். அப்துல்லத்தீப் எம்.எல்.ஏ. உடன் உள்ளார்.

முகம்மது அவர்களின் இளைய சகோதரர் ஜமால் அப்துல்லாஹ் அவர்களின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். விரைவில் ஒரு மகனுக்குத் தந்தையானார்.

எந்தப் பிரச்சினையையும் அதன் ஆழத்திற்கே சென்று அலசிப் பார்ப்பது இஸ்மாயில் அவர்களின் பண்பு.

வணிகத் துறையில் புகழ் ஓச்சிக் கொண்டிருந்த இஸ்மாயில், தென் இந்திய தோல் வர்த்தக சங்கத்தின் கௌரவச் செயலாளராகப் பணிபுரிந்தார். வணிகத் துறையில் அவருக்கிருந்த திறமையின் காரணமாக, பல்வேறு பெருமக்கள் அவரை அணுகி அவ்வப்போது ஆலோசனை பெற்று வந்தனர்.

செல்வமும் செல்வாக்கும் மிக்க வணிகராகத் திகழ்ந்த போதும், அவரது உள்ளம் வள்ளல் தன்மைக்கு இடம் கொடுத்து வந்தது. பொருளுதவி வேண்டி, தம்மை நாடி வந்தவர்களுக்கு வாரி வழங்கினார். அவர் அளித்த நன்கொடைகள் ஏராளம், ஏராளம். 'செல்வத்தின் பயன் ஈதல்' என்னும் மொழிக்கு அவர் எடுத்துக்காட்டாக விளங்கினார். பல நேரங்களில், ஏழ்மையில் வாடிக் கொண்டிருப்பவர்களை அவரே தேடிச் சென்று பொருளுதவி செய்து வந்தார்.

1936 ஆம் ஆண்டில் இந்திய நாட்டில் உருவான அரசியல் சூழ்நிலை காரணமாக - அதுவரை காங்கிரஸ் இயக்க வாதியாக இருந்த இஸ்மாயில், முஸ்லிம்லீக் இயக்கத்தில் சேர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அப்போது ஒரு சிலர் அவரைச் சந்தித்து,

"நீங்கள் ஏன் முஸ்லிம் லீகில் சேர்ந்தீர்கள்?" என்று நேரடியாகக் கேட்டனர்.

"நீ ஏன் உன் மனைவியை மணந்து கொண்டாய்?" என்று கேட்பதைப் போலிருக்கிறது உங்கள் கேள்வி"- நகைச்சுவை ததும்பும் வகையில் பதிலளித்தார் இஸ்மாயில்.

1946ல் நடைபெற்ற சென்னை மாநிலச் சட்டமன்றத்தேர்தலில் வேட்பாளராக நின்ற இஸ்மாயில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்ற முஸ்லிம் லீக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராகவும் பொறுப்பேற்றார். 1952 வரை இந்தப் பதவியை வகித்தார்.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாளன்று இந்தியத் திருநாடு இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் இரு பிரிவுகளாக்கப்பட்டது.

அதே ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் கராச்சி நகரில் அகில இந்திய முஸ்லிம் லீக் குழு கூடியது. லீகை பாகிஸ்தான் முஸ்லிம் லீக், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் என இரண்டாகப் பிரிப்பது என முடிவு செய்யப்பெற்றது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் கன்வீனராக இஸ்மாயில் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய இஸ்மாயில், லியாகத் அலிகானை நோக்கிச் சில செய்திகளைத் துணிவுடனும் தூய உள்ளத்துடனும் குறிப்பிட்டார். அவை வருமாறு.

"நாம் இன்று அந்நியர்களாகப் பிரிகிறோம். நாம் வேற்று நாட்டுக்காரர்கள் நீங்கள் பாகிஸ்தான் பிரதமரானதால் உங்களிடம் சில வார்த்தைகள் சொல்ல வேண்டியது எனது கடமையென நினைக்கிறேன்.

"எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்திய முஸ்லிம்களின் விவகாரத்தில் நீங்கள் தலையிடக் கூடாது. எங்களது உரிமை என்ன, சலுகை என்ன என்பது எங்களுக்குத் தெரியும். அது போலவே எங்களது கடமை என்ன, பொறுப்பு என்ன என்பதையும் நாங்கள் அறிவோம். அவற்றை எப்படிப் பாதுகாப்பதென்பதும் எங்களுக்குத் தெரியும்.

"ஒரு விஷயத்தை உங்களிடம் தெளிவாக்கிவிட விரும்புகிறேன். எங்கள் இந்திய நாட்டிலே சிறுபான்மை முஸ்லிம்களுக்கு என்ன நேர்ந்தாலும் சரி, பாகிஸ்தானிலுள்ள உங்கள் மைனாரிடிகளை நேர்மையாகவும் தாராள மனப் போக்குடனும் நீங்கள் நடத்த வேண்டும். அதுவே உங்களது தலையான கடமையாகும்."

1948 ஆம் ஆண்டில் மார்ச் திங்களில் சென்னையில் கூடிய இந்திய முஸ்லிம் லீகின் கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இஸ்மாயில் அவர்கள் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

முஸ்லிம் பெருமக்களின் நிர்வாகத்தில் இயங்கக்கூடிய கல்லூரி ஒன்றினைச் சென்னை மாநகரில் தொடங்க வேண்டும் என்ற குறிக்கோள் இஸ்மாயிலின் நெஞ்சில் நிலவி வந்தது. அதற்காக நிதி திரட்டும் பணியை மேற்கொண்டார். உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் நிதி வந்து குவிந்தது. 5 இலட்ச ரூபாய் நிதியாகக் கிடைத்தது. சென்னை ராயப்பேட்டையில் 12 ஏக்கர் நிலப்பரப்பு விலைக்கு வாங்கப்பட்டது. அந்த இடத்தில் உதித்தது புதுக் கல்லூரி.

1952-இல் நடைபெற்ற பொதுத் தேர்தல், நாடு விடுதலை பெற்ற பின்னர் நடைபெற்ற முதல் தேர்தல் ஆகும். அதில் தனது வேட்பாளர்களை ஈடுபடுத்தியது முஸ்லிம் லீக். அதில் பங்குபெற்ற இஸ்மாயில் அவர்கள் நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1958 ஆம் ஆண்டு வரை அவர் இந்தப் பதவியில் இருந்தார்.

1962-இல் கேரளத்திலுள்ள மஞ்சேரித் தொகுதியிலிருந்து நாடாளுமன்ற வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். பின்னர் நடைபெற்ற 1967, 1971 தேர்தல்களிலும் அதே தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானார்.

நாட்டுப்பற்றிலும் இஸ்மாயில் யாருக்கும் சளைத்தவரல்லர். 1965 ஆம் ஆண்டு பாகிஸ்தான், இந்தியாவுடன் போர் புரிந்த போது இஸ்மாயில் வெகுண்டெழுந்தார்.

"இந்திய நாட்டிற்காக - இந்திய மண்ணைக் காப்பதற்காக - இந்தியாவின் பக்கத்தில்தான் நான் இருப்பேன்" என்று ஒருமைப்பாட்டு உணர்வுடன் ஓங்கிக் குரல் எழுப்பினார்.

1967-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது, அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஓர் அணியில் இணைய வைத்து, ஒரு கூட்டணியை உருவாக்கிய சமயத்தில் இஸ்மாயில், மனப்பூர்வமாகவும் மன மகிழ்ச்சியுடனும் அந்தக் கூட்டணியில் அங்கம் வகித்தார்; தோள் கொடுத்தார் என்பது வரலாற்றுச் செய்திகள்.

இஸ்மாயில் அவர்கள் காயிதே மில்லத் என்று பலராலும் பிரியத்துடன் அழைக்கப்பட்டார். காயிதே மில்லத் என்றால் சமுதாயத்தின் வழிகாட்டி என்று பொருள்.

உயர்ந்த உள்ளம் - ஒப்புயர்வற்ற அரும் பண்பு காயிதே மில்லத் அவர்களின் தனிச் சிறப்பாகும்.

அவரது நண்பர்களில் சிலர், அவரிடம் கொண்டிருந்த பேரன்பின் காரணமாக, கார் ஒன்றினை அவருக்கு அளிக்க முன் வந்தனர். அந்த உதவியை அவர் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்.

இந்திய நாட்டின் பெருந்தலைவர்களில் முன்னணியில் திகழ்ந்தவர் காயிதே மில்லத்! முஸ்லிம் மக்களின் தலைவராக அவர் பொறுப்பேற்றிருந்த போதிலும் மற்ற இனத்தவரிடம் வேறுபாடு கருதாது வெள்ளை உள்ளத்துடன் பழகிய விவேகி!

நெல்லை மாவட்டத்தில் பிறந்திருந்தாலும், கேரள மாநிலத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகப் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர் வாழ்ந்து வந்தது சென்னை குரோம்பேட்டையில்தான் என்பது குறிப்பிடத்தக்க செய்தி! அவரது இல்லத்தின் பெயரே தயா மன்ஸில் - அதாவது கருணை நிறைந்த இல்லம் என்பது பொருள்.

நகைச்சுவை உணர்வு - நிதானம் - பொறுமை - உயர்ந்த நோக்கம், துணிவு, பணிவு, கனிவு, நேர்மை, எளிமை, தொண்டு மனப்பான்மை, உதவி செய்யும் பண்பு, விவாதத் திறன், எதிர்ப்புக்கு அஞ்சாத போக்கு, தலைமைத் திறன், இப்படி எண்ணற்ற நல்லியல்புகளுக்கு நாயகராக விளங்கிய காயிதே மில்லத், 1972 ஆம் ஆண்டில் எதிர்பாராமல் நோய் வாய்ப்பட்டார். ஏப்ரல் 4 ஆம் நாளன்று - தமிழக மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி மறைவெய்தினார்.

ஏப்ரல் 5 ஆம் நாள் காலையில், தமிழ் நாடு சட்டப்பேரவை கூடியதும், காயிதே மில்லத் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தது.

அனுதாபத் தீர்மானத்தை அந்நாளைய பேரவை முன்னவர் - கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்மொழிந்தார்.

அனுதாபத் தீர்மானத்தையொட்டி முதல்வர் கலைஞர் அவர்கள்,

"நிதானத்திற்கு இலக்கணம், நட்புக்கு எடுத்துக்காட்டு, பெருந்தன்மைக்கு உதாரணம், அடக்கம் என்றால் இவர்தான் என்பதற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர் காயிதே மில்லத்" என்று குறிப்பிட்டார்.

பின்னர் சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் காயிதே மில்லத் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஒரு நிமிட நேரம் அமைதியாக எழுந்து நின்று மரியாதை செலுத்தியபின் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

அன்று இரவு திருவல்லிக்கேணி பெரிய மசூதியில் அவரது பருஉடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மனித சமுதாயத்தில் மிகச் சிறந்த இயல்புகளுடன் - மனித நேயத்துடன் திகழ்ந்த மாபெரும் மனிதர்களில் காயிதே மில்லத் அவர்களும் ஒருவர்.

சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசினர் கலைக் கல்லூரிக்கு, காயிதே மில்லத் அரசினர் கலைக் கல்லூரி எனப் பெயர் சூட்டி அவரைப் பெருமைப்படுத்தியது தமிழக அரசு.

அவரது நினைவைப் போற்றும் வகையில், திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்டு 1985-இல் அறிவிக்கப்பட்டிருந்த அண்ணா மாவட்டம், காயிதே மில்லத் மாவட்டம் என வழங்கப்படும் என்று முதல்வர் கலைஞர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அறிவித்தார். அதன்படி, ஜூன் 11ஆம் நாளன்று, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தை மிகச் சிறப்புடன் தொடங்கி வைத்திருக்கிறார் முதல்வர்.

காயிதே மில்லத் இஸ்மாயில் அவர்களின் பெயர், தமிழ் உள்ளளவும் தமிழ் மக்கள் உள்ளளவும் நிலைத்து நிற்பது உறுதி.



காயிதேமில்லத் அமைதியை விரும்பும் அருமையான தலைவர். அடக்கம், பெருந்தன்மை, விவேகம் நிறைந்தவர். பாராளுமன்றத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள், அவர்களில் இவர் ஒருவர்தான் எனது நெஞ்சத்தில் தனித்து நிற்கிறார்.

-பேரறிஞர் அண்ணா



# சேலம் மாவட்டத்தில் முதல்வர் நிகழ்ச்சிகள்

சேலம் மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 10-6-89 அன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

முதல் நிகழ்ச்சியாக், கோழித் தீவனத்திற்கு விற்பனை வரிவிலக்கு அளித்ததற்குக் கோழிப் பண்ணையாளர்கள் சார்பாகத் தெரிவித்த நன்றி அறிவிப்பு விழாவில் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தேர்தல் நேரத்தில் தேர்தல் அறிக்கையில் பல வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. இந்த நாட்டின் குடிமக்களுக்கு அடிப்படைத் தேவையான, அத்தியாவசியத் தேவையான, உணவு, உடை, உறைவிடம் போன்றவைகள் வேண்டும் என்பது தேர்தல் நேரத்தில் எடுத்துக்காட்டப்பட்ட ஒன்று. மேட்டூர் சீரங்கன் எம்.எல்.ஏ., திருச்செங்கோடு எம்.வி. கண்ணன், சேலம் நகரமன்றத்தலைவர் திரு. சூடாமணி உரையிலும், அமைச்சர் மற்றும் மயில்சாமிக்கவுண்டர் வரை குறுகிய காலத்தில் 3 மாதங்களில் 13 ஆண்டுகளாக சிந்தித்த பல சாதனைகளை இந்த அரசு செய்து வருகின்றது என்று பெருமைப்பட்டனர்.

''என்னைப் பொறுத்தவரையில் இதுவரை செய்யப்பட்ட சாதனைகளைச் செய்யப்படவேண்டிய சாதனைக்கு அடித்தளமாகும் என எண்ணிக்கொண்டு இருக்கிறேன். கட்டப்படவுள்ள உயர்ந்த கோபுரத்திற்கு அஸ்திவாரமாக அமைப்பதைப் போலத்தான் இந்த காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். படிக்க வேண்டிய நூலுக்கு முன்னுரை, அணிந்துரை போல 3,4 மாதங்களில் தேர்தல் நேரத்தில் சொன்னவைகளைப் படிப்படியாக விரைவாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். இதில் ஒன்றுதான் ஊதிய உயர்வு. இதில் 11 இலட்சம் அரசு ஊழியர்கள் பயன்பெறுகிறார்கள். அவர்கள் கேட்டது மத்திய அரசுக்கு இணையான மாநில அரசு ஊதியம் தரவேண்டும் என்பது. அவர்கள் முன்பு கேட்டபோது அவர்களுக்காகக்குரல்கொடுத்தவர்கள் நாங்கள்.

''இதற்காக அமைச்சர்களும், அரசு அலுவலர்களும், ஊழியர்களும் மகிழ்ச்சியடைகிறார்கள். ஆனால் சில பேர் எங்கிருந்து பணம் வருகிறது எனக் கேட்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லுகிறேன். ''நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி, புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்'' என்ற பாட்டு உள்ளது. இது கடந்த கால ஆட்சியில் மாற்றப்பட்டு புல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியே நெல்லுக்கு ஆங்கே பொசியுமாம் என்றானது. இதனை நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மாற்றி, புல்லுக்குப் பாய்ந்த நீரை எல்லாம் நெல்லுக்குப் பாய்ந்திடச் செய்ததே காரணம்.

சேலம் மாவட்டத்தில் மூன்று மாதங்களாக பல புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒருசில திட்டங்கள் மாத்திரம் கூறுகிறேன். இதனால் எவ்வளவு பேர் பயன்பெறுகிறார்கள் என்பது தெரியும். ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு எட்டு மாதத்திலிருந்து ரூபாய் 50 உதவித்தொகை சேலம் மாவட்டத்தில் 25,000 கர்ப்பிணிப் பெண்கள் பயனடைகிறார்கள். இதற்காக ரூ 50 இலட்சம் சேலத்திற்கு செலவாகலாம். இதனை வாங்க சென்னை தலைமைச் செயலகத்திற்கு வரவேண்டியதில்லை மாவட்ட ஆட்சித் தலைவரிடமே பெற்றுக் கொள்ளலாம்.

விபத்தில் இறந்தவர்களுக்கு உதவித்தொகையாக திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி ரூபாய் இரண்டாயிரம் கொடுத்தது. பின்னர் வந்த அரசு ரூபாய் 5 ஆயிரமாக உயர்த்தியது. இப்போது நாங்கள் 10 ஆயிரமாக உயர்த்தியுள்ளோம். விபத்தில் இறப்பவர்கள் மட்டுமல்ல, கட்டிடத் தொழிலாளர்களுக்கும், பனையேறும் தொழிலாளர்களுக்கும் பணியில் இருந்து இறந்தால் ரூபாய் 10 ஆயிரம் தருகிறோம். இதில் ஒன்றே ஒன்று விடுபட்டு இருந்தது. அது சினிமாத் தொழிலாளர்களுக்கு. அதையும் நேற்று அவர்களுக்குக் கிடைக்க அறிவிக்கப்பட்டது. முன்பு இருந்த ஆட்சியில், இந்தத் தொகை காலதாமதமாய் போய்ச் சேர்ந்தது. நாங்கள் இந்தத் தொகையை உடனுக்குடன் போய்ச் சேர இன்னொரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் 80 இலட்சம் பேருக்கு

## "படிக்க வேண்டிய நூலுக்கு முன்னுரை போல..."

ஒரு ஜோடி சேலை, வேட்டி வழங்கப்படுகின்றன. இதற்காக, சேலம் மாவட்டத்தில் 50 இலட்சம் பேருக்கு ரூபாய் 3 கோடி செலவாகும். தமிழ்நாட்டில் 85 இலட்சம் பேருக்கு ரூபாய் 35 கோடி செலவாகிறது.

''இலவச அரிசித் திட்டத்தைத் தேர்தல் நேரத்தில் அறிவித்து தீபாவளி, பொங்கல், புத்தாண்டு நாளில்

**மேட்டூர் அனல்மின்நிலையம் 210 மெகாவாட் மூன்றாவது பிரிவை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 10-6-89 அன்று துவக்கி வைத்தார்.**





கொடுப்பதாக இருந்தது. மக்கள் ஆர்வம் அதிகமாகி-அதனைவிட ஆற்காடு வீராசாமி அதிக ஆர்வமாகி-அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ம் தேதி, ஜூன் மூன்றாம் தேதி ஆகிய ஐந்து தடவை ரூபாய் 300 வருமானத்திற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி வழங்க முடிவு செய்து இரண்டு முறை வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் இதில் 5 இலட்சத்து 92 ஆயிரத்து 726 குடும்பங்கள் பயன்பெற்றன. இதற்கான செலவு ரூபாய் 2.5 கோடியாகும். சத்துணவுத் திட்டத்தில் 85 இலட்சம் குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். இப்போது சத்துணவோடு முட்டை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு மாதம் இரண்டு முறை கொடுக்கவுள்ளோம். இதில் சேலம் மாவட்டத்தில் 4 இலட்சத்து 49 ஆயிரத்து 933 பேர் பயனடைகிறார்கள். இதற்கான செலவு ரூபாய் 60 இலட்சமாகும். இதனை வழங்குவதற்காக இந்த மாதம் அவசர அவசரமாக முடிவு எடுக்கப்பட்டது. இதனால் நிர்வாகத்தைச் செம்மையாகச் செயல்படுத்த முடியவில்லை. அடுத்த மாதங்களில் இருந்து அந்தந்த வட்டங்களில் முட்டை கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

வறட்சி நிவாரணப் பணிகளைப் போர்க் காலப் பணியாக ஆரம்பித்துள்ளோம். மத்திய அரசு இதற்கு உதவி வழங்கும் என எதிர்பார்த்துக் காத்திருக்காமல் நிச்சயம் உதவி அளிக்கும் என இதுவரை ரூபாய் 53 கோடி ஒதுக்கியுள்ளோம். அந்த வேலை நடைபெற்று வருகிறது.

சேலம் மாவட்டத்தில் மாத்திரம் 400 புதிய ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்படும். இந்த மாத இறுதிக்குள் அவை முடிவு பெறும். வறட்சி நிவாரணத் திட்டத்தில் இந்த மாவட்டத்திற்கு 167.13 இலட்சம் ஒதுக்கியுள்ளோம். விவசாயிகளுக்கு முன்புள்ள அரசு ரூபாய் 67 கோடியைத் தள்ளுபடி செய்கிறேன் என்று அறிவித்து இதனைக் கூட்டுறவுக்குக்கட்டவில்லை. அந்தக் கடனும் இந்த அரசு தலையில் விழுந்து விட்டது.

***சத்துணவுத்திட்டத்திற்கு இலவச முட்டை வழங்கும் நிகழ்ச்சியில் - தமிழ்நாடு கோழி வளர்ப்போர் நலச் சங்கத்தலைவர் திரு மயில்சாமிக்கவுண்டர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் 20 இலட்சம் முட்டைகளை 10.6.89 அன்று வழங்கினார்.***

அந்தக் கடனையும் சேர்த்து ரூபாய் 106 கோடி சுமக்க வேண்டிய சங்கடம் வந்தது.

தமிழ்நாட்டில் முட்டை அதிகமாகக் கிடைப்பது நாமக்கல்லில்தான். இங்கு 40 இலட்சம் முட்டை கிடைக்கிறது. நாமக்கல் தவிர தமிழ்நாட்டில் மற்ற இடங்களில் 20 இலட்சம் முட்டை கிடைக்கிறது. இதனைச் சேர்த்து தமிழ்நாட்டில் 1 நாளைக்கு 60 இலட்சம் முட்டை கிடைக்கிறது. ஒரு மாதத்திற்கு 18 கோடி முட்டை கிடைக்கிறது. சத்துணவிற்கு மட்டும் மாதத்திற்குத் தேவைப்படுவது 1.65 கோடியாகும். மொத்த உற்பத்தியில் சத்துணவிற்கு அரசு வாங்கும் முட்டை 9 சதவிகிதமாகும்.''

இவ்விழாவில், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் தலைமையுரையாற்றினார். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு என். வீராசாமி, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டாக்டர் கே. சந்திரசேகரன், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு சட்டப்பேரவைத்துணைத்தலைவர் திரு. பி. துரைசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.ஆர்.ஜி. தனபாலன், திரு. சீரங்கன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. கண்ணன், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.எப். பாரூக்கி ஆகியோர் பங்கு பெற்று, சிறப்புரையாற்றினார்கள்.

இவ்விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் கோழிப் பண்ணை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. எஸ்.கே. மயில்சாமிக்கவுண்டர் வரவேற்றுப் பேசினார்.



# ''நஷ்டத்தில் இயங்கி வந்த ஏழு ஆலைகள் லாபத்தில் இயங்கி வருகின்றன''

சேலத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலை வெள்ளிவிழா 10.6.89 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. வெள்ளி விழாவைத் தொடங்கி வைத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நெசவாளர்களின் துயரைத் துடைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவித்தார். மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''தமிழகத்தில் பருவமழை பொய்த்து விட்டதால் பெரும் வறட்சி ஏற்பட்டு, கடந்த சில மாதங்களுக்கு முன்பு பொறுப்பேற்ற இந்த அரசு, பல பற்றாக்குறைகளோடு மழைப்பற்றாக்குறையையும் சுமக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தமிழகம் முழுவதும் வறட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகிறோம் என்றாலும், விரைவில் அந்தத் துயர் தணிந்து, தீட்டுகின்ற திட்டங்கள் மக்களுக்குப் போய்ச்சேர்ந்து இந்த அரசு களிப்புறும் வகையில் இயற்கையும் உடன்பட்டு ஒத்துழைக்கிறது என்று கருதுகிறேன்.

''பொதுவாக இன்று அல்ல என்றைக்கும் நான் சேலத்திற்கு வந்தால் மழை வரும். அதற்கு விதிவிலக்கு வைக்கக்கூடாது என்று மழை பெய்கிறது. மழையினால் இவ்வளவு பெரிய நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறாமல் இருக்கிறதே என்று இந்த விழாக் குழுவினரும், அமைச்சர் தங்கவேலுவும் வருத்தமாக இருக்கலாம். சிலப்பதிகாரத்தில் வரும் ''மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்'' என்ற பாடலை எண்ணி நான் மழையை வாழ்த்துகிறேன்.

இந்த நிகழ்ச்சி பல்வேறு மக்கள் நல்வாழ்வுத் திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 1 கோடியே 4 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் 6,963 பேருக்குப் பயனடையக் கூடிய வகையில் இங்கு வழங்கப்படவிருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் இந்த நிகழ்ச்சியில் தொடர்புள்ள அதிகாரிகள் வழங்கவிருக்கிறார்கள். கடந்த வாரத்தில் கோவையில் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்க்குடிமக்களின் குடும்பங்கள் பயனடையும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். அதன்பிறகு காஞ்சியில் செங்கை-அண்ணா மாவட்டத் துவக்க விழாவில் 10,000 பேர் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை அவர்கள் பெற்றுச் சென்றனர். இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் முதியோர் உதவித் தொகையாக 2,101 பேருக்கு, ரூபாய் 12 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வழங்கப்படவிருக்கிறது. ரூபாய் 21 இலட்சம் பெறுமானமுள்ள மதிப்பில் 2 ஆயிரத்து 101 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களும், ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் 38 பேருக்கு ரூபாய் 38 ஆயிரம், குடிசை ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் 15 பேருக்கு ரூபாய் 22,500 வழங்கப்படுகிறது.

''முதல்வர் நிவாரண நிதியின் கீழ் 50 பேருக்கு ரூபாய் 50,000 மும், பிற்படுத்தப்பட்ட மக்கள் தொழிற்கருவிகள் வாங்க எட்டுப் பேருக்கு ரூபாய் 4,000 மும், ஆதிதிராவிடர் நல உதவித் திட்டத்தின்கீழ் வீட்டுமனை வாங்க 340 பேருக்கு ரூபாய் 3 இலட்சத்து நாற்பதாயிரமும், கலப்புத் திருமணத்

***சேலம் கூட்டுறவு நூற்பாலை வெள்ளி விழாவை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 10.6.89 அன்று துவக்கி வைத்தார்.***



குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

**சென்னை-600 005.**

**( தமிழ் நாடு அரசு நிறுவனம் )**

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : +99.8% $SiO_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : +12% $K_2O$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : +99.7% $SiO_2$ |
| 7. | வெப்பந்தாங்கும் களிமண் | : ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

DIPR/1174/MS/88/ARIES

தம்பதிகள் 19 பேருக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 76 ஆயிரமும் வழங்கப்படுகிறது.

குடும்ப நலத் திட்டத்தின்கீழ் 9 பேருக்கு ரூபாய் 1 இலட்சத்து எண்பதாயிரமும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1105 பேருக்கு ரூபாய் 33 இலட்சமும், சமூக நலத்திட்டத்தின்கீழ் 105 பேருக்கு 1 இலட்சத்து 12 ஆயிரமும், தாட்கோ தொகுப்பு வீடுகள் திட்டத்தின்கீழ் 1049 பேருக்கு 30 இலட்சமும் மொத்தம் 6 ஆயிரத்து 900 பேருக்கு மேலே 1 கோடியே 4 இலட்சம் தொகையும், அதற்கு மதிப்புள்ள பொருட்களும் இந்த விழாவில் வழங்கவிருக்கிறோம். இந்த நிலையில் ஏழை எளிய மக்கள் வாழ்வதற்காக அவர்கள் அல்லலைப் போக்குவதற்காக நேர்மையாகச் செயல்பட்டு ஏழைகளுக்கு உதவிகள் வழங்கப் படுகின்றன.

இந்த ஆலை வெள்ளிவிழா கொண்டாடுவதில் பெரும் சிறப்பு என்னவென்றால், இந்த ஆலை கூட்டுறவில் நடைபெற்று வருகிறது. கைத்தறித்துறை அமைச்சர் தங்கவேலு என்னிடம் ஒரு குறிப்பைக் கொடுத்தார். நான் சென்னையில் நடைபெற்ற கைத்தறிப் பொருட்காட்சியில் உரையாற்றியபோது, தமிழகத்தின் ஆலைகள் எல்லாம் இழப்பு (நஷ்டம்) கணக்குக் காட்டும் சூழ்நிலையிலுள்ளன. காரணம் நூலை வெளிமாநிலங்களுக்கு அனுப்புகிறார்கள். அதனை அனுப்பாமல் நூல்கள் அனைத்தும் கூட்டுறவு நெசவாளர்கள் சங்கத்திற்கும், தனியார் நெசவாளர்களுக்கும் மற்றும் விசைத்தறியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும், உபரி நூலை விற்பனை செய்ய வேண்டும் என்றும் அறிவித்தேன். அதனை உறுதியோடு ஏற்றுக் கொண்டு அமைச்சர் தங்கவேலு முயற்சி எடுத்தார்.

தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வந்த ஏழு ஆலைகள் கடந்த 13-4-89-க்குப் பிறகு இலாபத்தில் இயங்கி வருகின்றன. அதாவது தென்னிந்திய நூற்பாலை இப்போது நஷ்டம் நீக்கப்பட்டு ரூபாய் 254 இலட்சம் இலாபம் கிடைக்கிறது. திருச்செந்தூர் நூற்பாலை ரூபாய் 415 இலட்சம் இலாபத்திலும், பெரியார் நூற்பாலை ரூபாய் 82 ஆயிரம் இலாபத்திலும், கன்னியாகுமரி நூற்பாலை ரூபாய் 1 இலட்சத்து 75 ஆயிரம் இலாபத்திலும், தஞ்சாவூர் கூட்டுறவு நூற்பாலை ரூபாய் 1 இலட்சத்து 75 ஆயிரம் இலாபத்திலும், எட்டயபுரத்தில் உள்ள பாரதி கூட்டுறவு நூற்பாலை ரூபாய் 3 இலட்சத்து 54 ஆயிரம் இலாபத்திலும், இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலை ரூபாய் 2 இலட்சத்து 80 ஆயிரம் இலாபத்திலும் இயங்கி வருகின்றன.

ஆகவே இந்த அரசு எந்தத் துறையிலும் நஷ்டம் ஏற்படாமல் அதற்கான சூழ்நிலையை உருவாக்கும். ஊழலுக்கு இடந்தராமல் நிர்வாகம் நடத்துவதால் இந்த ஆலைகள் இப்போது லாபத்தில் இயங்கி வரும் காட்சியைக் காண்கிறோம். மேலும் இந்த லாபத்தைப் பெருக்கும் வகையில் அதிகாரிகள் பணிகளைத் தொடர்ந்து முனைப்புடனும், முயற்சியுடனும், கடமையுணர்வுடனும் ஆற்றவேண்டும்''.

விழாவின் இறுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நூற்பாலைத் தொழிலாளர்கள் 1400 பேருக்கு ரூபாய் 10 இலட்சம் அளவில் வீடுகட்ட வீட்டுவசதி நிதியுதவிக் கழகம் மூலம் கடனும், பங்குதாரர்களுக்கு 1987-89-ஆம் ஆண்டிற்கு லாபம் ஈட்டியதில் 7 சதவிகிதம் ஈவுத்தொகையும் வழங்கினார். விழாவிற்கு மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு என். வீராசாமி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் டாக்டர் கே. சந்திரசேகரன், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. துரைசாமி ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எம்.எப். பாரூக்கி அனைவரையும் வரவேற்றார்.

# ''சிறு தொழில்களுக்கு 60 சதவிகித மின்வெட்டிலிருந்து முழு விலக்கு''

**மே**ட்டூர் அனல்மின் நிலைய 210 மெகாவாட் 3வது பிரிவைத் துவக்கி வைத்து (10.6.89) மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சிறுதொழில்களுக்கு ஜூன் 21ந் தேதி முதல் 60 சதவித மின் வெட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப் படும் என அறிவித்தார். மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''மேட்டூரில் 210 மெகாவாட் கொண்ட 3வது பிரிவு தொடங்கப்படுகிறது என்பதை எண்ணி நான் அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நீங்களும் (பொது மக்களும்) அந்த மகிழ்ச்சியை அடைகிறீர்கள். அதை விட மின்சாரத்துறை அமைச்சரும், மின்வாரியத் தலைவர் திரு. டி.வி. அந்தோணியும் மகிழ்ச்சி அடைகிறார்கள். மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் ஒரு தந்தையின் நிலையிலும், மின்சாரவாரியத் தலைவர் திரு. டி.வி. அந்தோணி அவர்கள் தாய் நிலையிலும் மகிழ்ச்சியடைவதைக் காண்கிறேன்.

''இப்போது தமிழ்நாட்டில் '88இல் புனல் மின் நிலையத்தில் 448 மில்லியன் யூனிட் உற்பத்தி செய்யப்பட்டது. '89இல் அதைவிட 659 மில்லியன் யூனிட் உற்பத்தி உயர்ந்தது.

1988இல் அனல் மின் நிலையத்தில் 1921 மில்லியன் உற்பத்தி செய்யப்பட்டது. அது 1982இல் அதை விட 2160 மில்லியனாக உயர்ந்தது. இரண்டையும் பார்த்தால் 88இல் 2369 மில்லியன் உற்பத்தியானது, 89இல் 2819 மில்லியனாக உயர்ந்தது. எனவே, 3 மாதத்தில், மின்சார உற்பத்தியில் சங்கடம் கிடையாது. மின்சாரத்தைப் பெருக்கித்தான் இருக்கிறோம். இப்போது தொடர்ந்து வரும் ஆண்டில் பல அனல்

மின் நிலையம் நிறைவேற்றப்பட இருக்கிறது. அப்போது ஓரளவு மின்சாரத் தேவை நிறைவு பெறும்.

''மேட்டூரில் 210 மெகாவாட் கொண்ட 4-வது பிரிவு இந்த ஆண்டு டிசம்பரில் முடிவு பெறும். பைக்காரா நீர்மின் நிலையம் 2 மெகாவாட் உற்பத்தி கொண்டது. அது இந்த செப்டம்பரில் முடியும். கீழ்ப் பவானி நீர்மின் திட்டம் 8 மெகாவாட் உற்பத்தி கொண்டது. இது ஆகஸ்டில் முடியும். வைகை நீர்மின் திட்டம் 6 மெகாவாட் கொண்டது, அக்டோபரில் முடியும். கயத்தாறு காற்றாலை 11 மெகாவாட் கொண்டது, 1990 மார்ச்சில் முடியும். 210 மெகாவாட் கொண்ட தூத்துக்குடி அனல்மின் நிலைய) வேலை 1990 செப்டம்பரில் முடியும். மேலும், தூத்துக்குடியில் 210 மெகாவாட் கொண்டது ஒன்று 1991 மார்ச்சில் முடியும்.

''1992இல் மின்சாரத்திற்காகப் பெரும் திட்டம் ஒன்று நிறைவேற இருக்கிறது. வடசென்னை புலிகாட்டில் அனல்மின் நிலையம் தொடங்கப்பட விருக்கிறது. இது 600 மெகாவாட் கொண்டது. இதற்கு நில ஆர்ஜிதம் செய்தபோது இடைக்காலத் தடை பெற்றனர். இப்போது அந்நிலம் நம் கைக்கு வந்தள்ளது. 1992 இல் புலிக்காடு அனல்மின் நிலைய வேலை தொடங்கும்.

''தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அனல்மின் நிலையத்திலிருந்து 1200 மெகாவாட்டும், புனல்மின் நிலையத்திலிருந்து 1929 மெகாவாட்டும், காற்றாலையிலிருந்து 3 மெகாவாட்டும், மைய அரசின் பங்கிலிருந்து 1516 மெகாவாட்டும் ஆக மொத்தம் 5158 மெகாவாட் உற்பத்தி நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் நம் தேவை 3,000 மெகாவாட் என வைத்துக்கொண்டால் 2,000 மெகாவாட் அளவுதான் கிடைக்கிறது.

''கூடங்குளத்தில் 4,000 கோடியில் மத்திய அரசு அணுமின்நிலையம் தொடங்க முன்வந்திருக்கிறது. அதில் இப்போது சில பிரச்சனைகள் இருக்கின்றன. அவை விவசாயிகளைப் பாதிக்கும் என்றும், சிறு விபத்து ஏற்பட்டால் அந்த மாவட்டமே அழிந்துவிடும் என்றும் கருத்து வந்திருக்கிறது. கடந்த கால அரசில் அறிவிக்கப்பட்டு தொடங்கப்படாமலிருந்து பத்துக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இந்த ஆண்டு நிறைவேற்றப்படும். அந்தப் பத்து தொழிற்சாலை போக மேலும் ஐந்து சேர்த்து தொழிற்சாலை கட்டவிருக்கிறோம். இந்தப் பதினைந்துக்கும்ரூ462 கோடிக்குமேல் செலவிடவிருக்கிறோம். இவைகள் எல்லாம் மின்சாரத்தை நம்பித்தான் தொடங்க இருக்கிறோம். அதில் ஒரு கட்டம்தான் இந்த மேட்டூர் 3வது 210 மெகாவாட் தொடக்கம். மேட்டூர் அனல் மின்நிலையத்தில் பணியாற்றும் 1400 பொறியாளர் மற்றும் தொழிலாளர்களுக்கு 1 மாத சம்பளம் ஊக்கத் தொகையாகஅளிக்கப்படும். இதற்குச் செலவினம் ரூபாய் 30 இலட்சமாகும்.

''வருகிற 21.6.89 முதல் 2325 சிறு தொழிற்சாலைகளுக்கு தற்போதுள்ள 60 சதவிகித மின் வெட்டில் இருந்து விலக்கு அளிக்கப்படும். மேட்டூர் அனல்மின் நிலையத்திற்கு நிலம் கொடுத்தவர்களில் 315 பேருக்கு வேலை கொடுக்கப்படும். மின்சார இலாகாவில் பணிபுரிந்தவர் இறந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுக்கப்படும். இவர்களில் எட்டாம் வகுப்பு அதற்கு மேலும் படித்த பெண்கள் 380 பேருக்கு அலுவலக உதவியாளர் வேலையும், ஆண்களில் 460 பேருக்குக் களப்பணியாளர், உதவியாளர் வேலையும் கொடுக்கப்படும்.

''எண்ணூர், தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் தொழிற் கூட்டுறவுச் சங்கம் இருப்பதுபோல, மேட்டூரிலும் அமைக்கப்படும். அதில் ஒப்பந்தக்காரர் 350 பேருக்கு நிரந்தர வேலை கொடுக்கப்படும்.''

இந்தச் சிறப்புமிகு விழாவிற்கு மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் வீரபாண்டி எஸ். ஆறுமுகம், மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் டாக்டர் கே. சந்திரசேகரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு தங்கவேலு, மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத்தலைவர் திரு. பி. துரைசாமி ஆகியோர் பங்குபெற்று வாழ்த்துரை வழங்கினார்தள்.

தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் திரு. டி.வி. அந்தோணி வரவேற்றுப் பேசினார். மேட்டூர் அனல் மின் நிலைய தலைமைப் பொறியாளர் திரு. ஜே.எம் வாசுதேவன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு
வை. புண்ணியமூர்த்தி,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம்

## மின்சாரமும் சோஷலிசமும்

லெனின் மின்சாரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, சோவியத் பூமியை வாழ வைக்கக் கூடியவர்கள் , இரண்டு பேர். ஒன்றின் பெயர் சோஷலிசம். மற்றொன்றின் பெயர் மின்சாரம் என்று லெனின் சொன்னதாக வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

எனவே, மின்சாரம் இல்லாமல் இன்றைக்கு எந்த இயக்கமுமில்லை. எதுவும் இயங்காது என்ற அளவிற்கு மின்சாரத்தின் தேவை அவ்வளவு அவசியமாக ஆகியிருக்கிறது.

## மின்சாரமும் சம்சாரமும்

மின்சாரத்தின் தேவை அவ்வளவு அவசியமான ஒன்றாக ஆகியிருக்கிற கால கட்டத்திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால்தான் மின்சாரத்தை, சம்சாரத்தோடு ஒப்பிட்டுப் பல பேர் பேசக் கேட்கின்றோம். சம்சாரம் கொஞ்சம் தயங்கினால், சம்சாரம் ஒரு வெட்டு வெட்டிக் கொண்டு வீட்டு வேலைகளைச் சரிவரக் கவனிக்காவிட்டால் எவ்வளவு அவஸ்தை ஒரு ஆணுக்கு அல்லது குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஏற்படுகிறதோ, அதைப் போலத்தான் மின்சாரமும் வெட்டு ஏற்பட்டு, மின்சாரம் குறையுமேயானால் அந்த நாடே அவதிப்படுகிறது. அந்த மாநிலமே அவதிப்படுகிறது.

-மேட்டூர் அனல் மின்நிலையத்தின் மூன்றாவது பிரிவைத் துவக்கி வைத்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.



# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்

''மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற மற்றமொரு ஏற்பாடாக, வறுமையில் உழலும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பும் அல்லது அதற்கு மேலும் படித்துத் தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவுக்காக, ரூ. 5,000 உதவித்தொகை வழங்கப்படும். இத்திட்டத்திற்கு நிதிநிலை அறிக்கையில் ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.''

-மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

பெண்கள் சமுதாயத்தின் கண்கள் போன்றவர்கள். அதனால் பெண்களின் மறுமலர்ச்சிக்குத்தமிழ்நாடு அரசு முதலிடமும், முன்னுரிமையும் அளித்துள்ளது. சமுதாயத்தில் பெண்களின் தகுதியை உயர்த்தவும், படிக்கின்ற ஆர்வத்தை ஊக்குவிக்கவும் கொண்டு வரப்பட்ட திட்டம்தான், ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ. 5,000 நிதி உதவி அளிக்கும் திட்டம். மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திட்டம் என இத்திட்டம் அழைக்கப்படுகிறது.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 66-வது பிறந்த நாளான 3-6-1989-ஆம் நாள் முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

### நிதி உதவி பெறத் தகுதி உள்ளவர்கள்

நமது மாநிலத்தில் உள்ள ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த பெண்கள், 8-ஆம் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்திருக்க வேண்டும். திருமணத்தின் போது 18-வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும்.

### ஏழைக் குடும்பம் எது?

நிலமற்ற விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவராகவோ அல்லது சிறு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவராகவோ இருக்க வேண்டும். அந்தக் குடும்பத்தற்குச் சொந்த நிலம் இருக்கலாம். அந்த நில உடைமை 2½ ஏக்கர் நஞ்சையாக இருக்கலாம். அல்லது 5 ஏக்கர் புன்செய்யாக இருக்கலாம்.

குத்தகை நிலத்தில் பயிர் செய்யலாம். அவ்வாறு இருந்தால், ஒரு ஏக்கர் குத்தகை நிலம் அரை ஏக்கர் சொந்த நிலத்திற்குச் சமம் என்ற அடிப்படையில் ஒரு குடும்பத்தின் நில உடைமை கணக்கிடப்படும்.

விவசாயம்சாராத வேலைகள் செய்து வாழும் ஏழைக் குடும்பமாக இருக்கலாம். அத்தகைய குடும்பத்தின் ஆண்டு வருமானம் 5000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

### விண்ணப்பம் செய்யும் முறை

ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்பங்கள் இலவசமாகக் கிடைக்கும். வறுமை நிலை, வயது, கல்விச் சான்று ஆகியவற்றை வருவாய்த் துறையினரிடம் பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து, சமூக நலத்துறையைச் சார்ந்த (எக்ஸ்டென்சன் ஆபீசர்) விரிவாக்க அலுவலரிடத்தில் விண்ணப்பத்தைக் கொடுக்க வேண்டும். விண்ணப்பத்திலுள்ள விவரங்கள் சரியானவையா என்பதையும், திருமணம் நிச்சயமாகியுள்ளதா என்பதையும் இவர் கிராமத்திலுள்ள குறைந்தது இரண்டு சாட்சிகளிடமாவது விசாரித்து அறிந்து, விண்ணப்பத்தை ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு (பிடிஓ) அனுப்புவார். ஊராட்சி ஒன்றிய ஆணையர் திருமண உதவி அனுமதி வழங்குவார்.

திருமணத்திற்கு 15 நாள் முன்னதாக ரூ. 5,000 உதவித்தொகை முழுவதுமாக வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முழுப் பொறுப்பு சமூக நலத்துறை இயக்குநரைச் சார்ந்தது. மாவட்டங்களில் மாவட்ட சமூக நல அலுவலர்களும் சென்னையில் மாநகராட்சி ஆணையரும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள்.

இந்தச் சீரிய திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட அனைவரின் ஒத்துழைப்பையும் அரசு அன்புடன் வேண்டுகிறது.



"நகர்ப்புறத்திலும், கிராமப் புறத்திலும் வறுமையில் வாடும் ஏழை எளிய பெண்கள், கர்ப்பவதியாகும் பொழுதும், குழந்தை பெற்ற பின்னரும், உழைக்க முடியாமல், ஊதியம் ஈட்டமுடியாமல் இருப்பதால், அவர்களின் குடும்பங்கள் மேலும் ஏழ்மையில் தவிக்கும் நிலையில் இருந்து வருகின்றன. தேர்தல் அறிக்கையிலே கூறியுள்ளபடி, இதை நிவர்த்தி செய்வதற்காக, அவர்களுக்குக் கர்ப்பவதியான 8-ஆவது மாதத்திலிருந்து குழந்தைபெறும் வரையிலும், குழந்தை பிறந்த பின்னர் 2 மாதக் காலத்திற்கும், மாதம் ரூ.50 உதவித் தொகை மூலம் மொத்தம் ரூ.200 வழங்கப்படும். முதல் இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே இவ்வுதவி அளிக்கப்படும். இந்தத் திட்டத்திற்காக நிதி நிலை அறிக்கையில் ரூ.4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது."

— மாண்புமிகு முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

# டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்

கருவுற்ற தாய்மார்களுக்கு அரசின் நிதியுதவி: 200 ரூபாய் வழங்கப்படுகிறது. இத்திட்டம், 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்' என அழைக்கப்படுகிறது. 3-6-1989 முதல் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது.

**திட்டத்தின் நோக்கம்**

கருவுற்ற பெண்களுக்கு ஊட்டச் சத்து மிகவும் அவசியம். ஆனால், வறுமையின் காரணமாக, கருவுற்ற பெண்கள் போதுமான அளவு ஊட்ட உணவு பெற முடிவதில்லை. உழைக்கவும் இயலவில்லை. இந்தக் குறையினை நீக்கி, அவர்களுக்கு உதவி செய்யும் கருணை உள்ளத்துடன் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது.

குழந்தை பிறப்பதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பிருந்தும், குழந்தை பிறந்த பின் இரண்டு மாதம் வரையிலும் ஆக மொத்தம் நான்கு மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் மொத்தம் 200 ரூபாய் வழங்கப்படும். குழந்தை இறந்தே பிறந்தாலும் இந்நிதி உதவி உண்டு. முதல் இரண்டு பிரசவத்துக்கு இந்த உதவி.

**உதவி பெறத் தகுதி உள்ளவர்கள்**

பதினெட்டு வயது நிரம்பிய ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த, கருவுற்ற பெண்கள் அனைவரும் இத்திட்டத்தினால் பயனடையலாம்.

**ஏழைக் குடும்பம் எது?**

நிலமற்ற விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவராகவோ அல்லது சிறு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவராகவோ இருக்க வேண்டும். அல்லது நில உடைமை இரண்டரை ஏக்கர் நஞ்சை அல்லது ஐந்து ஏக்கர் புன்செய்க்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

குத்தகைதாரர்களுக்கு ஒரு ஏக்கர் குத்தகை நிலம் அரை ஏக்கர் சொந்த நிலத்திற்குச் சமம் என்ற அடிப்படையில், ஒரு குடும்பத்தின் நில உடைமை கணக்கிடப்படும்.

விவசாயம் சாராத குடும்பங்களுக்கு ஆண்டு வருமானம் 5000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

கிராமங்கள், நகரங்களில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் கருவுற்று இருப்பதை, சுகாதார நிலையத்தில் பதிவு செய்து இருக்க வேண்டும். கருவுற்ற தாய்மார்கள் நிதி உதவிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

விண்ணப்பங்களை நிரப்ப சத்துணவு ஊழியர்களும், குழந்தை நல அமைப்பாளர்களும் உதவி புரிவார்கள். விண்ணப்பங்கள் ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி அலுவலகங்களில் இலவசமாகக் கிடைக்கும். வயதுச் சான்று, திருமணத்தின்போது வயது, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான தகுதிச் சான்று ஆகியவை விண்ணப்பத்தோடு இணைக்கப்பட வேண்டும். இந்தத் தகுதிச் சான்றை வருவாய்த் துறையினரிடம் பெறலாம்.

கிராமச் சுகாதாரச் செவிலியர், விண்ணப்பங்களைச் சரிபார்த்து, விசாரித்து, கருவுற்றதைப் பதிவு செய்திருப்பதாகச் சான்றளித்து, உதவித் தொகை அனுமதிக்காக, ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அவற்றை அனுப்புவார். அவர் உதவித் தொகையை அனுமதிப்பார். கிராமச் சுகாதாரச் செவிலியர் அந்தத் தொகையை வழங்குவர்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் முழுப் பொறுப்பு, சமூகநலத் துறை இயக்குநரைச் சார்ந்தது. சென்னையில் மாநகராட்சி ஆணையரும், மாவட்டங்களில் மாவட்டச் சமூகநல அலுவலர்களும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள்.

இந்தச் சீரிய திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட, அனைவரின் ஒத்துழைப்பையும் அரசு அன்புடன் வேண்டுகிறது.



# ஏழை - நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மகளிருக்கு இலவசப் பட்டப் படிப்பு

## ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்

பெண் இனத்தைப் போற்றிப் பெருமைப்படுத்தி வரும் தமிழ்நாடு அரசு, வேலை வாய்ப்பில் அவர்களுக்கு 30 சதவிகித இடஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளதை அனைவரும் அறிவர்.

மகளிர் கல்வி மேன்மையுற, மற்றுமொரு திட்டமாக, இளங்கலைப் பட்டப் படிப்பு வரை கல்வி இலவசம் என அரசு அறிவித்துள்ளது. மகளிருக்கான இந்த இலவசக் கல்வித் திட்டத்திற்கு "ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம் என்று பெயர்.

தமிழகத்திலுள்ள எல்லா ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கும், நடப்புக் கல்வி ஆண்டிலிருந்து (1989-90) எல்லா அரசு மற்றும் தனியார் கலை, அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப் படிப்பு வரை கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது. இப்பொழுது பட்டப் படிப்பில் சேரும் பெண்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த உதவியினைப் பெற, பெற்றோரின் ஆண்டு வருமானம் 12,000 ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது.

இந்தச் சீரிய திட்டம் சிறப்புற நிறைவேற்றப்பட, அனைவரின் ஒத்துழைப்பையும் அரசு அன்புடன் வேண்டுகிறது.



"வேலை வாய்ப்பு, இட ஒதுக்கீடு மட்டும் போதாது. அந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளக் கல்வி வாய்ப்பு தேவை. எனவே, நடுத்தர வர்க்கக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு வரையிலும் இலவசக் கல்வி, வரும் ஆண்டு முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்."

- மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்

# நூல் நயம்

*டாக்டர் மு.வ. வின்*

***சிறுகதைகள் ஆய்வு***

ஆசிரியர்: ச. சுந்தரவல்லி
வெளியீடு: பூர்ணியா பதிப்பகம்
பாரிநிலையம்
184, பிராட்வே,
சென்னை-600108.

விலை: ரூ. 10 பக்கம்-120.

நவீனங்களை உருவாக்கி அவற்றின் வாயிலாக நற்கருத்துக்களை நாட்டில் உலா வரச் செய்த டாக்டர் மு. வ. சில சிறுகதைகளையும் படைத்திருக்கிறார். அவர் எழுதிய சிறுகதைகளின் எண்ணிக்கை மொத்தம் 17 தான் என்றாலும் அவற்றின் வாயிலாக அவர் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விரும்பியிருக்கிறார். குறிப்பாக சமூகத்தில் மண்டிக்கிடக்கும் உயர்வு தாழ்வுகளை நீக்குவதற்குப் பாடுபட்டிருக்கிறார்.

மு.வ. அவர்களின் சிறுகதைப் பாத்திரப் படைப்புகள்-சிறுகதை அமைப்பு-கையாண்டுள்ள உவமைகள்-இப்படிப் பல்வேறு பொருளில் ஆய்வு மனப்பான்மையுடன் இந்நூலை உருவாக்கியுள்ளார், ஆசிரியர். மு.வ. வின் உள்ளம் ஓவியமாகத் தீட்டிக் காட்டப் பட்டுள்ளது, இந்நூலின் உதவியினால்! நூலின் நடை இதமாக உள்ளது. மறைந்த மு.வ. இந்நூலினால் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று சொல்லலாம்.

***நினைக்கத் தெரிந்த மனமே***

ஆசிரியர்: பாஸ்கரதாசன்
வெளியீடு: சுதா பப்ளிகேஷன்.
32/2 கானா பாக் தெரு
திருவல்லிக்கேணி,
சென்னை-5.

விலை ரூ. 8. பக்கம்-100

ஒன்பது தலைப்புகளில் எழுதப் பெற்ற கட்டுரைகளைக் கொண்ட இந்நூலில் பல இடங்களில் கவியரசர் கண்ணதாசன் நினைவுகூரப்படுகிறார். கவியரசரின் சிந்தனைகளை முன்மாதிரியாக வைத்து இந்த நூல் மாளிகை உருவாக்கப்பட்டுள்ளது.

எடுத்துக் கொண்ட பொருள் குறித்து ஆய்வு நடத்தி, படிப்போர் ஒப்புக் கொள்ளும் வகையில் வார்த்தைகளை நெய்திருக்கிறார் நூலாசிரியர். இனிய எளிய நடை தெளிவான-ஆணித்தரமான கருத்துரை-இவை நூலாசிரியரின் உடைமை என்பதை இந்நூல் நிறுவுகிறது.

***உலகச் சிந்தனையாளர் லெனின்***

ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்
வெளியீடு: குமரிப் பதிப்பகம்,
8, நீலா தெற்கு வீதி,
நாகப்பட்டினம்-611001.

விலை ரூ. 10 பக்கம்-120

சோவியத் ரஷ்யாவின் மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த மாவீரர் லெனின் அவர்களின் வாழ்க்கையைச் சுருக்கமாகவும் அவரது போதனைகளை தத்துவங்களை விரிவாகவும் எடுத்துச் சொல்கிறது இந்நூல்

தத்துவங்களுக்கு ஏற்ற வகையில் தலைப்புகள் தரப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

எவருக்கும் புரியும் வகையில் எளிய நடையை நூலாசிரியர் கையாண்டிருக்கிறார் என்பது போற்றுதலுக்குரியது.

-தமிழ்ப்பித்தன்.

**மேற்குத் தமிழக நாட்டுப் புறவியல்-ஓர் ஆய்வு**

ஆசிரியர்: 'செங்கோ' வரதராசன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
சென்னை-600 098.

விலை: ரூ.30 பக்கம்:347

நாட்டுப்புறக் கலை, ஒரு தனிக்கலையாகவே விளங்கி வருகிறது. தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பாமர மக்களிடையே பாடப்படும இந்தப் பாடல்கள் சுவையானவை; கேட்க இனிமையானவை. அதே சமயத்தில் அந்தந்த வட்டார வழக்குகளும், வாழ்க்கைப் பிரச்சினைகளும் பாடல்களில் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த நூலில் தொகுக்கப்பெற்றவை, கொங்கு நாட்டைப் பற்றியதாகும். படித்துச் சுவைக்க வேண்டிய நூல்.

— பி.வி.கிரி.

**தமிழ்த் தீபம்**

ஆசிரியர்: கவிஞர் ஆ. சக்திவேல்
வெளியீடு: கந்தம்மாள் இல்லம்,
காக்க நல்லூர்,
அம்பா சமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி
கட்டபொம்மன் மாவட்டம்,

பக்கம். 68 விலை ரூ.6.75

'தவறிருந்தால் பொறுத்தருள்வீர், தன் மனதால் கருத்தருள்வீர்' என்று முன்னுரையிலேயே எழுதியிருக்கிறார் ஆசிரியர். ஆகவே, புத்தகப் பெயரே 'தமிழ் தீபம்' என ஒற்றெழுத்தின்றி வைக்கப்பட்டுள்ள பிழையைப் பொறுப்போம்.

இந்நூலில் 108 பல்வேறு தலைப்புகளின் கீழான கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. மரபுக் கவிதைகளை விட, இசைப்பாடல் நாட்டமே அதிகமுள்ளவர் ஆசிரியர் என்று தெரிகிறது. இந்த நூலில் உள்ளவற்றில் பெரும்பாலானவை சந்தப் பாடல்களேயாகும்.

பாடல்களில் தமிழ் மீதான காதலும், மூடத்தனங்களின் மீதான வெறுப்பும் வெளிப்படுகின்றன. முதல் முயற்சியானாலும் நல்ல முயற்சி.

**மணக்கும் மலேசியா**

ஆசிரியர்: கடலூர் மணிமாறன்
வெளியீடு: விடியல் வெளியீட்டகம்,
109, மேலைத் தெரு,
கிருட்டிணராயபுரம்-639102,
திருச்சி மாவட்டம்.

பக்கம்:176 விலை ரூ.16.00

உலகத் தமிழ் மாநாடு இரண்டாம் முறையாக 1988-இல் மலேசியாவில் நடந்த போது, அதில் கலந்து கொள்ளச் சென்று தமிழகம் திரும்பிய தமது பயணத்தைச் சுவை சேர்த்து-அந்நாட்டின் வளம் சேர்த்துச் சொல்லியிருக்கிறார் நூலாசிரியர்.

மலேசியா நாட்டுக்குச் சென்று சேர்வது, உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றிய விளக்கம், சிங்கப்பூரின் மேன்மை, நூலாசிரியருக்கு அங்கெல்லாம் கிடைத்த வாழ்த்துரைகள் என இந்நூல் நான்கு இயல்களாக நடத்தப்பட்டுள்ளது.

-'சோழராஜா'



# தெலுங்கு கங்கைத் திட்டம்:

## ஆந்திர முதல்வருடன் தமிழக முதல்வர் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றி

சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான தெலுங்கு-கங்கைத் திட்டம் குறித்து மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என்.டி. ராமாராவ் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 18-6-89 அன்று காலை ஐதராபாத் வருகை தந்தார்கள். ஆந்திர முதல்வர் இல்லத்தில் அப்பேச்சு வார்த்தை நடைபெற்றது. தமிழக முதல்வரை ஆந்திர முதல்வர் தமது வீட்டு வாசலிலேயே வரவேற்று அழைத்துச் சென்றார்கள். பேச்சுவார்த்தையில் இரண்டு மாநில முதலமைச்சர்களும், மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன், மாண்புமிகு ஆந்திர மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ராமநாராயண ரெட்டி மற்றும் இரண்டு மாநில அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். முதலில் அதிகாரிகள் உட்பட பேச்சுவார்த்தை நடைபெற்றது. பின்னர் இரு மாநில முதலமைச்சர்களும் தனியாகச் சந்தித்து உரையாடினார்கள். பின்னர் இரு மாநில முதலமைச்சர்களும் செய்தியாளர்களைச் சந்தித்தார்கள். முதலில் ஆந்திர முதலமைச்சர் செய்தியாளர்களிடையே கூறியதாவது: ''சென்னைக்குக் குடிநீர் தரவேண்டுமென்ற திட்டம் எப்பொழுதோ முடிவு செய்திருந்தாலும், தெலுங்கு தேசக் கட்சி ஆட்சிக்கு வரும் வரையில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. தெலுங்கு தேசக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் அப்போதிருந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரோடு கலந்துபேசி, இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரைச் சென்னைக்கு வரவழைத்து, அவரது கையால் இந்தத் திட்டத்திற்கு 30 கோடி ரூபாய்க்கான காசோலை என்னிடம் வழங்கப்பட்டது. இதுவரையில் தமிழ்நாடு அரசு 180 கோடி ரூபாய்





**தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றி 18.6.89 அன்று ஐதராபாத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என்.டி. ராமாராவ் அவர்களும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு முரசொலி மாறன் ஆகியோர் உடன் உள்ளனர்.**

இந்தத் திட்டத்திற்காகக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் 47 கோடி ரூபாய் மட்டும் இதுவரையில் கொடுத்துள்ளது.

''இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்திக்குப் பயந்து கொண்டு எம்.ஜி.ஆர். இந்தத் திட்டத்தில் அதிக அக்கறை காட்டாமல் இருந்தார். அப்போது தமிழகத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் அவர்கள், இந்தத் திட்டத்தை வலியுறுத்தி, 'ஏன் முதலமைச்சர் இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதில் தயக்கம் காட்டுகிறார்கள்' என்றும், உடனடியாக தெலுங்கு கங்கைத் திட்டத்தை அமல்படுத்த தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சட்டமன்றத்தில் பேசினார்.

''இப்போது தமிழக முதலமைச்சராகக் கலைஞர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இத்திட்டத்தைத் தொடங்குவதற்காக ஐதராபாத் வந்து 20 நிமிடப் பேச்சுவார்த்தையிலேயே சுமுகமாகப் பிரச்சினை முடிவுற்று, 1992-93-ஆம் ஆண்டுக்குள், தமிழகத்திற்குத் தண்ணீர் கிடைப்பதற்கான ஒப்பந்தத்தை இன்று நிறைவேற்றியுள்ளோம்.

இந்த ஆண்டுக்கான ரூ.60 கோடியில், உடனடியாக 30 கோடி ரூபாய் வழங்குவது என்றும், 31-3-90க்குள் மீதி 30 கோடி ரூபாயை வழங்குவது என்றும் தமிழக அரசு ஒத்துக் கொண்டுள்ளது. பழைய பாக்கி 137 கோடி ரூபாயைத் திட்டம் முடிவடைவதற்குள் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறும். இந்தப் பேச்சுவார்த்தையில் எங்களோடு கலந்து கொண்ட தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுக்கும், முரசொலி மாறன், எம்.பி. அவர்களுக்கும், ஆந்திர மாநிலப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. ராமநாராயண ரெட்டி அவர்களுக்கும் மற்றும் இரண்டு மாநில அரசாங்க அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இந்தப் பேச்சுவார்த்தை 20 நிமிடத்திலேயே முடிவுற்றது. இந்த 20 நிமிடத்திலே முடியக் கூடிய பிரச்சினைதான் இத்தனை ஆண்டுக்காலமும் பேசப்படாமல் இருந்தது. மனதிருந்தால் எல்லாம் நடக்கும் என்பதற்கு இதுவே எடுத்துக்காட்டு.''

பின்னர் செய்தியாளர்களிடம் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறியதாவது:

''மிகுந்த உற்சாகத்தோடு ஆரம்பிக்கப்பட்டு இடையில் நின்றுவிட்ட தெலுங்கு கங்கைத் திட்டத்தை மீண்டும் தொடருவதற்குத் துணைநின்று சில நிமிட நேரங்களிலேயே அதற்கு ஒரு தீர்வு காண ஒத்துழைத்த ஆந்திர முதல்வர் என்.டி.ஆர். அவர்களுக்கும், ஆந்திர பொதுப்பணித்துறை அமைச்சர் ராம நாராயணரெட்டி அவர்களுக்கும், ஆந்திர மாநில அரசு அதிகாரிகளுக்கும், தமிழ்நாட்டுப் பெருமக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். பகீரதன் கங்கையைக் கொண்டுவர மிகவும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. இப்போது எந்தவிதப் பகீரதப் பிரயத்தனமும்படாமல் தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்த பேச்சுவார்த்தையை நாங்கள் பேசி முடித்துள்ளோம்.

''இந்த தெலுங்கு கங்கைத் திட்டத்தில் கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரம், தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்கள் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் இதற்குப் பெயர் தெலுங்கு கங்கைத் திட்டம் என்றிருந்தாலும், திராவிட கங்கைத் திட்டம் என்பதே மிகவும் பொருத்தமாகும்.

சில நிமிட நேரங்களிலேயே இந்தப் பிரச்சினையைப் பேசி முடிக்க உதவியாக இருந்த ஆந்திர முதலமைச்சர், என்னுடைய அருமைச் சகோதரர் என்.டி.ஆர். அவர்களுக்கும், ஆந்திர மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் ராமநாராயண ரெட்டி அவர்களுக்கும், ஆந்திர மாநில அரசு அதிகாரிகளுக்கும் மீண்டும் ஒரு முறை தமிழ்நாட்டுப் பெருமக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் செய்தியாளர்களிடம் பேசினார். பின்னர் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், தமிழக முதல்வர் அளித்த பதில்களும் வருமாறு:

**செய்தியாளர்:** திட்டம் எப்போது முடிவடையும்?

**கலைஞர்-என்.டி.ஆர்.:** 1992-93 ஆண்டிற்குள் முடிவடைந்து சென்னைக்குத்தண்ணீர் கிடைக்கும்

**செய்தியாளர்:** எம்.ஜி.ஆர். முன்பு பணம் தராமல் இருந்ததற்கும் இப்போது நீங்கள் பணம்தர ஒப்புக் கொண்டதற்கும் என்ன காரணம்?

**முதல்வர் கலைஞர்:** அதற்குக் காரணம் அலட்சியம். இதற்குக் காரணம் ஆர்வம்.

**செய்தியாளர்:** அரசியல் காரணமாகத் தான் எம்.ஜி.ஆர் பணம் தரவில்லையென்று கூறப்படுவது குறித்து என்ன சொல்கிறீர்கள்.?

**முதல்வர் கலைஞர்:** பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்துள்ள நேரத்தில், அதையெல்லாம் பேசவேண்டியதில்லை.

**செய்தியாளர்:** அவர்கள் பாக்கி வைத்திருந்த பணத்தையும் இப்போது நீங்கள் கொடுகிறீர்களா?

**முதல்வர் கலைஞர்:** அவர்கள் 3 ஆண்டுக்காலமாக எந்தப் பணமும் கொடுக்கவில்லை. இப்போது நாங்கள் 60 கோடி ரூபாய் மொத்தமாகக் கொடுக்கிறோம். 92-93-ஆம் ஆண்டிற்குள், திட்டமானது முடிவடையக் கூடிய விதத்தில் மீதித் தொகையும் தரப்படும். 3 ஆண்டுக்கான பாக்கியை உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்று என்.டி.ஆர். வற்புறுத்தாததற்குக் காரணம் அவருடைய பெருந்தன்மையாகும்.

# இருபதே நிமிடத்தில் இணையற்ற சாதனை!

**செய்தியாளர்:** ''பாக்கிப்பணம்'' 'இன்டரஸ்ட்' (வட்டி) உடன் தரப்படுமா?

**முதல்வர் கலைஞர்:** இந்தத் திட்டம் மக்களின் 'இன்டரஸ்ட்' (நன்மைக்காக) உடன் செய்யப்படுகிறது.

தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றிப் பேசவந்த மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, ஐதராபாத் விமான நிலையத்தில் அங்கு வாழும் தமிழர்களின் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சருடன், உணவு அமைச்சர் திரு. ஆற்காடு என். வீராசாமி அவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களும் சென்றிருந்தனர். விமான நிலையத்தில் தெலுங்கு தேசக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. பி. உபேந்திரா, ஆந்திர மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ராமநாராயணரெட்டி ஆகியோர் வரவேற்றார்கள்.

முன்னதாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, ஆந்திர முதல்வர் திரு. என்.டி. ராமாராவ் அவர்கள் தனது இல்லத்தில் காலை உணவு அளித்தார்கள்.

## மிகப்பிற்படுத்தப்பட்டோருக்காக உழைப்பது எங்கள் இரத்தத்தில் ஊறிப்போன உணர்வு

''இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் நம்முடைய மாநிலத்திலே முதன் முதலாக அறிமுகம் செய்யப்பட்டது 1927-ஆம் ஆண்டு என்றால், அதை அறிமுகம் செய்த கட்சி, இன்றைக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்காக, இட ஒதுக்கீட்டிற்காக வாதாடுகிற, போராடுகிற, குரல் கொடுக்கிற எந்தக் கட்சியுமில்லை. இவைகள் அன்றைக்கு அந்தப் பட்டியலிலே கிடையாது. அன்றைக்கு இதற்காகக் குரல் கொடுத்த ஒரேஒரு கட்சி, நீதிக் கட்சிதான் என்பதையும், அந்த நீதிக் கட்சியின் தலைவர்களிலே ஒருவரான மூதறிஞர் முத்தையா முதலியார் தான் இந்தக் கம்யூனல் ஜி.ஓ. முறை இந்த மாநிலத்திற்குத் தேவை என்கின்ற அந்தக் குரலை எழுப்பியவர், அதற்கான வழிவகை செய்தவர் என்பதை நீங்கள் யாரும் மறந்திருக்க இயலாது.

''அந்த வழியிலே வந்த திராவிடர் இயக்கம், இன்றைக்கு அரசியல் ரீதியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தி.மு. கழகம், அந்தக் கழகத்தின் சார்பிலே ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருக்கின்ற நாங்கள், இந்தச் சமூகத்திற்காக இத்தகைய நிலைகளை எடுத்திருக்கின்றோம் என்று சொன்னால், இது ஒன்றும் வியப்படைவதற்குரியதல்ல; பாராட்டுக்கு உரியதும் அல்ல. காரணம் எங்களுடைய ரத்தத்தோடு ஊறிப் போயிருக்கின்ற ஒரு உணர்ச்சியை, நாங்கள் இன்றைக்குச் செயலாற்றிக் காட்டுகிறோமே தவிர, இதற்குப் பாராட்டு தேவையில்லை; எங்களுடைய கடமையை நாங்கள் செய்கிறோம், தொடர்ந்து செய்து கொண்டே இருப்போம்!''

*-(சென்னை வள்ளுவர் கோட்டத்தில், 15.6.89 அன்று நடந்த மிகப்பிற்பட்டோர் நலக் குழுவின் பாராட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)*

## தெலுங்கு கங்கைத் திட்டம்:

# தமிழக அரசின் பணிகள் உடனடியாகத் துவங்கும்

தெலுங்கு கங்கைத் திட்டம் நிறைவேறுவதற்குத் தமிழக எல்லையில் அரசின் பணிகள் உடனடியாகத் துவங்கும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கூறினார்.

ஐதராபாத்திலிருந்து 18-6-89 அன்று இரவு முதல்வர் அவர்கள் சென்னை திரும்பியதும், விமான நிலையத்தில் தம்மைச் சந்தித்த செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அதன் விவரம் வருமாறு:

**செய்தியாளர்:** தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு?

**முதல்வர் கலைஞர்:** ஆந்திர மாநில எல்லைக்குள் ஒப்பந்தப்படி 870 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காகச் செலவாகும். அதில் தமிழ்நாட்டின் பங்கு 251 கோடி ரூபாய். ஆந்திர அரசின் பங்கு 619 கோடி ரூபாய். ஆந்திர அரசு அவர்கள் பங்கில் இதுவரை செலவு செய்திருப்பது 233 கோடி ரூபாய்.

தமிழக அரசு 251 கோடியில் இதுவரை 47 கோடி தான் கொடுத்திருக்கிறது. கடந்த மூன்றாண்டுகளாக எதுவும் கொடுக்கவில்லை. ஆந்திர அரசின் சார்பில் அதை வலியுறுத்திக் கேட்டார்கள். அதைக் கொடுத்தால்தான் மேற்கொண்டு திட்டத்தை நிறைவேற்ற முடியுமென்று சொன்னார்கள். அதைத்தான் இன்று பேசி, சென்ற ஆண்டு தர வேண்டிய 27 கோடியைத் தருகிறோம். இந்த ஆண்டுக்கு 33 கோடி சேர்த்து ஆக மொத்தம் 60 கோடியில் இப்போது 30 கோடி தருகிறோம். மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள்- மார்ச் 31-ஆம் தேதிக்குள்- மீதமுள்ள 30 கோடி கொடுக்கவிருக்கிறோம்.

மீதியுள்ள 144 கோடியை-1990-91-ஆம் ஆண்டிலும், 1991-92-ஆம் ஆண்டிலும், இறுதியாக 1993-ஆம் ஆண்டிலும் கொடுப்பதாகக் கூறி இரண்டு அரசுகளின் சார்பிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது ஆந்திர மாநில எல்லை வரை ஆகக்கூடிய செலவு விவரம், பிறகு ஆந்திர எல்லையிலிருந்து சென்னை நகருக்கு வர மேலும் 65 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

அதற்குப் பிறகு சென்னையிலே தண்ணீரைச் சுத்திகரிப்பு செய்யவும், சென்னை மாநகருக்குள் வினியோகம் செய்யவும் ஆகக் கூடிய மொத்தச் செலவு சுமார் 400 கோடி ரூபாய்.

இன்று எடுக்கப்பட்ட முடிவுகளின் பேரில், இரண்டு அரசாங்கங்களின் சார்பிலும் இரு தரப்பு அதிகாரிகளும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள்.

**செய்தியாளர்:-** 12 டி. எம். சி. தான் கிடைக்குமா?

**முதல்வர் கலைஞர்:-** ஆமாம். மகாராஷ்டிரம் 5 டி. எம். சி., ஆந்திரா 5 டி. எம். சி., கர்நாடகம் 5 டி. எம். சி., ஆக மொத்தம் 15 டி. எம் சியில், மூன்று டி. எம். சி. சேதாரம் போக, 12 டி. எம். சி. நமக்குக் கிடைக்கும்

**செய்தியாளர்:-** அடுத்த தொடர்க் கூட்டம் ஏதாவது?

**முதல்வர் கலைஞர்:-** Liasion Committee என்று ஒன்று உள்ளது. இது மூன்றாண்டுகளாகக் கூடவில்லை. இந்தக் குழுவில் இரண்டு மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் பொறியாளர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். இனி அடிக்கடி இந்தக் குழு கூடி பணியின் முன்னேற்றத்தை ஆராய்ந்து துரிதப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும். அந்தக் குழு இப்போது வருகிற 6-ஆம் தேதி மீண்டும் முதல் தடவையாகக் கூடுகின்றது. இந்தக் கூட்டம் சோமசீலாவில் நடைபெறும்.

மேலும் இந்தக் கால்வாய் வேலைகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, தமிழ்நாட்டு எல்லைக்குள் நடைபெற வேண்டிய பணிகளையும், சுத்திகரிப்பு மற்றும் விநியோகம் ஆகிய பணிகளையும் இப்போதே தொடங்குவதற்கான முயற்சிகளையும், அதற்கான நிதி ஆதாரம் பெறுகின்ற வழி வகைகளையும் உடனடியாகத் தமிழக அரசு மேற்கொள்ளும்.

மேலும், ஐதராபாத் செய்தியாளர்கள் கூட்டத்திலேயே நான் ஆந்திர மாநில முதலமைச்சர் என். டி. ஆர். அவர்களுக்கும். ஆந்திர மாநில அரசு அதிகாரிகளுக்கும் தமிழ்நாட்டின் சார்பாக நன்றி கூறியிருக்கிறேன். இப்போது தமிழ்நாட்டிலிருந்து உங்கள் மூலமாகவும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறிக் கொள்கிறேன்.

-இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் பேட்டியளித்தார்.



# அறிவாலயம்

1890-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, இன்று 36,000 வாசகர்களைக் கொண்டு செவ்வனே இயங்கி வரும் கன்னிமாரா பொது நூலகம் பற்றிய கட்டுரை இது. இதன் அருமை பெருமை பற்றி விளக்குகிறார் இந்நூலகத்தின் நூலகர்.

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மிகப் பழமையான நூலகங்களுள் ஒன்று கன்னிமாரா பொது நூலகம். இந்நூலகம் 1890-ஆம் ஆண்டு சென்னை மாநில ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபுவின் திருக்கரத்தால் அடிக்கல் நாட்டப்பட்டு அவர்களது பெயராலேயே நிறுவப்பட்டு, நாளும் வளரும் சென்னை மாநகரின் மக்களுக்கு, கடந்த பல ஆண்டுகளாகச் சீரிய முறையில் பணியாற்றி வருகிறது.

இந்நூலகம் முதலில் குறிப்புதவிப் பணி நூலகமாகப் பணியாற்றி வந்தது. நூல்கள் இரவல் வழங்கும் முறை 1930-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. 1930-31 ஆம் ஆண்டு முதல் "திறந்த அமைப்பு" (Open access) முறையில் இந்நூலகம் செயல்பட்டு வருகிறது.

சென்னை நூலகச் சட்டத்தின்படி 1950-ஆம் ஆண்டு முதல் மாநில-மைய நூலகமாகப் பணியாற்றி வருகிறது. 1954 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நூல் வழங்கும் சட்டத்தின்படி தேசியச் சேமிப்பு (Depositary) நூலகங்களில் ஒன்றாக அறிவிக்கப் பட்டது. 1956-ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோ (UNESCO) வெளியீடுகள் பெறும் மையமாகவும் மற்றும் ஐக்கிய நாடுகள் பேரவையினரால் வெளியிடப்படு வெளியீடுகளைப் பெறும் அமைப்பாகவும் இருந்து செயலாற்றி வருகின்றது.

1974-ஆம் ஆண்டு இந்நூலகத்திற்குப் புதிதாக மூன்று மாடிக் கட்டடம் கட்டப் பட்டு, சீரிய முறையில் பணியாற்றி வருகிறது.

இந்நூலகம் காலை 8 மணி முதல் இரவு 8.00 மணி வரையில் ஆண்டின் மூன்று தேசிய விடுமுறை நாட்களைத் தவிர ஏனைய நாட்களெல்லாம் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

இந்நூலகம் பல அரிய பணிகளைச் செவ்வனே செய்து வருகிறது. இவற்றுள் குறிப்புதவும் பணி (Reference) மிக முக்கியமான பணியாகும். மாணவ, மாணவியர்க்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இந்நூலகம் மிகுந்த உதவியாக உள்ளது. இந்நூலகத்தின் தனித்தன்மையானது, வாசகர்களைத் தன்பால் ஈர்த்து இந்நாட்டின் கல்வி மறு மலர்ச்சிக்குச் சிறந்த பணியாற்றி வருகிறது.

-வே. மோகன்தாஸ் முருகேசன்
நூலகர்
கன்னிமாரா பொது நூலகம்

இந்நூலகத்தில் பாடநூற்பிரிவு, பருவ இதழ்கள் (Periodicals) மற்றும் செய்தி நாளிதழ்கள் பிரிவு, இந்திய மொழிகளில் உள்ள நூல்கள் பிரிவு, குறிப்புதவிப் பகுதி, வீட்டு வழி நூலகப் பிரிவு, படிகள் எடுக்கும் பிரிவு (Xerox) ஆகியவை உள்ளன. இந்நூலகத்தின் மொழிப் பிரிவில். நமது நாட்டின் அனைத்து மொழிகளிலும் வெளியாகும் புத்தகங்கள் மொழிவாரியாக அடுக்குகளில் பொருள் பகுப்பு வாரியாக அடுக்கப் பட்டுள்ளன.

இந்நூலகத்தில் 119 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களுள் நூலகவியல் பயிற்சி பெற்றவர்களும் உள்ளடங்குவர்.

வாசகர்கள் நூல்களை இரவல் பெற்றுப் பயன்பெற உறுப்பினர் அட்டை வழங்கப் படுகிறது. இதன்மூலம் புத்தகங்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்று படிக்கத்தக்க வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நூலகத்தின், பழைய கட்டடத்தில் கிடைத்தற்கரிய பல பழைய நூல்கள் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இப் பிரிவில் 1930-ஆம் ஆண்டுக்கு முந்தையக் காலத்தில் வெளியான நூல்கள், பருவ இதழ்கள், ஆண்டு அறிக்கைகள், மக்கள்

# இந்த நூலகம்...

**க**ன்னிமாரா பொது நூலகத்தில் ஆங்கிலத்தில் எல்லா இந்திய மொழிகளிலும் ஏறத்தாழ நான்கு இலட்சம் நூல்கள் உள்ளன. இந்தியாவில் வெளியாகும் நூல்கள், பருவ இதழ்கள், செய்தித் தாள்கள் ஆகியவற்றின் ஒரு படியினை இலவச மாகப் பெறும் தகுதியுள்ளது இந்நூலகம். சுமார் 150 அயல்நாட்டுப் பருவ இதழ்களும் வாங்கப்படுகின்றன. இவையனைத்தும் பருவ இதழ்ப் பிரிவில் வாசகர்களின் பார்வைக்கு மேசை மீது வைக்கப்படுகின்றன. பின், பயனுள்ள பருவ இதழ்கள் கட்டுமானம் செய்யப் பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

நூல் இரவல் வழங்கும் பணி, சென்னை நகர எல்லைக்குள்ளும், அதன் அருகேயுள்ள சுற்றுப்புறங் களிலும் வாழ்ந்து வரும் பதினைந்து வயது நிரம்பிய எவரும் நூலகரின் ஒப்புதலுடன், இந்நூலகத்தின் உறுப்பினராகச் சேரலாம். அவ்வுறுப்பினர் ரூ. 20 அல்லது ரூ. 40 அல்லது ரூ. 60 முன்பணம் செலுத்தி ஒரே நேரத்தில் முறையே ஒன்று, இரண்டு அல்லது மூன்று நூல்களை இரவலாகப் பெற்றுச் செல்லலாம். இரவல் பெற்ற நூல்களை இரு வாரங்களுக்குப் பயன் படுத்தலாம். உறுப்பினராகச் சேர விரும்புவோர், அதற்கென உள்ள உறுப்பினர் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து பொறுப்பான ஒருவரிடம் சான்றொப் பமும் பெற்று உறுப்பினராகலாம்.

குறிப்புதவிப்பிரிவில் இந்திய மொழிகள் மற்றும் ஆங்கில மொழிக் கலைக்களஞ்சியங்கள் வைக்கப்பட் டுள்ளன. இவற்றைக் குறிப்பெடுப்பதற்கு மட்டுமே பயன்படுத்தலாம். எக்காரணம் கொண்டும் இரவல் வழங்கப்படமாட்டாது.

1930-ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளியிடப்பட்ட நூல்களும், கிடைப்பதற்கரிய பழைய நூல்களும், கட்டுமானம் செய்யப்பட்ட முந்தைய பருவ இதழ்களும், அரசிதழ்களும், ஆய்வுக்குரிய நூல்களும், விலை யுயர்ந்த நூல்களும் இங்குப் பாதுகாக்கப்படுகின்றன. இவைகளை வாசகர்கள் கேட்டு வாங்கிப் படித்துப் பயன்பெறலாம். அவை நூலகரின் தனி அனுமதியின் பேரில் இரவல் வழங்கப்படும். அண்மைச் சேர்க்கைப் பிரிவு - இப்பிரிவில் வாரந்தோறும் சுமார் 150 புதிய நூல்கள் சேர்க்கப்பட்டு வாசகரின் பார்வைக்கு வைக்கப்படும். நான்கு வாரங்களுக்குப் பின்னர் அவை அடுக்குகளில் அடுக்கப்பட்டு இரவலுக்கு வழங்கப் படும். இவற்றைத் தனித்தேர்வு செய்து பின் இரவல் பெற்றுச் செல்லலாம்.

முதல் தளத்தின் இடதுபுறம் உள்ள அறையில் பாடநூற் பிரிவு இயங்குகிறது. இங்கு, கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்க்குத் தேவையான பாட நூல்கள் உள்ளன. அவற்றை மாணவர் இரவல் பெற்றுப் படித்துப் பயன்பெறலாம்.

இவ்வாறு எல்லா வகைகளிலும் தமிழ்நாட்டின் தலை சிறந்த நூலகமாகத் திகழும் கன்னிமாரா பொது நூலகம், வாசகப் பெருமக்களுக்குப் பயனுள்ள பணி களைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வருகிறது.

இந்நூலக விடுமுறை நாட்கள்: 1. இந்தியக் குடியரசு தினம், 2. இந்திய சுதந்திர தினம், 3. அண்ணல் காந்தியடிகள் பிறந்த தினம்.

கணக்கெடுப்பு அறிக்கைகள் (Census) ஆகியவை சீரிய முறையில் பாதுகாக்கப்படு கின்றன.

இந்நூலகத்தில் பெறப்பட்ட தமிழ் நூல்களின் 'நூல் தொகுப்பு' ஆண்டுதோறும் வெளியாகி வருகின்றது.

1896-97-இல் இதன் வாசகர்கள் 10,880 பேர். ஆனால் 1987-88-இல் 7,04,890 ஆக வாசகர்கள் பெருகியிருக் கிறார்கள்.

இதேபோல, 1950-51-இல் இதன் உறுப்பினர் தொகை 2,269 பேர்கள் மட் டுமே. ஆனால் இன்றோ 36,275 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

சிறந்த சமுதாயத்தை அமைத்திட நூலக ஊழியர்கள் - வாசகர்கள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து [illegible] அரசும், கல்வித் துறையும் வரும் ஆண்டு களின் நல்ல பல திட்டங்கள் மூலம் நாட் டுக்குக் கடமையாற்ற இருக்கின்றன.

அறிவாலயமாக விளங்கும் இந்நூலகத் தைப் பொதுமக்கள் அனைவரும் பயன் படுத்தி மேன்மையுற வேண்டும்.





# சிறிய சுயசரிதம்

**ஆ**சை வெட்கம் அச்சம் துன்பம்
பாசம் பற்று பதவி உதவி
காதல் கடமை கவனம் மறதி
ஈதல் பெறுதல் ஏற்றம் இறக்கம்
எத்தனை எத்தனை படிகளில் ஏறி
இத்தனை வயதை எய்திவிட் டேன்நான்!

கடவுளை ஒருநாள் கல்லென் றவனும்
கல்லை ஒருநாள் கடவுளென் றவனும்
உண்டென் றதனை இல்லையென் றவனும்
இல்லையென் றதனை உண்டென் றவனும்
உயர்பெரும் தாணியில் ஒருவன் ஒருவனே
நானே என்பதை நன்றாய் அறிவேன்.

ஆற்றிலும் குளித்தேன் சேற்றிலும் குளித்தேன்
காற்றில் பறந்தேன் கல்லிலும் நடந்தேன்
ஊற்றுப் புனலில் ஒளியினைக் கண்டேன்
மாற்றுப் பொன்னிலும் மாசினைப் பார்த்தேன்
பார்த்தது கோடி பட்டது கோடி
சேர்த்தது என்ன? சிறந்த அனுபவம்.

அறிவும் தெளிவும் ஆய்ந்திடும் பண்பும்
தணியாக் கல்வித் தாகமும் விடுத்து(க்)
கற்றேன் சிலநூல் கற்றவை யெல்லாம்
மற்றவர்க் கெனவே வடித்துவைக் கின்றேன்
பெற்றவை என்ன? பேரும் புகழும்!
பெறப்போ வதுவோ பெரியவன் பாதம்!



வேதம் கீதை விளங்குப நிடதம்
ஆதித் திருக்குறள் அற்புதக் கம்பன்
எத்தனை கற்றும் ஏறி இறங்கியும்
தன்னைப் பற்றிஓர் தனியா ராய்ச்சி
நடத்திக் கொள்பவன் நல்வினை யடைவான்
என்னைப் பற்றியான் எண்ணிடுங் காலை
சிரிப்பும் அழுகையும் சேர்ந்தே பிறக்கும்

மனைவிய ரென்றும் மக்கள் என்றும்
துணைவர்க ளென்றும் தோழர்க ளென்றும்
நன்மை தீமைகள் நாலும் பார்த்தவன்
மென்மை வன்மை மேன்மைகள் கண்டவன்
புண்ணும் புஷ்பமும் பூத்த திருமகன்
கண்ணனுக் காகவே காத்திருக் கின்றான்.

காலம் வருமுன் காலனும் வருமுன்
காணும் உறவினர் கதறியே அழுமுன்
ஆலம் விழுதாய் ஆயிரம் விழுதுகள்
எழுதி எழுதி என்னையான் ரசிப்பேன்
யானே யானாய் எனக்குள் அடங்கினேன்
வானும் மண்ணும்என் வாழ்வைஎன் செய்யும்?

நன்றி: கல்கி

## கவியரசர் கண்ணதாசன்

(கவியரசர் கண்ணதாசன் பிறந்தநாளை (ஜூன் 24) யொட்டி இந்தக் கவிதை வெளி யிடப்பெறுகிறது)

# வளரும் வேளாண்மை

○○ நமது நாட்டின் உயிர் நாடியாக விளங்குவது வேளாண்மை. வேளாண்மையில் இன்று பல யுக்திகள் கையாளப்படுகின்றன. அறிவியலின் துணை கொண்டு அமோக விளைச்சல் பெற வழி வகுக்கப்படுகின்றன. வளரும் வேளாண்மையை விளக்குகிறது இக் கட்டுரைத் தொகுப்பு.

## எள்ளைத் தாக்கும் காய் நாவாய்ப் பூச்சிகள்

எள்ளைத் தாக்கும் பல வகைப் பூச்சிகளுள் காய்களைத் தாக்கும் நாவாய்ப் பூச்சிகள் முக்கியமான ஒன்றாகும். (எள் பயிரிடப்படும் தென்னார்க்காடு மாவட்டத்தில் 'எள் குடையான்' என்று முதலில் அழைக்கப்பட்ட இவை நாளடைவில் மருவி 'எக்கடையான்' என்றும் எக்கட்டான் என்றும் அழைக்கப்படுகிறது). எள் செடிகளை அறுவடைக்குப் பின் கட்டுக் கட்டாக அடுக்கிப் போர் வைக்கும் பொழுது இந் நாவாய்ப் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாகக் காணப்படுகிறது. எள் கட்டுகளைப் பிரித்து உலர்த்தும் போது ஆயிரக் கணக்கில் நாவாய்ப் பூச்சிகள் உடனடியாக மறைவிடங்களில் ஒளிந்து கொள்கின்றன.

ஆண், பெண் பூச்சிகள் பகல் நேரத்தில் இணைந்து பெண் பூச்சிகள் நிழல் நிறைந்த பணற்பாங்கான கால்வாய் ஓரங்களில் முட்டைகளை இரவு நேரங்களில் குவியலாக மண்ணில் இடும். ஒவ்வொரு முட்டைக் குவியலிலும் 5-10 முட்டைகள் இருக்கும். முட்டைகள் நீள் உருண்டை வடிவில் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். முட்டைப் பருவம் 31 நாட்களாகும். குஞ்சுகள் வெளிறிய பழுப்பு நிறத்தில் இருக்கும். குஞ்சுப் பருவம் 12 நாட்களாகும். குஞ்சுகளிலிருந்து முழு வளர்ச்சி அடைந்த நாவாய்ப் பூச்சிகள் கரும்பழுப்பு நிறம் அல்லது பழுப்புக் கலந்த சாம்பல் நிறத்தில் இருக்கும். இவை எப்பொழுதும் சூரிய ஒளி படாத பகுதிகளான தாளிட்க் குவியல்கள், உதிர்ந்த இலைகள் ஆகியவற்றின் அடியில் காணப்படும்.

சாறு நாவாய்ப் பூச்சிகள் எள் செடிகளின் தண்டுகள், இளங்குருத்துகள் மற்றும் முற்றாத காய்களில் உள்ள சாற்றை இரவு நேரங்களில் உறிஞ்சி வாழும். பாதிக்கப்பட்ட பகுதிகள் துடித்து, பழுப்பு நிறத்தில் காணப்படும். பகலில் இப்பூச்சிகள் எள் செடிகளில் காணப்படா. இந்நாவாய்ப் பூச்சிகள் வயல்களில் காணப்படும் புறகளிலும், களைச் செடிகளிலும் எள் பயிரிடப் படாத காலங்களில் இருக்கும். உரக குழிகளிலும், நிலக்கடலைத் தோல் மற்றும் போரடித்தபின் குவியலாகக் குவிக்கப்பட்டுள்ள எள் செடிகளிலும்கூட இந்நாவாய்ப் பூச்சிகள் காணப்படும். ஆராய்ச்சிகளின் வாயிலாக இந்நாவாய்ப்பூச்சிகளின் இனப் பெருக்கம் ஐப்பசி - கார்த்திகை மாதங்களில் அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிகிறது. எள் பயிரிடப்படாத காலங்களில் இந் நாவாய்ப்பூச்சிகள் அறுவடை செய்த வரகு, சோயாபீன்ஸ், கம்பு, துவரை அல்லது வயலைச் சார்ந்து வளர்ந்துள்ள கொளுஞ்சி, துத்தி, நாட்டுச்சணல், குப்பைமேனி, காட்டாமணக்கு, மிளகாய்ப் பூண்டு, மூக்குத்திப் பூண்டு போன்ற செடிகளின் சாற்றை உறிஞ்சி வளர்ந்து வாழ்க்கைச் சரிதத்தைத் தொடருகின்றன.

**கட்டுப்படுத்தும் முறைகள்:** பி.எச்.சி 10% தூள் அல்லது கார்பில் 5% தூள் அல்லது பாசலோன் 4% தூள் இவற்றில் ஏதாவது ஒன்றைப் பயிர் முதிரும் காலங்களில் செடிகளின் இடையே தரைமீது ஏக்கருக்கு 10-15 கிலோ வரை தூவ வேண்டும். இதனால் பகலில் மண்ணில் மறைந்து வாழும் இப்பூச்சிகள் கொல்லப்படுகின்றன.

அறுவடை செய்து போர் வைக்கும் முன்பு ஒன்று அல்லது இரண்டு செல் பால் மருந்து வில்லைகளைக் காகிதப் பொட்டலத்தில் வைத்து அதன்மீது போர் வைக்க வேண்டும். இதனால் இப்பூச்சிகள் போரினுள் சென்று சாற்றை உறிஞ்சி ஏற்படுத்தும் சேதம் தவிர்க்கப்படும். எள் பயிர் செய்யும் விவசாயப் பெருமக்கள் மேற்கண்ட பயிர் பாதுகாப்பு உத்திகளைக் கடைப்பிடித்து அதிக மகசூல் பெறலாம்.

## கண் ஈக்களை எப்படிக் கட்டுப்படுத்துவது?

கோடையில் கண் ஈக்கள் பெரும் அளவில் பெருகி நமக்குத் தொல்லை கொடுக்கும். இக்கண் ஈக்களின் விஞ்ஞானப் பெயர் சைபோனெலலாப்யுனிக்கோலா. இவை சுமார் ஒரு மில்லி மீட்டர் நீளத்தில் கரு நிறத்தில் இருக்கும். உருப்பெருக்கியின் மூலம் பார்த்தால், இவை சாதாரண வீட்டு ஈக்களின் உருவத்தை ஒத்து இருப்பதைக் காணலாம்.

இந்த ஈக்கள் தற்போது பெரும் அளவில் பகல் நேரங்களில், நமது கண் ஓரங்களில் அமர்ந்து, அங்குச் சுரக்கும் திரவத்தைக் குடிக்கும். இதனால் நமக்கு வேலை நேரங்களில் ஏற்படுத்தும் தொல்லைகள் அல்லாமல், இவை பல விதமான கண் நோய்களையும் பரப்ப வல்லவை.

இந்த ஈக்கள் சாணம், எருக்குழி மற்றும் மக்கும் தாவரங்களில் முட்டைகளை இடுகின்றன. இம்முட்டைகளிலிருந்து காலில்லாப் புழுக்கள் வெளிவந்து, மக்கும் தாவரத்தை உண்டு வளர்ந்து, கூட்டுப் புழுவாக மாறி, பின் ஈக்களாகச் சுமார் பத்து நாட்களில் வெளிவருகின்றன. இந்த ஈக்கள் பெரும்பாலும் பகல் மற்றும் இரவு நேரங்களில், தொங்கும் கயிறு, கம்பி போன்ற பொருட்களின் மீது கூட்டமாக அமர்ந்து இளைப்பாறும்.

இந்த ஈக்களின் கூட்டமாக அமரும் தன்மையைப் பயன்படுத்தி இவற்றைச் சுலபமாக அழிக்கலாம். மாலையிலும் இரவு நேரங்களிலும் கயிறு, கம்பி போன்ற தொங்கும் பொருட்களில் கூட்டமாக அமர்ந்துள்ள ஈக்களை, பாலித்தீன் பைகள் அல்லது பேப்பர் பைகளை வைத்துப் பிடித்து, நசுக்கி அழிக்கலாம், அல்லது எரியும் பேப்பரைக் கொண்டு எரித்து அழிக்கலாம்.

வேளாண் தகவல் பணிமையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை.



# மேட்டூர் அனல் மின் நிலையம்
## ஒரு கண்ணோட்டம்

### மேட்டூர் அனல் மின் திட்டம்
### மூன்றாம் பிரிவு

தமிழ்நாடு மின்சாரவாரியத்தால் முதல் முறையாக, கடற்கரைக்கு வெகு தொலைவில் (OFF-Shore) அமைக்கப்பட்டிருப்பது மேட்டூர் அனல் மின் திட்டமாகும். மற்ற இரு அனல் மின் நிலையங்களான எண்ணூரும் தூத்துக்குடியும் கடற்கரையை ஒட்டி (On-shore) நிறுவப்பட்டுள்ளன.

மேட்டூர் அனல் மின் நிலையத்திற்குத் தேவையான குளிர்விக்கும் நீர் (Cooling Water) மேலும் சரிக்கட்டுவதற்கான நீர் (make-up water) நீராவி உற்பத்திக்கான நீர் இவைகளெல்லாம் காவிரி ஆற்றிலிருந்து பெறப்படுகிறது.

மேட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்கு விடப்படுகின்ற நீரைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்ய 1930-லும் 1960-லும் அமைக்கப்பட்ட இரு நீர் மின்நிலையங்கள் வரலாற்றை நினைவு படுத்துவனவாக மேட்டூரில் உள்ளன. இந்த இரு நிலையங்களின் இயக்கமும் நீர்ப்பாசனத்துக்காக விடப்படுகின்ற தண்ணீரைச் சார்ந்து இருப்பதால், கோடை மாதங்களான ஜனவரி முதல் ஜூன் வரை மின்கட்டமைப்பில் உச்சத் தேவைகள் ஏற்படும் போது இந்நிலையங்கள் உதவ முடியாமல் போகின்றன.

தமிழ்நாட்டின் பொதுவான மின் தேவைகள்-குறிப்பாக, மேட்டூர் சேலம் பகுதிகளில் தொழில் மற்றும் விவசாயத்தின் மின் தேவைகளை ஈடு செய்யவே மேட்டூர் அனல் மின்திட்டம் வரையப்பட்டதாகும்.

கட்டுமானத்திற்கென ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-90) அனுமதிக்கப்பட்ட திட்டங்களில் மேட்டூர் அனல் மின் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டம் இரு கட்டங்களில் அனுமதிக்கப்பட்டது. முதல் கட்டம் (2 × 210 மெ. வா.), இரண்டாவது கட்டம் (2 × 210 மெ. வா.) இவற்றின் மதிப்பீட்டுத் தொகைகள் முறையே ரூ. 384, 362 கோடியாகும்.

முதல் இரண்டு பிரிவுகள் முறையே ஜனவரி '87-லும் டிசம்பர் '87-லும் இயக்கத்திற்கு வந்தன. இரண்டாவது கட்டப் பணிகள் நவம்பர் '86-இல் தொடங்கப் பெற்று, மூன்றாவது பிரிவு மார்ச்'89-இல் எண்ணெய் எரியூட்டி (Oil firing) சோதனை இயக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்தப் பிரிவு நிலக்கரியூட்டி (Coal firing) தொடர்ச்சியாக முழு உற்பத்தி செய்யும் நிலைக்குக் கொண்டு வரப்படுகிறது.

### கொதிகலன் (Boiler)

மேட்டூர் அனல் மின் நிலையத்தின் 2-வது கட்டத்திற்கான கொதிகலன்கள் (Boilers) திருச்சி பெல் நிறுவனத்தாரால் தயாரிக்கப்பட்டன. இவை 137 கிலோகிராம் அழுத்தமும், 540 டிகிரி சென்டிகிரேட் வெப்பமும் தரவல்ல நீராவியை மணிக்கு 700 டன் உற்பத்தி செய்யும் திறனுள்ளவை.
இக்கொதி கலன்கள் நிறுவப்படுவதில் ஏறத்தாழ 10,000 டன் எடையுள்ள கட்டமைப்பு இரும்புச் சாமான்கள், குறைவு அழுத்த, உயர்வழுத்தக் குழாய்கள், கொதிகலன் கொள்கலன், காற்று எரிவாயுத் தடங்கள், நிலை மின்சாரச் சாம்பல் அகற்றி முதலியன சம்பந்தப்பட்டுள்ளன. ஏறத்தாழ 19,300 இணைப்புகள் 'வெல்ட்' செய்யப்பட்டுள்ளன.

இவ்விணைப்புகள் மிகத்திறமையுடன் செய்யப்படவேண்டிய நுண்ணிய வேலைகள் ஆகும். இவை முன்னதாகச் சூடேற்றுதல், அழுத்தவிலக்குதல், கதிரியக்கச் சோதனை (Radiography) என பல்வேறு கட்டங்களில் செய்து முடிக்கப்பட வேண்டியவை.

கொதிகலன் நிறுவப்பட்ட பின், 27-5-88-இல் நீரழுத்தச் சோதனை வெற்றிகரமாகச் செய்யப்பட்டது. முதல் இரண்டு பிரிவுகளின் கொதிகலன்கள் 60 சதம் வரை எண்ணெய் எரியூட்டுதற்கென வடிவமைக்கப்பட்டன. எப்போதாவது ஏற்படக்கூடிய நிலக்கரி தட்டுப்பாட்டை ஈடு கட்ட 2-வது கட்டத்தைச் சேர்ந்த பிரிவுகளின் கொதிகலன்கள் 100 சதம் எண்ணெய் எரியூட்டுவதற்கென வடிவமைக்கப்பட்டுள்ளன.
இரண்டாவது கட்டத்தைச் சேர்ந்த இரு பிரிவுகளின் கொதிகலன்களின் விலை ரூபாய் 120 கோடியாகும்.

### சுழல் மின்னாக்கி
### (TURBO-GENERATOR)

ஹரித்துவார் 'பெல்' நிறுவனத்தாரால் இந்தச் சுழல் மின்னாக்கி (டர்போ ஜெனரேட்டர்) சப்ளை செய்யப்பட்டது. இந்தச் சுழலி மூன்று கட்ட நிலையை உடையது. மின்னாக்கி 15.75 கிலோ வோல்ட்டில் 210 மெகாவாட் உற்பத்தி செய்யவும் திறனுள்ளது. இரண்டாவது கட்டத் தைச் சேர்ந்த இரு பிரிவுகளின் டர்போ ஜெனரேட்டர்களின் விலை ரூபாய் 64 கோடி ஆகும்.

### கருவி இயலும்
### கட்டுப்பாட்டமைப்பும்
### (Control and Instrumentation)

'மைக்ரோ புரோஸெஸர்' ஒன்றை அடிப்படையாகக் கொண்ட எரி அடுப்பு பாதுகாப்பு மேற்பார்வை அமைப்பு (Microprocessor-based Furnace Safeguard Supervisory System) ஒன்றை 'பெல்' நிறுவனத்தார் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். மேட்டூரில் இது முதல் முறையாக நிறுவப்படுகிறது.

இரண்டு கட்ட நிலைகளுக்கும் தேவையான கருவி இயல் மற்றும் கட்டுப்பாட்டமைப்புகளைக் 'கெல்ட்ரான்' நிறுவனத்தார் தயாரித்து நிறுவியுள்ளார்கள். இந்தக் கட்டுப்பாட்டமைப்பு காற்றழுத்தம் வெப்ப

நிலைகள், நீராவிப் போக்கு முதலியவற்றைத் தானாகவே இயக்கவல்லது. இரண்டாவது கட்டத்திற்கான 'டிஸ்டிரிபியூட்டெட் டிஜிட்டல் கண்ட்ரோல்' முறையைத் தென்மண்டலத்தில் முதன் முறையாகக் 'கெல்ட்ரான்' நிறுவனத்தினர், செய்தி சேகரிப்பு அமைப்புடன் (Data Acquisition System) மேட்டூரில் நிறுவுகின்றனர். இரண்டாவது கட்டத்தின் கருவியியல் கட்டமைப்பின் மதிப்பீடு ரூபாய் 13.73 கோடியாகும்.

இந்த அமைப்பினால் [illegible] தானியக்கம் சாத்தியமாகிறது. மின்நிலைய இயக்கத்தின் பொறுப்பை ஏற்றிருக்கும் இயக்குநர் தன் அறையிலுள்ள கட்டுப்பாட்டுச் சாதனத்தின் மூலமும், அங்கே வைக்கப்படும் வண்ண ஒளித்திரையின் (Colour C.R.T) மூலமும் நிலைய இயக்கத்தைக் கண்காணிப்பார்.

**சிறப்புக் கூறுகள:-**

**(Special Features):**

மேட்டூர் மின் திட்டத்தின் இரண்டாவது கட்டம் கீழ்வரும் சிறப்புக் கூறுகளைக் கொண்டதாகும்.

-220 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கி (Chimney) இதனால் சுற்றுப்புறச் சுகாதாரத் தேவைகள் பாதுகாக்கப்படுகின்றன.

-வழக்கமான நிலக்கரி அரவைகள் (Coal Mills) கொதிகலன்களுக்கு முன்னால் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இந்நிலையத்தில் நிலக்கரி அரவைகள் கொதிகலன்களுக்குப் பின்னால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் டர்பைன் மற்றும் கண்ட்ரோல் அறைகளைத் தூய்மையாகப் பராமரிக்க முடிகிறது.

-'மைக்ரோ பிராஸஸர்' அடிப்படையாகக் கொண்ட எரி அடுப்புப் பாதுகாப்பு மேற்பார்வை அமைப்பு (Microprocessor-based F.S.S.S.)

-பரவலாக்கப்பட்ட எண்ணியல் கட்டுப்பாட்டமைப்பு (Distributed Digital Control)

**நிலக்கரி**

[illegible]மையத் திட்டக் குழுவினால் 1980-இல் மேட்டூர் அனல் மின் திட்டம் அனுமதிக்கப்பட்டபோது, முதல் மூன்று பிரிவுகளுக்கும் தேவையான நிலக்கரி, ஆந்திர மாநிலத்திலுள்ள சிங்கரேணி வளாகத்தில் உள்ள சென்னூர் என்ற

## கலைஞர் ஆட்சியின் 100 நாள் சாதனைகள்

'கலைஞர் ஆட்சியில் 100 நாள் சாதனைகள்' என்னும் தலைப்பில் வண்ணச் செய்தித் திரைப் படம் ஒன்று 16-6-89 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் செய்தியாளர்களுக்குக் காட்டப்பட்டது. மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. பொன்.முத்துராம லிங்கம் அவர்களும் செய்தியாளர்களுடன் இப்படத்தைப் பார்த்தார்.

[illegible]இரண்டு நிமிடங்கள் ஓடும் இப் படம், பல்துறைச் சாதனைகளைப் பாங்குடன் விளக்குகிறது.

திரைப்பட நடிகர் திரு. என். எஸ். சந்திரன் அவர்கள் தோன்றி, கதைப்போக்கில் விளக்கவுரை தந்தது புதுமையாகவும், போற்றும்படியாகவும் இருந்தது.

இப்படத்திற்கு விளக்கவுரை எழுதித் தொகுத்தவர், தமிழ்நாடு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நிறுவனம், [illegible] திரைப்படப் பிரிவுத் தலைவர் [illegible] சொர்ணம்.

இந்தச் செய்தி மலரில் 146 பிரதிகள், 35 மி.மீ. அளவில் எடுக்கப்பட்டு தமிழகத்தில் உள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் திரையிடப்படும். 67 பிரதிகள் 16 மி.மீ. அளவில் எடுக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டச் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கும், கள விளம்பரப் பணிக்காகக் கொடுக்கப்படும். இம்மலரை, 20 VHS ஒளி நாடாவில் மாற்றி ஒவ்வொரு மாவட்டச் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கும், கள விளம்பரப் பணிக்காகக் கொடுக்கப்படும்.

மேலும் இச்செய்தி மலர், பின்வரும் இடங்களிலும் காண்பிக்கப்படும்:

1. மத்திய இரயில் நிலையம், சென்னை, 2. இரயில் நிலையம், எழும்பூர், 3. இரயில் நிலையம், திருச்சி, 4. இரயில் நிலையம், மதுரை, 5. திருவள்ளுவர் பேருந்து நிலையம், சென்னை.

"தமிழக அரசு திரைப்படப் பிரிவு தயாரிக்கும் செய்திப் படங்களை, திரைப் படக் கொட்டகைகள் கண்டிப்பாகத் திரையிட வேண்டும். இதைத் திரையிடுகிறார்களா. என்று அதிகாரிகள் கண்காணிப்பார்கள்" என்று மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நல அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்.

புதிய சுரங்கத்திலிருந்து வருவதற்கான வழிவகை செய்யப்பட்டது. நான்காவது பிரிவிற்கான நிலக்கரி ஒரிஸ்ஸாவிலுள்ள தால்ச்சர் [illegible] வளாகத்தின் [illegible] சுரங்கத்திலிருந்து வரவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் இது சிங்கரேணி நிலக்கரி வளாகத்தோடு இணைக்கப்பட்டது என்றாலும், இப்போது சிங்கரேணியிலிருந்து நிலக்கரி எதுவும் கிடைப்பதில்லை. சிங்கரேணியில் எடுக்கப்படும் நிலக்கரியின் அளவு போதவில்லை என்பதால் தொகை [illegible] கிழக்கு நிலக்கரி வயல்களிலிருந்தும் கடல் மற்றும் ரயில் மூலமாகவே நிலக்கரி வந்து சேருகிறது.

ரயில் [illegible] நிலக்கரியை இறக்குவதற்காகப் பெட்டிகளைக் கவிழ்க்கும் [illegible] (Wagon Tipplers) [illegible] நிறுவப்பட்டிருக்கின்றன. ரயில் [illegible] வரும் நிலக்கரியைப் பெறுவதற்கும் அவற்றை 'ஹாப்பர்களில்' இறக்குவதற்கும் பின்னர் 'கன்வேயர்' எனப்படும் சாதனங்களில் செலுத்துவதற்கும் இவை பயன்படும். நிலக்கரியை இடைவிடாது கொதிகலன்களுக்குக் கொண்டு செல்ல நிறுவப்[illegible] அமைப்பு (Belt conveyor) [illegible] 2800 டன் கரியைக் [illegible] மேலும் 4 இலட்சம் டன் நிலக்கரியைச் சேமித்து வைப்பதற்குப் போதுமான இடம் ஒதுக்கப்[illegible]

இந்த [illegible] 38 நாட்களுக்கு [illegible] போதுமானதாகும். நிலக்கரியை உடைத்த பின் கரித் துவியலில் (Coal Dump) அள்ளவும் [illegible] தூவியலி[illegible] அள்ளவும், கொதிகல[illegible] இரண்டு 'ஸ்டாக்கர்-கம்-ரீக்ளைமர்' (Stacker-cum-Reclaimer) பயன்படு[illegible] நிலக்கரி கையாளு[illegible] இதற்கான கட்டுமானப் பணிகள் (Civil Works) 'ஸ்டாக்கர்-கம்-ரீக்ளைமர்' இவற்றின் மதிப்பு ரூபாய் 49.4 கோடியாகும்.

**குளிர் நீர்த் திட்டம்:**

**(Cooling Water System)**

மின் நிலையம் முழுமை பெறும்போது 4 பிரிவுகளுக்கும் சேர்த்து ஒரு வினாடிக்கு 70 கன அடி தண்ணீர் தேவைப்படும். இதற்கான தண்ணீர் காவிரி ஆற்றிலிருந்து இறைக்கப்படுகிறது. கொதிகலன்களுக்கான தண்ணீர். முதலில் தெளிப்பான் (Clarifier) மூலம் செலுத்தப்படுகிறது. தெளிந்த நீர் கொதிகலன்களில் பயன்படுத்தத் தக்க



தூய்மை பெற, தாதுப் பொருள்களை அகற்றுவதற்கு (demineralise) நவீனப் பொறிகள் மூலம் செலுத்தப்படுகிறது. தண்ணீர் வீணாவதைத் தவிர்க்க குளிர் நீர்த் திட்டத்தில் அதே தண்ணீரை மீண்டும் உபயோகப்படுத்தும் முறை அனுசரிக்கப்படுகிறது. இம்முறையினால் தண்ணீர் சூடாகி நீராவியாகும்போது ஏற்படும் சேதாரத்தை மட்டும் ஈடுகட்ட போதுமான நீர் தேவைப்படும் குளிர்நீர் அமைப்பின் கட்டுமானப் பணிகள் (Civil Works), குளிர் நீர்த் திட்டம், நீர் ஏற்று நிலையம், நீர் தேக்கக் குட்டை (Forebay), சுரங்கப் பாதை (Tunnel) இவற்றின் மொத்த மதிப்பு ரூபாய் 12.49 கோடியாகும்.

**சாம்பல் அகற்றுதல்:**

**(Ash Disposal)**

பெரும்பள்ளம் பள்ளத்தாக்கின் குறுக்கே ஒரு அணை எழுப்பி சாம்பல் நீர் அங்கே தேக்கப்படுகிறது. சாம்பல் கீழே படிய மேல் வரும் தெளிந்த நீர் மீண்டும் காவிரியில் விடப்படுகிறது. இப்படி விடப்படுகிற நீர் தூய்மைக்காகப் பரிசோதிக்கப்பட்டு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிகளுக்கு ஏற்புடையதாக ஆகிறது.

**புகைபோக்கி (Chimney)**

இரண்டாவது கட்டத்திற்கான புகை போக்கியின் உயரம் சுற்றுப்புறச்சூழல் கட்டுப்பாட்டின் தேவைகளைக் கருத்திற் கொண்டு 220 மீட்டராக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர 99.6 சதம் திறமை (efficiency) படைத்த நிலை மின்சாரச் சாம்பல் அகற்றி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

**உற்பத்தியாகும் மின்சக்தியை மின்கட்டமைப்பிற்கு எடுத்துச் செல்லுதல்:** (power evacuation)

15.75 கே. வி. மின் அழுத்தத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ஒவ்வொரு பிரிவிற்குமான 250 மெ. வோ. ஆ. திறனுள்ள மின்மாற்றியின் மூலம் தமிழ்நாடு மின் கட்டமைப்பில் பாய்ச்சப்படுகிறது. இறுதிக் கட்டத்தில் இந்த மின் நிலையம் எட்டு 230 கே. வி. மின்னூட்டிகள் (Feeders) மூலம் 4 பிரிவுகளிலும் உற்பத்தியாகும் மின்சக்தியை தமிழ்நாடு மின் கட்டமைப்பில் (grid) பாய்ச்சும்.

# தமிழ்ப் பண்பாடு

இந்தியப் பண்பாடு என்பது ஒரு தனித்தன்மை உடையதல்ல என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்தியப் பண்பாடு ஒரு குறிப்பிட்ட வரன் முறைக்கு உட்பட்டதாக அமைய முடியாது. இந்தியப் பண்பாட்டிலே தமிழ்க் கூறுகள் எனக் காண விழையும்போது பண்பாட்டை அறிய நமக்கு வாயிலாக இருப்பவை மொழி, இலக்கியம், கலைகள், அதன் கூறுகள் போன்றவை.

"நம்முடைய மொழி பிறமொழிகளுக்கெல்லாம் மூலமொழியாக விளங்கியுள்ளது. தமிழர் வழங்கிய நாகரிகச் செல்வம், பண்பாட்டுச் செல்வம், கலைச்செல்வம் இவை எல்லாம் வடக்கேயுள்ள மக்களிடத்தே ஒவ்வோர் அளவில் இடம்பெற்றுள்ளன எனச் சொல்வதற்குச் சான்றுகள் உள்ளன.

"தமிழருடைய இலக்கியத்திலேதான் மிக நீண்ட காலத்திற்கு முன்பே உலகப் பொது நோக்கம் தழைத்தது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று திருமூலர் சொன்னபோது, அந்தக் காலக் கட்டத்திலே உலகில் வேறு யாரும் உரைத்ததாகத் தோன்றாது. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று சொன்ன கருத்து, எளிதிலே இன்னொரு மொழியிலே காண முடியாது. அவற்றை ஒத்து எழுந்தது 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பது. அந்த மொழி, அந்தக் கருத்துத் தமிழருக்குப் பெருமை.

"தென்நாட்டுப் பண்பாடு வடநாட்டிலே பரவியிருக்கின்றது. மிகப் பெரிய அளவில் தழைத்து நின்ற பண்பாடு தமிழ்ப் பண்பாடு. தமிழருடைய பண்பாடும், பிற மொழிக் கலாச்சாரப் பண்பாடும் எப்படிக் கலந்துள்ளன என்று பார்த்தால், அடிமனை நிலம் தமிழ் நிலம்; அங்குக் கட்டப்படும் கோயிலுக்கு எடுக்கப்பட்ட கற்கள் தமிழ்நாட்டு மலைகளினின்றும் எடுக்கப்பட்டவை. அந்தக் கோயிலில் வழிபாடு நடத்துபவரும் தமிழர்; ஆனால் வழிபாடு நடப்பது வடமொழியில்; அப்பொழுதுதான் தமிழ் தாழ்கிறது; தமிழ்ப் பண்பாட்டின் மதிப்பு மதிக்கப்படாத நிலை ஏற்படுகிறது."

— உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தேசியக் கருத்தரங்கை 26.3.89 அன்று தொடங்கி வைத்து மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

# சிறுநீரகச் சிகிச்சை

## சென்னைப் பொதுமருத்துவமனையில் ரூ.1.25 கோடியில் நவீனக் கருவி!

"அதிர்வு அலை" சிகிச்சை மூலம் ஒரே நாளில் சிறுநீரகக் கற்களை அகற்றுவதற்கான கருவிகள் வாங்க சென்னைப் பொது மருத்துவமனைக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 1.25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பற்றி மருத்துவர்களும், நோயாளிகளும் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழக அரசின் பொது மருத்துவமனையில் இந்த நவீன வசதி கிடைக்கப் பெற்று, அவதிப்படும் நோயாளிகளுக்கு உதவ முடியவில்லையே என்று எண்ணி ஏங்கிய சிறுநீரியல் துறையில் பணி புரியும் டாக்டர்களுக்கு, முதலமைச்சர் இனிப்பான செய்தியை அறிவித்துள்ளார். தொலைநோக்குடன், முதலமைச்சர் ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வண்ணம் ஒன்றே கால் கோடி ரூபாய் நிவாரண நிதியினை ஒதுக்குவதாக அறிவித்துள்ளார். இதனால் ஏற்படும் நவீன முறை சிகிச்சையினால் சென்னைப் பொது மருத்துவமனையில் மட்டும் ஆண்டுக்கு 1000 பேருக்கு மேல் சிகிச்சை பெறும் அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த நோயினால் பாதிக்கப்பட்டோர், அவர்களது நலிந்த குடும்பத்தினர் அனைவரும் அவர்கள் உயிருள்ளவரை முதலமைச்சருக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள்.

தமிழகம் இந்த அரிய சாதனையால் இதர மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கும்.

வறுமைக்கோட்டிற்குள் வாழ்வோர், ஏழை-எளியவர்கள், சமுதாயத்தில் நலிவுற்றோர், பலரும், நடுத்தர வகுப்பினர், அரசு ஊழியர்கள் அனைவரும் இம்முறை மூலம் நன்மை பெற கனவு காண முடியாது. காரணம், கல் ஒன்றினைத் தகர்ப்பதற்கு தனியார் மருத்துவமனைகளில் கட்டணம் ரூபாய் 20 ஆயிரம். கல் கொஞ்சம் பெரியதாகவோ, ஒன்றுக்கு மேற்பட்டோ இருந்தால் மேலும் ஐந்தாயிரம்-பத்தாயிரம் செலவாகும். அவசியம் காரணமாக பம்பாய், அகமதாபாத் போய் இந்த நவீன சிகிச்சை பெற்று கடனாளியான நடுத்தர வகுப்பினர் ஏராளம். அரசின் உதவி நாடி மனு போட்டுக்கொண்டிருக்கும் அரசு சார்ந்த ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் எத்தனையோ பேர்.

சிறுநீரகங்கள் உடலில் ஏற்படும் கழிவுப்பொருட்களை வெளியேற்றும் முக்கிய உறுப்புகளாகும். இவை பழுதுபட்டால் யூரியா போன்ற கழிவுப் பொருட்கள் ரத்தத்தில் அதிகரித்து மனிதன் உயிரிழக்க நேரிடும். சிறுநீரகங்களைப் பாதிக்கும் முக்கிய நோய்களில் ஒன்று, சிறுநீரகத்தில் ஏற்படும் கற்களாகும். சிறுநீரில் உள்ள சில தாதுப்பொருட்களான ஆக்ஸலேட், யூரிக் ஆசிட், பாஸ்பேட் போன்றவை ஒருங்கிணைந்து, கற்களாக மாறி விடுகின்றன. குறிப்பாக, உழைக்கும் இனம், வெய்யில் வேர்வையினால் சிறுநீர் அளவு குறைவதாலும், ஏழை மக்கள் ஏ-வைட்டமின் குறைவினாலும், சுகாதாரமில்லாத சூழ்நிலையில் வாழ்வோர் சிறுநீரக நோய்க் கிருமிகளாலும் சிறுநீரகக் கற்களால் அவதிப்படுகிறார்கள்.

சிறுநீரகத்தில் ஏற்படும் கற்கள்சிறுநீர்க் குழாயின் வழியாக இறங்கும்போது, இந்த நோயாளிகள் பிரசவ வேதனைப் படுகிறார்கள். சிறுநீரகக் கற்கள் இந்த பாதையினை அடைத்து சிறுநீர் வெளியில் செல்ல முடியாமல் மயக்க நிலை அடைகிறார்கள். சிறுநீரகக் கற்கள் இரண்டு சிறுநீரகங்களையும் பாதிக்கக்கூடும். இவை சிறுநீரகங்களை முழுமையாகப் பாதித்து, இவை காரணமாகப் பலர் இறந்து விடுகிறார்கள். சிறுநீரகக் கற்களால், சிறுநீரகங்கள் பழுதுபட்டு அதன் காரணமாக அவதிப்படும் நோயாளிகள் ஏராளம்.

தமிழகத்தின் மருத்துவமனைகளின் சிறுநீரியல் துறைகளில் ஆண்டுக்கு 1,400 பேர் சிறுநீரகக் கற்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகிறார்கள். இவர்களில் ஆண்கள் 1100 பேர், பெண்கள் 300 பேர். இவர்களில் 85 சதவிகிதத்தினர், வறுமைக்கோட்டிற்குள் வாழும் ஏழை மக்கள், உழைக்கும் வர்க்கத்தினர். இவர்களில் 60 சதவிகிதத்தினர் நடுத்தர வயதினர் (20 முதல் 45 வயது வரை) மற்றவர்கள் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோர்.

நீண்ட காலமாகவே சிறுநீரகக் கற்கள் அறுவைச் சிகிச்சை மூலம் தான் அகற்றப்பட்டன. கடந்த 10 ஆண்டுக் காலத்தில் இந்த நோய்க்கு அறுவைச் சிகிச்சையில்லாமல் வெளியே அகற்றும் நவீன முறைகள் உலகெங்கிலும் நடைபெறுகின்றன.

1979-ஆம் ஆண்டு டார்னியர் என்ற ஜெர்மனியைச் சேர்ந்த விமானக் கம்பெனி தற்செயலாக ஒரு நவீன முறையைக் கண்டுபிடித்தது. அவர்களது விமானத்தின் கண்ணாடிகள் ஒலி வரம்பினைத் தாண்டும்போது தகர்ந்து கொண்டிருந்தன. இதன் காரணத்தைத் தேடிய ஜெர்மன் நாட்டு விஞ்ஞானிகள் இந்த முறையை மனித சமுதாயத்தின் நன்மைக்குப் பயன்படும் வண்ணம், செயல்படுத்த முடிவு செய்தனர். அதன்படி அதிரலைகளைச் சிறுநீரகத்திலும், சிறுநீர்க் குழாயிலும் செலுத்தி அதில் உள்ள கற்களைத் தகர்க்கப் பயன்படுத்தினர். உலகெங்கிலும் உள்ள பெருநகரங்களில் எல்லாம் இந்த நவீன சிகிச்சை முறை கையாளப் பட்டதால், சிறுநீரகக் கற்களுக்கு அறுவைச் சிகிச்சை முறை என்பது 5 சதவீதத்திற்கும் கீழே குறைந்துவிட்டது. ஏறக்குறைய 5,00,000 பேர் புதிய முறைப்படி சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர்.

அறுவைச் சிகிச்சை மூலம் சிறுநீரகக் கற்களை அகற்றினால், இரண்டு, மூன்று வாரம் மருத்துவமனையிலும், ஓரிரண்டு மாதம் ஓய்விலும் இருப்பதால், ஏழை மக்கள் - குறிப்பாக சம்பாதித்துக்குடும்பத்தைக் காக்க வேண்டி குடும்பத் தலைவர் நோய்வாய்ப்படுவதால், குடும்பம் முழுவதும் அவதிப்பட நேரிட்டு விடுகிறது.

நவீன சிகிச்சை முறையின் பயன்கள்:-

1. அறுவைச் சிகிச்சை இல்லாமல், ரத்தம் சிந்தாமல், உடலின் வெளியிலிருந்து அதிரலை செலுத்தப்பட்டு, சிறுநீரகம் பழுதாகாமல் சிறுநீரகக் கற்கள் பொடிப் பொடியாக நொறுங்கி மணல் போல் சிறுநீரில் வெளியேற்றப் படுகிறது. எனவே, அறுவைச் சிகிச்சை இல்லை. வலி இல்லை. தழும்புகள் இல்லை.

2. ஒரே நாளில் சிகிச்சை நிறைவு பெற்று, இரண்டொரு நாளில் வேலைக்குத் திரும்புவதால் உழைக்கும் நாட்கள் பெருகும். ஏழைகளின் வருமானம் பாதிக்கப்படாது. உடல் நலம் சற்றும் குறையாது.

3. சிறுநீரகக் கற்கள் திரும்ப திரும்ப ஏற்படக்கூடியதாக இருப்பதால் இரண்டாவது, மூன்றாவது அறுவைச் சிகிச்சையின்போது கற்களை மட்டுமின்றி சிறுநீரகங்களே அகற்றப்படும் சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. புதிய சிகிச்சை முறையினால் சிறுநீரகங்கள் பழுதாகாது. எத்தனை முறை வேண்டுமானாலும் சிகிச்சை பெறலாம்.

4. வயது முதிர்ந்தோர், குழந்தைகள், ரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய் உள்ளவர்கள், இதயநோய் உள்ளவர்கள் அனைவரும் அறுவைச் சிகிச்சைக்கு முழுத் தகுதி பெறாதவர்களாகக் கருதப்படுகிறார்கள். ஆனால் புதிய சிகிச்சை முறைக்கு இவர்களில் எவரும் விதி விலக்கல்ல.

5. ஒரே சிறுநீரகம் உடையவர்களுக்கும், இரண்டு சிறுநீரகங்களிலும் கற்கள் இருப்பவர்களுக்கும் இவை முழுமையாக, சிறுநீரகம் பழுதுபடாமல் பாதுகாக்கப்பட்டு, கற்கள் அகற்றப் படும். எனவே, இவர்களில் பலர் இறுதிக் கட்டம் என்ற நிலைக்குப் போய் பாதிக்கப்பட மாட்டார்கள். இவர்களுக்குச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படாது.

6. இந்த நவீன முறை மூலம் கற்களை அகற்ற மயக்க மருந்து கொடுக்கத் தேவையில்லை.

7. படுக்கை வசதிகள் குறைவாகவும், மக்கள் தொகை அதிகமாகவும் உள்ள நம் நாட்டில் இந்த நோய்க்கு உட்புற நோயாளியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. படுக்கை வசதிகளை மற்ற நோயாளிகளுக்குப் பயன்படுத்தலாம்.

8. சிறுநீரியல் துறையில் பயிற்சி பெற்ற மருத்துவர்கள், புதிய சிகிச்சை முறையைத் தன்னிச்சையாகச் செயல்படுத்த முடியும். இந்த முறையால் அகற்ற முடியாத கற்களை அதாவது பெரிய அளவிலான கல், அழுத்தமான கல் இவற்றை வேறுமுறை மூலம் சிறுநீரகத்தைத் துளைத்தோ, அல்லது அறுவைச் சிகிச்சை மூலமோ அகற்றி விடுவார்கள்.

## குமரி மாவட்டத்தில்



## இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் விழா

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏழைகளுக்குக் கண்ணொளி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அன்னார் பிறந்த நந்நாளில் தமிழகமெங்கும் இலவசக் கண்சிகிச்சை முகாம்கள் நடைபெற்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை, குழித்துறை, செண்பகராமன்புதூர் ஆகிய இடங்களில் கண் சிகிச்சை முகாம்கள் நடைபெற்றன.

அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 33 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் விழா செண்பராமன்புதூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் 8.6.89 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்கு தோவாளை ஊராட்சி ஒன்றியத்தலைவர் திரு என்.சிதம்பர நாதபிள்ளை தலைமை வகித்தார். கன்னியாகுமரி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. என். சுந்தரதேவன், இ.ஆ.ப., விழாவில் கலந்து கொண்டு 33 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார்.

விழாவில், மாவட்ட மருத்துவ அலுவலர் திரு. என். வரதராஜன், மாவட்ட உடல் நல அலுவலர் டாக்டர் திரு. கே. சுப்பிரமணி, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) திரு. நெல்லையப்பன் ஆகியோர் பேசினார்கள். தொடக்கத்தில் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு. கே.ஆர். ராமச்சந்திரன் வரவேற்புரை நல்கினார். இறுதியில் தோவாளை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. ஜான் அகல் ரெட்டி நன்றி கூறினார்.

தொகுப்பு:
கு. தாணப்பா
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கன்னியாகுமரி மாவட்டம்.

## சத்துணவுடன வைட்டமின் மாத்திரைகள்

குழந்தைகளுடைய ஆரோக்கியத்திற்கு மிக முக்கியமாகப் பாதுகாக்கக்கூடியது, அந்தக் குழந்தைகளுடைய கண்கள்-கண்ணொளி, நான் சட்டமன்றத்திலேயே அறிவித்திருக்கின்றேன். முட்டை வழங்குவது மாத்திரமல்ல. கண்ணிற்கு ஆரோக்கியத்தைத் தரக்கூடிய, வலிமையைத் தரக்கூடிய வைட்டமின் 'ஏ' மாத்திரைகளும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் என்று சொல்லியிருக்கின்றேன்.

வெகு விரைவிலே ஒவ்வொரு நாளும் வழங்கக்கூடிய அந்தத் திட்டமும், வெகு விரைவில் நடைமுறைக்கு வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*(13-6-89 அன்று நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)*

## சிறந்த மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுத் திட்டம்

பிளஸ் 2 தேர்வில் மாநிலத்திலேயே முதல் மூன்று இடங்களில் வந்த மாணவ, மாணவியருக்கு, பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15 அன்று 75 ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 1-6-89 அன்று அறிவித்தார்.

இவ்வாண்டு பள்ளி இறுதித் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியர்க்கும் ரொக்கப் பரிசுகள் வழங்குவதற்குக் கலைஞர் அவர்கள் 24-6-89 அன்று ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி, தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு மற்றும் பூகோளம் ஆகிய ஐந்து பாடங்களில் முதல் மூன்று தகுதிகளைப் பெற்றுள்ள 22 மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மதிப்பெண் பெற்றவருக்கு ரூ. 3,000, இரண்டாம் மதிப்பெண் பெற்றவருக்கு ரூ. 2,000, மூன்றாம் இடம் பெற்றவருக்கு ரூ. 1,000 ரொக்கப் பரிசுகளை அரசு வழங்கும். பிளஸ் 2 தேர்வில் முதல் மூன்றிடம் பெற்ற மாணவ மாணவியருக்கும், பள்ளி இறுதித் தேர்வில் முதல் மூன்றிடம் பெற்ற மாணவ மாணவியருக்கும் ஜூலை 15-ஆம் நாள் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளன்று சென்னையில் நடைபெறும் அரசு நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்படும்.





## பார்த்தோம் படித்தோம்

1-6-89 இதழில் வெளிவந்த கருத்துப் படங்கள் சிந்திக்க வைத்தன. பொதுவாக, தமிழரசு ஒவ்வொரு குடும்பத்திலும் கண்டிப்பாக இடம் பெறத்தக்க விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது.

-ப. கந்தசாமி,
திருப்பூர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றிப் பல்துறை அறிஞர்கள் கருத்துரைகள் அருமையாக உள்ளன.

-எம். பி. இளங்கோ,
மேட்டுப் பாளையம்.

முகப்புப் படம் அருமை. 'அரும்பு' சிறு கதை கரும்பாக இனித்தது.

-ஆர். அத்தியப்பன்,
முனுசாவடி.

தமிழரசு புதிய பொலிவுடன் அந்த நேரத்தில் அரிய செய்திகளையும் தாங்கி வருவது கண்டு மகிழ்ச்சியடைந்தேன்.

-எல். சங்கரநாராயணன்,
சென்னை-80.

மருத்துவப் பகுதியில் ... பற்றிய கட்டுரை, தமிழுக்குத் தொண்டு செய்த பேரறிஞர்கள் போன்ற கட்டுரைகள் பயனுள்ளவையாக இருந்தன.

-பா. மா. வெங்கடாசலபதி,
அய்யம்பாளையம்.

1-6-89 இதழில் வெளிவந்த செய்திகள் அனைத்தும் கடலில் தேடி எடுத்த நல் முத்துக்கள்.

-மு. கு. வெற்றிவேல்,
உதயமார்த்தாண்டபுரம்.

வெண்பாப் போட்டிக்கு வந்த கவிதைகள் படுஜோராய் இருந்தன.

-க. கோபி,
சென்னை-109.

## சம்பளம் வந்த விதம்!

ரோம் நாட்டுப் போர் வீரர்களுக்குச் சம்பளத்தின் ஒரு பகுதி உப்பாகக் கொடுக்கப்பட்டு வந்தது. இதற்கு உப்புப் பணம் என்று பெயர். இதனைக் குறிக்கும் ரோம் மொழிச்சொல் சாலரியம் என்பதாகும். இதிலிருந்து சம்பளத்தைக் குறிக்கும் சாலரி (salary) என்ற ஆங்கிலச் சொல் வந்தது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

/ அதி / நவீன / பருத்தி / வகைகள் /



உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள், இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA


Tamil Arasu


தமிழரசு
16-7-1989 ரூ.1






எண்ணூரில் நடைபெற்ற 'சென்னை அனல் மின்நிலைய' அடிக்கல் நாட்டு விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், மேதகு ஆளுநர், மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆகியோர் பங்கேற்றனர். (1-7-

## ஒடுக்கப்பட்ட வைரமணி

"அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் இருந்துதான் உன்னதமான மனிதர்கள் தோன்றுவார்கள்!" என்று மூதறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். வைரம் என்பது நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு பூமியின் அழுத்தத்தால் கீழே அடங்கி ஒடுங்கிக் கிடந்த கரித்துண்டுதான்.

அதுபோல, நெடுங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் இருந்து தோன்றிய வைர மணிகளில் ஒருவரே காமராசர்.

-பேரறிஞர் அண்ணா



## மக்களுக்காக உழைத்தவர் காமராஜர்

தென்பாண்டி மண்டலத்தில் தோன்றிய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்காக - தமிழ்நாட்டிலே ஒடுக்கப்பட்ட - அடக்கப் பட்ட மக்களுக்காக உழைத்து, தாம் அனைத் திந்தியக் கட்சியின் தலைவராக இருந்தாலும் தமிழ் இனத்தை மறவாமல் பாடுபட்டார்.

—முதல்வர் கலைஞர்

16 2339

# சென்னை அனல்மின் நிலையம்

**செ**ன்னை அருகே எண்ணூரில் சென்னை அனல்மின் நிலைய அடிக்கல் நாட்டு விழா, 1-7-1989 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கலந்து கொண்டு, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். மின்நிலையப் பணியாளர்களுக்கான குடியிருப்புப் பகுதிக்கு, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். விழா மலரை மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் சட்டப்பேரவைத் தலைவரும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், உயர் அலுவலர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

மின்வாரியத் தலைவர் திரு. டி.வி. அந்தோணி வரவேற்புரையாற்றுகையில், "தமிழகம் தொழில்வளம் பெறவேண்டும் என்பதில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகுந்த தீவிரம் காட்டி வருகிறார். அதற்காகவே, மின்தட்டுப்பாடு நீங்க இத்தகைய திட்டங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. மாண்புமிகு முதலவர் அவர்களின் இத்தகைய நல்ல பல முயற்சிகளுக்கு மின்வாரியம் முழு ஒத்துழைப்பையும் தரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

அதைத் தொடர்ந்து மின்வாரியத் தலைவர், மேதகு குடியரசுத் தலைவருக்கும், மேதகு ஆளுநருக்கும், மாண்புமிகு தமிழக முதல்வருக்கும் பொன்னாடை போர்த்தி - மாலை அணிவித்து-நினைவுப்பரிசுகள் வழங்கினார்.

மின்வாரிய லஞ்ச ஒழிப்பு ஆணையர் திரு. வைகுந்த், மதுராந்தகம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத் தலைவர் திரு. சி. ஆறுமுகம், பொன்னேரி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. சுந்தரம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. கணபதி ஆகியோரும் மாலைகள் அணிவித்தனர்.

அதன்பின், பலரும் வாழ்த்துரை வழங்கினார்கள். அதன் விவரம் வருமாறு:

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம். எம். இராசேந்திரன்: இந்த நாள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நன்னாள். 1986-ஆம் ஆண்டே இத் திட்டத்திற்கான எல்லா அங்கீகாரங்களும் பெறப்பட்டாலும், நிலத்தைக் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதமே [illegible] தேக்க நிலைக்குக் காரணம். மின் உற்பத்தி பெருக வேண்டும் என்ற எண்ணமுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே இந்த [illegible] ஏற்பாட்டிற்கு [illegible].

திரு. கே. சுந்தரம் எம்.எல்.ஏ.: இந்த விழா வரலாற்றுச் சிறப்புமிக்க [illegible] இதற்காகப் பொன்னேரி [illegible] சார்பில் நன்றி தெரிவிக்கக் [illegible] நான், இங்கு நிறுவப்படும் மின்நிலையத்தில், இந்தத் தொகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரவேண்டும் [illegible] கேட்டுக் [illegible].

திரு. என்.வி.என். சோமு எம்.பி.: உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்ற மக்களின் முக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்து வரும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் இவ்விழா நடைபெறுவது மிகவும் பொருத்தமுடையதாகும். நல்ல பல திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதில் நம்முடைய முதல்வர் அவர்கள் மற்ற மாநில முதல்வர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் தமிழகத்தின் ஒளிகாட்டியாகவும் விளங்கி வருகிறார்.

விழா மலரை மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் வெளியிட, முதலாவது பிரதியை மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார். அதைத் தொடர்ந்து பேசுகையில், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாவது:-

"இன்னும் இரண்டு மூன்றாண்டுகளில் தமிழ்நாட்டில் மின்தட்டுப்பாடே இருக்காது. தமிழகத்தின் மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு இத்திட்டம் ஒரு மைல் கல் ஆகும். இந்தத் திட்டத்திற்கான நிலக்கரி கிடைப்பதில் எவ்விதத் தடங்கலும் ஏற்படாதபடி, நம் குடியரசுத் தலைவர் அவர்கள் வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."

திருமதி மரகதம் சந்திரசேகரன் எம். பி. அவர்கள் பேசும்போது-"இந்தப் பகுதி மக்களுக்கு இங்கே தாராளமாக வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும்; வீடுகட்டும் திட்டம் விரைந்து நிறைவேற்றப்பட வேண்டும்" என்றார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தம்முடைய தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

"தலைமைச் செயலாளர் அவர்கள் இந் நாள் ஒரு பொன்னாள் என்று குறிப்பிட்டார். மின்துறை சார்பிலே நடைபெறும் இந்நாளைப் பொன்னாள் என்று மட்டுமல்ல; மின்னாள் என்றேகூட குறிப்பிடலாம்.

"1986-ஆம் ஆண்டே இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, அதன் பயனை அனுபவிக்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் அத்தகைய வாய்ப்புக் கிடைக்காமல், 548 கோடி ரூபாயிலே திட்ட மதிப்பீடாக இருந்த தொகை, இரண்டாண்டுக் காலத் தாமதத்தின் காரணமாக 721 கோடி ரூபாயாக உயர்ந்து அதைச் சமாளிக்க வேண்டிய பெருஞ் சுமை அரசின் தலையிலே விழுந்திருக்கிறது.

"இந்த வட்டாரத்திலே உள்ளவர்களுக்கு இங்கே நிச்சயம் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் இது போன்ற திட்டங்கள் தமிழகத்திலே உருவாகிக் கொண்டிருக்குமேயானால், வேலை வாய்ப்புப் பெருகும்; தமிழகத்தின் வளமும் பெருகும்.

"இந்த விழாவிலே அடிக்கல் நாட்ட இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் வந்திருப்பது மிகப்பொருத்தமான ஒன்றாகும். அவர்கள் தமிழகத்தின் வளர்ச்சியில் மிக அதிக அளவிற்கு அக்கறை காட்டக் கூடியவர்கள். அவர் இந்தியாவிற்குக் குடியரசுத் தலைவர் என்றாலுங்கூட, இந்த மண்ணை-தமிழ் மண்ணைமறப்பவர் அல்ல என்பதை நான் மிக நன்றாக அறிவேன்.

"அவர்கள், தமிழகத்தின் தொழிற்துறை அமைச்சராகப் பெருந்தலைவர் காமராஜருடைய காலத்திலே பணியாற்றிய நேரத்தில் தமிழகம் தொழில் துறையில் முன்னேற அன்றைக்கே அடிக்கல் நாட்டியவர். இன்றைக்கு இந்த மின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்ட வந்திருக்கிறார்.

"வரும் நான்கைந்தாண்டுகளில், மாநிலத் தொகுப்பிலிருந்தும், மத்தியத்தொகுப்பிலிருந்தும் 2,082 மெகாவாட் அளவிற்குப் புதிய மின்நிலையங்கள் பயனுக்கு வரவிருக்கின்றன. இவைகளிலிருந்து, தமிழகத்திற்கு நாள் ஒன்றுக்குக் கூடுதலாக 28 மில்லியன் யூனிட் மின்சாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"எனவே, இத்திட்டம் விரைவில் நிறைவேறி அதன் பயனைத் தமிழக மக்கள் பெற்றிட, இத்திட்டம் உருவாவதன் காரணமாகப் பல தொழில்கள் தொடர்ந்து அமைந்திட, நாமனைவரும் நம் ஒத்துழைப்பை எல்லாவகையிலும் நல்கிட வேண்டும் என்று உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

"வரும் ஆண்டுகளில் இரண்டு மாதத்திற்கொரு தொழில் தமிழகத்திலே தொடங்குமளவிற்கு இந்த அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது என்று, ஆணவத்தோடு அல்ல; ஆசையோடு இன்று குடியரசுத்தலைவர் அவர்களிடம் நான் சொன்னேன். அது கேட்டு அவர்களும் சிரித்தார்கள்."

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் மேதகு தமிழக ஆளுநர் திரு. பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் பேசியதாவது:

"மின்வளமும் தொழில்வளமும் பெருக அடிக்கல் நாட்டப்படும் இந்த நாள் தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான நாள் ஆகும்.

"தமிழ்நாட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திட்டக் குழுவின் பணிகள் மேம்பட வேண்டும். மின்சார உற்பத்தி, எதிர்கால மின்திட்டங்கள் பற்றியும் எத்தகைய தொழில்கள் முன்னுரிமை பெறலாம், நிலத்தடி நீரைச் சிக்கனச் செலவில் எடுக்க வாய்ப்புண்டா என்பன பற்றியும் ஆராய்ந்து அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மேம்பாட்டையத் தொலை நோக்குத் திட்டம் தேவை."

-மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்குப் பின், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், சென்னை அனல் மின் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டிச் சிறிது நேரம் தமிழிலும் பிறகு ஆங்கிலத்திலுமாகப் பேசியதாவது:

"தமிழகத்தில் இயற்கை வளங்கள் பற்றாக் குறை காரணமாக அணுமின்சாரத்தை நம்பியிருப்பதைத் தவிர வேறு வழியில்லை. தமிழ்நாட்டில் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள கூடங்குளத்தில், மத்திய அரசு 2000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன்கொண்ட அணுமின்நிலையத்தை அமைக்க இருக்கிறது. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவும், எவ்வகையிலும் பொதுமக்கள் பாதிக்கப்படாதபடி முழுப் பாதுகாப்பளிக்கவும் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருவதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். கூடங்குளம் அணு






அயராத உழைப்பு

அயராத உழைப்பு, உயர்ந்த நிலையிலும் அடக்கமான எளிய வாழ்க்கை, எளிய மக்களை வாழ வைப்பதற்காக அயராத தொண்டு, அரசியலில் நேர்மை, பொது வாழ்வில் தூய்மை-இவற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் காமராஜ்.

பல்கலைக்கழகப் படிப்போ, பட்டமோ பெறாத நிலையிலும், உண்மையான உழைப்பால்-தியாகத்தால்-உயர் பதவியை எட்டிப் பிடிக்க முடியும், பதவி நம்மை நாடிவரும், என்பதற்குக் காமராஜின் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டு. இந்திய ஜனநாயகத்தின் ஆணி வேரே இதுதான்.

—18.8.1977 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் பெருந்தலைவர் காமராஜ் உருவப்படத்தை திறந்து வைத்து, அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

மின்நிலையம் அப்பகுதி மீனவர்கள் உழவர்கள் மற்றும் பொது மக்கள் நலனை எவ்வகையிலும் பாதிக்காதவண்ணம் தென் மாநிலங்களின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்யும்.

"தமிழக முதலமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் அக்கறை எடுத்துக்கொண்டு இன்று இத்திட்டத்தைத் துவக்க வழிகோலியமைக்காகப் பாராட்டுகிறேன். இத்திட்டத்தின் முதல் கட்டத்தில் 630 மெகாவாட் மின்சாரமும், பல கட்டமாக 2050 மெகாவாட் மின்சாரமும் இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

மின்சாரம்தான் நமது தேசீய வளர்ச்சிக்கு அடிப்படை. 7-வது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில்-22,245 மெகாவாட் என எதிர்பார்க்கப்படுகிறது. 8-வது திட்டத்தில் கணிசமான அளவு மின்உற்பத்தி பெருக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. அவைகளில் தமிழ்நாடு தனக்குரிய பங்கைப் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

"மறைந்த பெருந்தலைவர் காமராஜரின் தொலைநோக்கு காரணமாக தமிழ்நாட்டில் அதிக மின் உற்பத்தி ஆகிறது.

"7-வது திட்டகாலத்தில் தமிழகத்தில் 1,416 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இப்போது 3,642 மெகாவாட் மின்சாரம் உற்பத்தியாகிறது. இது தமிழ் நாட்டின் தேவைக்குப் போதுமானதல்ல. புனல் மின் உற்பத்தியைப் பெருக்க வழியில்லை,; அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி கிடைக்கவில்லை. எனவேதான் அண்மையில் தமிழகத்தில் மின் உற்பத்திக் குறைவு ஏற்பட்டது. இதைச் சரிக்கட்ட நெய்வேலி அனல் மின்நிலையம் பெரிதும் உதவியது.

"குடிசைகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் தமிழக அரசு புரிந்துள்ள சாதனையைப் பாராட்டுகிறேன்.

"ரூ. 721 கோடி மதிப்பீட்டில், 630 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் இத்திட்டம் குறித்த காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

"இந்தப் பகுதியில் உள்ள வறுமையில் வாடும் மக்கள் மீன்பிடித் தொழில் தவிர வேறு தொழில் செய்ய முடியாத நிலை. இந்தத்திட்டத்தின் மூலம் இப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்க இந்த நன்னாளில் வாழ்த்துகிறேன்."

-இவ்வாறு மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் பேசினார்.

விழா முடிவில்-மின்வாரிய உறுப்பினர் (உற்பத்தி) திரு. கே. கிருஷ்ணசாமி நன்றி கூறினார்.

-நிகழ்ச்சித்தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்.



## அனுபவமிக்க தலைவர்

நம்முடைய மாபெரும் சுதந்திரப் போராட்டத்தின் மூத்த தலைமுறையின் கடைசி இணைப்புச் சங்கிலியாக - அனுபவமிக்க தலைவராக காமராஜர் விளங்கினார்.

—திருமதி இந்திரா காந்தி

## இந்தியாவின் லெனின்

ரஷ்ய ஆட்சியில் பொதுவுடைமைத் தத்துவம் ஏற்பட லெனின் எப்படிக் காரணமாயிருந்தாரோ அதே மாதிரிதான், இந்தியாவில் இந்திய அரசாங்க ஆட்சியில், சமதர்மம் கொள்கையாக ஏற்பட திரு. காமராஜர்தான் காரணம்.

-தந்தை பெரியார்



## கண்ணீரைப் படித்தவர்



காமராசர் அவர்கள் படிக்கவில்லையே தவிர, 'கல்லூரியில் நான் படிக்கவில்லையே' என்கிற ஏக்கம் கொண்டவர்.

கல்லூரியில் அவர் படித்துப் பட்டம் பெறவில்லையே தவிர - அவர் படிக்கவே இல்லை என்று பொருள் கொள்ளக் கூடாது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவர் படித்துக் கொண்டுதான் இருப்பார்.

இதை ஆறடி மேடையில் மாலை நேரத்தில் பொதுக்கூட்டங்களில் மட்டுமே பார்ப்பவர்கள் புரிந்து கொள்ள முடியாது.

ஆனால் என்னைப் போல் நெருங்கிப் பழகுகிறவர்கள் அவரது படிப்பு ஆர்வத்தைப் புரிந்து கொள்வார்கள்.

காமராசர் கல்லூரியில் படிக்கவில்லையே தவிர - வாழ்க்கைப் பாடத்தை நன்றாகப் படித்தவர்!

மக்களின் புன்னகையை - பெரு மூச்சை - கண்ணீரைப் படித்து அவர் பாடம் பெற்றார்.

முப்பது ஆண்டு, நாற்பது ஆண்டு என்று மக்களிடம் தொண்டாற்றினால்தான் இந்தப் பாடத்தைப் பெற முடியும்.

—பேரறிஞர் அண்ணா



# ஏழை மக்களின் நண்பர்

—திரு. ஜி. பூவராகன், எம்.எல்.ஏ.

மக்கள் நெஞ்சத்தில் குடி கொண்டிருப்பவர் திரு. காமராஜ்.

சுதந்திரப் போராட்டத்தின் போது, இவர் புரிந்த தியாகச் செயல்கள் இளைஞர் நெஞ்சில் வீரக்கனலை மூட்டும்; தாய் நாட்டுப் பற்றை வளர்க்கும். சுதந்திர இந்தியாவைக் காணப்புறப்பட்ட காங்கிரஸ் இயக்கத்தில் சிறுவயதிலேயே இவர் ஈடுபாடு கொண்டு விளங்கினார். பதினெட்டு வயது இளைஞராயிருந்தபோதே இவர் ஆற்றிய பணிகள் பெருமை தரக்கூடியவை.

கிராமம் கிராமமாக, கூட்டம் கூட்டுவதிலிருந்து, ஸ்ரீ சத்தியமூர்த்தி போன்ற தலைவர்களுக்குத் தோள் கொடுத்து மிகப் பெரிய போராட்டங்களை நடத்துவதுவரை, தனித் திறமை வாய்ந்தவராக அன்றே விளங்கினார்.

விடா முயற்சியோடு காரியமாற்றும் திறனால் இவர் எடுத்த காரியம் அனைத்திலும் பெரு வெற்றி பெற்றார்.

"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.'

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக இவர் வாழ்க்கை அமைந்திருந்தது.

ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் பெருங் கவனம் செலுத்தி வருகிறார். ஏழை மக்கள் வாழ்வில் உள்ள சிக்கல்களைப் புரிந்து கொள்வதிலும், அவற்றைத் தீர்த்து வைப்பதிலும் இவர் காட்டும் ஆர்வம் மிகுதி. "குடியிருக்க வீடு, உடுக்க உடை, வயிறார உணவு, அறிவு வளரக் கல்வி" இவை ஏழை மக்களின் அத்தியாவசியத் தேவைகள். இவைகளை எல்லோருக்கும் ஏற்படுத்தித் தரும் வரை ஓய மாட்டேன்" என்று வற்புறுத்திக் கூறுகிறார். ஏழை மக்களுக்குக் கல்வி வசதி ஏற்படுத்தித் தருவதற்காகவே, கிராமந்தோறும் பள்ளிகளை ஏற்படுத்தி இருக்கிறார். பள்ளிகளில் இலவச உணவு, இலவச உடை வழங்கும் ஏற்பாடு சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது.

முதியோருக்கு உதவிப்பணம் அளிக்கும் ஏற்பாடும் இவரது முயற்சியால் ஏற்பட்டதே.

இவரது பேச்சும் சிந்தனையும் ஏழை மக்களின் வாழ்வு பற்றியே என்றும் இருக்கும். இந்த நாட்டை நீண்ட காலமாகப் பிடித்திருக்கும் வறுமைப் பேயை ஓட்டி, மக்களின் சுமைகளைக் குறைத்து, வளமான வாழ்வு மலரச் செய்ய வேண்டும் என்பதே இவரது கனவு. செய்ய முடிந்ததைச் சொல்வதும், சொன்னதைச் செய்து முடிப்பதும் இவரது தனிச் சிறப்புகளாகும். மக்களின் வாழ்வே தம் வாழ்வு என்று அயராது மக்களுக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறார்.

தேசப்பற்று நிறைந்த இளைஞர்கள் மக்களுக்காகப் பணியாற்ற, மேலும் மேலும் முன்வர வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறார். தேசப் பணியில் இவருக்குள்ள ஆர்வம், சிக்கல்களைத் தீர்த்து வைப்பதில் இவருக்குள்ள திறமை, எளிய வாழ்க்கை இளைஞர்களுக்கு என்றும் நற்பாடம் புகட்டக் கூடியவையாகும். அதனால் தான் இளைஞர்கள் இவரைக் கண்கண்ட தலைவராகக் கருதிப் போற்றி வருகிறார்கள்.

(பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 60-வது பிறந்த நாள் சிறப்பு மலரில் எழுதிய கட்டுரையின் சில பகுதிகள். காமராஜரின் பிறந்த நாளையொட்டி (ஜூலை-15) இவ்விதழில் வெளியிடப் [illegible].)



பண்டித ஜவகர்லால் நேருவுடன்



மூதறிஞர் இராஜாஜியுடன்

## அட்டைப்பட விளக்கம்:

பெருந்தலைவர் காமராஜரின் 87-வது பிறந்த நாளையொட்டி, அவருடைய திருவுருவப்படம் இவ்விதழ் அட்டையை அலங்கரிக்கிறது.

# பார்த்தோம் படித்தோம்



'சொன்னதைச் செய்வோம்-செய்வதைச் சொல்வோம்' மூலம் மாநில அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாகவும், அதற்குக் கூடுதலாகவும் ஊதியம் வழங்கி எங்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்று விட்டார் முதல்வர் கலைஞர். மனமார்ந்த பாராட்டுக்கள்.

*-எல். கிரி,*
*அகரம் பரங்கிப்பேட்டை.*

புலவர் தமிழ்ப்பித்தன் எழுதிய, நூலக வளர்ச்சி மாநாடு பற்றிய தொகுப்பும், பொது நூலகங்கள் குறித்த செய்திகளும் என் போன்றோருக்கு மிகவும் பயனுள்ளவையாக இருந்தன.

*-அ. சுப்பையன்,*
*நூலகர், செட்டிக்குறிச்சி.*

16.6.89 இதழ் அட்டைப் படம் மிக அருமை.

*-டி. ரமேஷ் துளசி,*
*பரங்கிப்பேட்டை.*

அம்சாதனகோபாலின் 'சொர்க்கக் கனாக்கள்' சிறுகதை என் மனத்தைத் தொட்டது.

*-துரை வேணுகோபால்,*
*பரங்கிப்பேட்டை.*

கவிஞர் கரந்தை கணேசன் கவிதை அற்புதமாக இருந்தது.

*-க. கோபி,*
*சென்னை-109.*

டாக்டர் சிலம்பொலி செல்லப்பனின் 'கோழியின் காலில் சலங்கை கட்டலாமா?' கட்டுரை இனிமை.

*-செ.மு. வேடியப்பன்,*
*எச். ஈச்சம்பாடி.*

ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரை மீது அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்த முதல்வரின் அறிக்கை பயன்படும் வகையில் இருந்தது.

*-ஏ. கந்தசாமி,*
*திருப்பூர்.*

'பூண்டி அகழ்வைப்பகம்' கட்டுரை பாதுகாக்க வேண்டிய ஒன்று.

*-எல். பிரபாகரன்,*
*மேல்பாலானந்தல்,*

முதல்வர் கலைஞரின் கருத்து மணிகள் மிகமிக அருமை.

*-ப.அ. சண்முகம்,*
*களம்பூர்.*

தமிழரசு புதுப் பொலிவுடன் வெளி வருகிறது.

*-கே.எம். ஷம்மி குமார்,*
*வேலூர்-2.*

அண்ணா பண்ணை பற்றிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

*-ப.அ. சின்னத்தம்பி,*
*உழவர் ஆய்வு மன்றம்.*
*அலங்கம்பட்டி.*

கோட்டையின் வரலாறு பற்றிய கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. தெரியாத விவரங்கள் தெரிந்து கொண்டேன்.

*-டி. சிவலிங்கம்,*
*ஒக்கிலிப்பட்டி.*

## இருபதே நிமிடங்களில் ஒரு நல்ல முடிவு!

'எம்.ஜி.ஆர். ஆரம்பித்த பணியாயிற்றே, நாம் ஏன் அதைத் தொடர வேண்டும்? முன்பு அ.தி.மு.க.' அரசு நாம் ஆரம்பித்த வீராணம் திட்டத்தை அம்போ என்று விட்டு விடவில்லையா?' என்று முதல்வர் நினைக்கவில்லை. மாறாக, ஆந்திர முதல்வரைச் சந்தித்து, இருபதே நிமிஷங்களில் ஒரு நல்ல முடிவுக்கு வந்தார். யாருக்குமே புரியாத காரணங்களுக்காக எம்.ஜி.ஆர்- முன்பு நிறுத்தி வைத்திருந்த தவணைத் தொகைகளைத் தருவதாக ஒப்புக் கொண்டார். அடுத்தாற்போல் தரப்பட வேண்டிய தொகைகளுக்கும் நடக்க வேண்டிய காரியங்களுக்கும் ஒரு திட்டம் வகுத்துத் திரும்பியிருக்கிறார். இதன் மூலம், குடிநீர்க் கஷ்டத்தை வருஷா வருஷம் அனுபவித்து வரும் சென்னைவாசி ஒவ்வொருவருடைய நன்றிக்கும் பாத்திரமாகியிருக்கிறார். இங்கே, இப்போது நிலத்தடி நீருக்குக் கூடப் பஞ்சம் வந்துவிட்டது மட்டுமல்ல; மிக அதிகமாக நிலத்தடி நீர் எடுக்கப்படுவதால் கடல் நீர் உட்புகுந்து எல்லாமே உப்புமயமாகி விடும் அபாயமும் அதிகரித்திருக்கிறது. இந்தச் சமயத்தில் வறட்டுக் கௌரவம் பாராமல் முதல்வர் செயல்பட்டிருக்கும் விதம் பாராட்டுக்குரியது.

*(9.7.1989-ஆம் நாளிட்ட 'கல்கி' இதழின் தலையங்கத்திலிருந்து)*





# அரசு ஊழியர்க்கு மேலும் சலுகைகள்

அரசு அலுவலர்களுக்கு இந்த ஊதிய விகித புதிய மாற்றங்களின் மூலம்-மற்றும் அகவிலைப்படி ஆகியவைகளை வழங்குவதற்காக-மொத்தமாக 245 கோடி ரூபாயும் - ஓய்வூதியம் வழங்குவதற்காக 40 கோடி ரூபாயும், தொகுப்பூதியத்தில் உள்ள அலுவலர்களுக்கான ஊதிய உயர்வினால் ஏற்படும் செலவு மற்றும் இதர படிகளினால் ஏற்படும் செலவு 27 கோடி ரூபாயும் 1.1.89 முதல் வழங்கப்படும் அகவிலைப் படியினால் ஏற்படும் செலவு 88 கோடி ரூபாயும் ஆக மொத்தம் ஆண்டுதோறும் 400 கோடி ரூபாய் அதிகச் செலவு இதனால் ஏற்படுகின்றது. இருந்தாலுங்கூட அளித்த வாக்குறுதியை மீறக்கூடாது என்பதை மாத்திரமல்ல, மத்திய அரசுக்குச் சமமான ஊதியத்தை என்னுடைய மாநில அரசு அலுவலர்களும் பெறுகிறார்கள் (பலத்த கைத்தட்டல்) என்கிற அந்தப் பெருமை எனக்கும் உங்களுக்கும் வரவேண்டும் என்பதற்காகத்தான் கஷ்ட நஷ்டங்களைத் தாங்கிக் கொண்டு இந்தப் பணியினை நாங்கள் செய்ய முன் வந்திருக்கிறோம்.

இந்த அரசின் சார்பிலே உங்களுக்கு அளிக்கப்பட்ட ஊதியம் மாத்திரமல்ல, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு திரும்பப் பெறப்பட்ட வழக்குகள் - அலுவலாளர்கள் ஆசிரியர்கள் மீது போடப்பட்டிருந்த வழக்குகள், ஏறத்தாழ 90 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. அதனால் - அந்த வழக்குகளிலே தொடர்புபடுத்தப் பட்டு, இன்றைக்கு பயன்பெற்றவர்கள் ஏறத்தாழ 4,800 பேர். இது தவிர இலாகா பூர்வமான நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் 1,180 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். ஆக மொத்தம் ஏறத்தாழ ஆறாயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த ஐந்து மாதக் காலத்திலே வழக்குகள், தண்டனைகள், நடவடிக்கைகள் இவைகளால் பாதிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சிவ. இளங்கோ அவர்கள் படித்துக் காட்டிய கோரிக்கைகளில் ஏழாவது கோரிக்கையிலிருந்து ஒன்பதாவது கோரிக்கை வரையில் - 82-ஆம் ஆண்டு நடந்த போராட்டத்தைத் துவக்கி வைத்து தேனாம்பேட்டை வளாகத்தில் 13.10.82 அன்று ஆற்றிய சொற்பொழிவுக்காக தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளராக இருந்த எபனேசரை, அவர் ஓய்வு பெறுவதற்கு முன், தற்காலிகப் பணி நீக்கம் செய்து ஐந்தாண்டு காலத்துக்குப் பிறகு தண்டனை வழங்கியதன் விளைவாக, அவர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் 1.1.83 முதல் 15.7.83 முடிய முழுச் சம்பளம் வாங்கியதை ஓய்வூதியத்தில் பிடித்துக்கொள்ள உத்தரவிட்டதால் இன்னும் முறையான ஓய்வூதியமும், ஓய்வூதியத்தை கம்யூட் செய்த பணமும், முழுப் பணிக் கொடையும் வாங்க முடியாத நிலையில் ஓய்வு பெற்று ஏழு ஆண்டுகளாகி இருப்பதால், அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து, குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொண்டு 16.7.83 முதல் ஓய்வு பெறும் ஆணை வழங்க வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படுகின்றது (பலத்த கைதட்டல்) என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். 1978-இல் நடந்த வேலை நிறுத்த காலம் தொட்டு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் உறுப்பினர்களில் சிலர் மறைமுகமாகப் பழிவாங்கப்பட்டார்கள்.

திரு. சிவபூஷணம், தமிழரசு அச்சகத்திலே பணி புரிந்தவர், பணி நீக்கம் செய்யப்பட்டு, மேல்முறையீட்டில் உத்தரவு ரத்து செய்யப்பட்டு, பின்னர் மீண்டும் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அவர் மீதான குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொண்டு அவரைப் பணியிலே சேர உத்தரவிடவேண்டுமென்று ஒரு கோரிக்கை இங்கே வைக்கப்பட்டுள்ளது. அதுவும் நிறைவேற்றப்படுகின்றது. (கைதட்டல்).

திரு. போஸ்கோராஜ் என்ற இளநிலை உதவியாளர் பத்திரப் பதிவுத்துறை அமைச்சுப்பணியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தார். அந்தச் சங்கத்தைக் கடந்த காலத்தில் சி அண்டு டி. சங்கத்திலே இணைத்துக் கொள்ள முயற்சி செய்து அது பலன் அளிக்காததால், இதயம் பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்தார் என்ற காரணத்தை வைத்து ஐந்து ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வைத் தள்ளிப்போடும் தண்டனையும் ரத்து செய்யப்படுகின்றது (பலத்த கை

தட்டல்) என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்ட அரசு அலுவலர் ஒன்றியத் தலைவர் விசுவாசம் அவர்களின் சங்கப்பணி காரணமாகவும், அப்போதுள்ள நிர்வாகச் சிக்கல் காரணமாகவும் அவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்தப் பழி வாங்கும் நடவடிக்கை இந்த அரசினால் ஏற்கெனவே ரத்து செய்யப்பட்டு விட்டது. அதுபோல விசுவாசம் மீதுள்ள வழக்கைத் திரும்பப் பெறுமாறு கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 'விசுவாசம்' மீது யாரும் வழக்கு போடமாட்டார்கள். (சிரிப்பு) எனவே அப்படி ஒரு வழக்கு இருந்தால் அது திரும்பப் பெறப்படும். (கைத்தட்டல்)

1981-ஆம் ஆண்டு வணிக வரிப் பணியாளர் போராட்டத்தின்போது 3.9.81 முதல் 20.9.81 வரை 13 நாட்கள் வேலை நிறுத்தம் செய்த காலம் சம்பளமில்லா விடுப்பாகப் போடப்பட்டது. இதைப் பரிசீலனை செய்து ஈட்டிய விடுப்பாக ஆணை பிறப்பிக்குமாறு அரசை இந்த மாநாடு கேட்டுக் கொண்டுள்ளது. இந்த வேண்டுகோளும் நிறைவேற்றப்படுகின்றது. (கைதட்டல்)

திரு. கோ. அண்ணாவி, திரு. க. கருணாநிதி முதலிய 13 சங்கத் தலைவர்களுக்கு 2 முதல் 3 ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வு - போராட்டத்தை ஒட்டி நிறுத்தப்பட்டது. இந்த தண்டனைகளை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த மாநாட்டில் சிவ. இளங்கோ கேட்டுக்கொண்டார். ரத்து செய்யலாம். இதிலே "கருணாநிதி" என்ற பெயரும் இருக்கின்ற காரணத்தால் - அதற்காக ரத்து செய்வதாக எண்ணாதீர்கள், இருந்தாலும் ரத்து செய்யப்படுகிறது. (கைதட்டல்)

இதைத்தவிர இங்கே உங்களுடைய ஒரு சில கோரிக்கைகளை நிறைவேற்றியது மாத்திரமல்ல. நீங்கள் அதிகமாக கையொலி செய்ததே, சனிக்கிழமை விவகாரத்திலே தான். ஆனால் அதற்கு நான் விளக்கம் தர விரும்புகிறேன். உங்களுக்குத் தெரியாத விளக்கமல்ல. மத்திய அரசு அலுவலாளர்கள் இப்போது காலை 9 மணி முதல் மாலை 5 1/2 மணி வரையிலே பணியாற்றுகிறார்கள். அதாவது அரை மணி நேரம் இடைவேளை போக எட்டு மணி நேரம் பணியாற்றுகிறார்கள். எனவே மாதம் ஒன்றுக்கு சுமார் 160 மணி நேரம் அவர்கள் பணியாற்றுகின்றார்கள்.

நீங்கள் மத்திய அரசு அலுவலர்களுக்குச் சமமான ஊதிய உயர்வு கேட்டீர்கள். ஆனால் அவர்கள் 160 மணி நேரம் பணியாற்றுகின்றார்கள். மாநில அரசு அலுவலாளர்கள் இப்போது காலை 10 மணி முதல் மாலை 5 1/2 மணி வரை பணியாற்றுகிறார்கள். அதாவது அரை மணி நேரம் இடைவேளை போக ஏழு மணி நேரம்தான் பணியாற்றுகிறீர்கள். இந்த வகையிலே மாதம் ஒன்றுக்கு 140 மணி நேரம்தான் நீங்கள் பணியாற்றுகின்றீர்கள்.

ஆக 20 மணி நேரம் மாநில அரசு அலுவலர்கள் குறைவாகப் பணியாற்றியதாலும் - இப்போது மத்திய அரசு அலுவலர்களுக்கு சமமான ஊதியம் அளிப்பதாலும் சனிக்கிழமை விடுமுறைவிட முடியாத நிலை ஏற்பட்டது. நீங்களே தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். முதலமைச்சர் ஞாயிற்றுக்கிழமையிலே பணியாற்றவில்லையா என்றெல்லாம் இங்கே பேசியவர்கள் சுட்டிக் காட்டினார்கள். தம்பி டி.ஆர். பாலு கொஞ்சம் கோபமாகக் கூட இங்கே உங்களைக் கண்டித்துக் கூடப் பேசினார். எங்கே நீங்கள் சீறி விடுவீர்களோ என்று, 'நானும் ஒரு காலத்தில் அரசுப்பணியாளன்தான்' என்று சொல்லி தம்பி பாலு தப்பித்துக் கொண்டார்.

இருந்தாலும் உங்களுக்கு நான் கூற விரும்புகிறேன். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் அதிகமாக வேலை செய்தால் கூட, இன்றைக்கு பொது மக்களுக்கு - வாரத்திலே இரண்டு நாள் விடுமுறை வந்து விடுகின்ற காரணத்தால் அவர்கள் அரசு அலுவலகங்களை நாடி தங்களுடைய குறைகளைத் தெரிவிக்கவோ தங்களுடைய தேவைகளை நிறைவு செய்து கொள்ளவோ முடியாமல் கஷ்டப்படுவதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

இன்னொன்றையும் சொல்கிறேன். ஒரு நாள் உங்களுக்கு விடுமுறை இருந்தால்தான் நல்லது. அதிகச் சம்பளத்தையும் கொடுத்து இரண்டு நாள் விடுமுறையும் கொடுத்தால் நீங்கள் வீணாக அந்தப் பணத்தைச் செலவு செய்து விடுவீர்கள் (சிரிப்பு). எனவே அது ஒரு காரணம். இரண்டு நாள் விடுமுறை கொடுத்தால் இரண்டு நாளும் சினிமாவிற்குச் செல்வீர்கள், ஊர் சுற்றுவீர்கள். வீட்டிலே இருக்கின்ற பெண்கள் கூட - வேலை பார்க்கின்ற பெண்கள் கூட அல்ல - வேலைக்கு கணவனை அனுப்பி விட்டு வீட்டிலே இருக்கின்ற பெண்கள் கூட அநாவசியமாகச் செலவாகிறதே என்று வருத்தப்படுவார்கள். எனவே அந்தச் சகோதரிகளுக்காக நான் வாதாட வேண்டியவனாக இருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே உள்ள பொதுமக்கள் பொதுவாக அனைவருமே சனிக்கிழமையும் நீங்கள் பணியாற்ற வேண்டும் என்பதைத் தான் விரும்புகிறார்கள். எனவே அதை நீங்கள் தயவுசெய்து சிந்திக்க வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் இன்றைக்கு புதிதாக அறிவிக்கின்ற சில செய்திகளை நீங்கள் கேட்ட பிறகு இந்த சனிக்கிழமை விவகாரத்தை வலியுறுத்த மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.

ஊட்டச் சத்துத் திட்டம், மற்றும் சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் பெண் பணியாளர்களுக்கு இதுவரை பிரசவ கால விடுப்பு வழங்கப்படவில்லை. இனிமேல் அவர்களுக்கு மூன்று மாத காலம் பிரசவ கால விடுப்பு முழு ஊதியத்துடன் வழங்கப்படும் (பலத்த கைதட்டல்). இதனால் சுமார் தொண்ணூறு ஆயிரம் பெண் பணியாளர் பயன்பெறுவார்கள்.

ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு முன்னால் ஒரு மாதத்தில் மூன்று முறை அனுமதியுடனும், அனுமதியில்லாமலும் ஒரு மணி நேரம் தாமதமாக வர விதிகளில் வழி இருந்தது. இப்பொழுது அந்த வழி அடைக்கப்பட்டது. மீண்டும் அந்த வழி உங்களுக்குத் திறந்து விடப்படுகிறது. (கைதட்டல்). நீங்கள் எப்போது வேண்டுமானாலும் தாமதமாக வாருங்கள். உங்கள் பாடு, தமிழ்நாட்டு மக்கள் பாடு, அவ்வளவுதான். ஆனால் ஒன்று. நான் இப்போது அறிவிக்கின்றேன். யாரையும் கலந்து கொண்டு கூட அல்ல. யார் ஆண்டு முழுவதும் ஒரு நாள் கூட தாமதமில்லாமல் அலுவலகத்திற்கு வருகிறார்களோ அவர்களுக்கு எல்லாம் தமிழ்நாடு அரசின் சார்பில் பதக்கங்கள் வழங்கப்படும் (கைதட்டல்).

தற்போது அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்கு 13 கோடி ரூபாய் கடன் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருந்தேன்.

அந்த 13 கோடி ரூபாயை மேலும் உயர்த்தி - அதிகமாக 15 கோடி ரூபாய் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆக மொத்தமாக 28 கோடி ரூபாய் வீடு கட்டுகின்ற அந்த திட்டத்திற்காக வழங்கப்படும் (கைதட்டல்) என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு அலுவலர்களின் குடும்பங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் குடும்பநல நிதி முன்பு நமது தி.மு. கழக ஆட்சியிலே தான் ஏற்படுத்தப்பட்டது. தற்போது மாதம் ஒன்று 3 ரூபாய் ஊதியத்திலே பிடித்தம் செய்யப்பட்டு, ஒரு அரசு அலுவலர் பணிக் காலத்திலே இறந்தால் அவர் குடும்பத்திற்கு 20,000 ரூபாய் இப்போது வழங்கப்படுகிறது. இந்தப் பிடித்தத்தை மாதம் ரூபாய் மூன்றுக்குப் பதிலாக ரூபாய் ஐந்து என்று மாற்றி அரசு அலுவலர் ஒருவர் பணிபுரியும் காலத்தில் இறந்தால் இனிமேல் அந்தக் குடும்பத்திற்கு நாற்பதாயிரம் ரூபாய் வழங்கப்படும் (பலத்த நீண்ட கைதட்டல்) இனிமேலாவது சனிக்கிழமை பிரச்சினையை விட்டு விடுங்கள்"

*(30-6-89 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் 53வது மாநில மாநாட்டில் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)*



# நெசவுத் தொழிலாளர் நலம் பெற...

***பீ***டித்தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்களை அடுத்து இப்போது நெசவுத் தொழிலாளர்களுக்கும் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி 50 சதவீதம் அதிக ஊதியம் கிடைக்கும்.

செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்து ராமலிங்கம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்திலுள்ள நெசவுப் பெருமக்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க 1981ம் ஆண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் குறைந்த பட்ச ஊதியம் 1983-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த பட்ச ஊதியம்தான் இதுநாள்வரை, அதாவது கடந்த 5 ஆண்டு காலமாக அமலில் இருந்து வந்தது.

இப்பெருமக்களின் நலம் பேண நினைத்த இன்றைய ஆட்சி, தனது கட்சியின் தேர்தல் அறிக்கையில் இவர்களுக்கான சீரான ஊதியத்தை வழங்க முயலுமென வாக்குறுதி அளித்திருந்தது. இப்போது அவர்களுக்கான குறைந்த பட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மறுநிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் ஏற்கனவே நடைமுறையில் இருந்த ஊதியத்தைவிட கணிசமான அளவு உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதற்கான விவரம் கீழே தரப்பட்டிருக்கிறது.

மேற்கண்ட ரகங்கள் தவிர பல இனங்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. நூல் இழைத்தல், பாவு செய்தல், அச்சு புனைதல், அச்சுக் கோத்தல், தார் சுற்றல், கயிறு கட்டல் போன்ற வேலைகளுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தைவிட இப்போது 50 சதவீதம் அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த அரசால் இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் தவிர மாறிவரும் விலைவாசிக் குறியீட்டெண்ணுடன் இணைந்த அகவிலைப்படியும் தரப்படவேண்டுமென உத்தரவிட்டிருப்பது குறிப்பிடத்தக்க முக்கிய அம்சமாகும்.

இவர்களுக்கு அகவிலைப்படி இப்பொழுதுதான் முதன்முதலாக வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே நெசவாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தில் அகவிலைப்படி வழங்கும் மாநிலங்களில் தமிழகம் இரண்டாவது மாநிலம் எனக் கருதுகிறேன். முதலாவது மாநிலம் கேரளா. இந்தக் குறைந்த பட்சக்கூலி நிர்ணயத்தினால் சுமார் 25 இலட்சம் நெசவாளர்கள் பயனடைவார்கள். இந்தத் திருத்தியமைக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் உடனடியாக அமலுக்கு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சகூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இதே போன்று மேலும் இருக்கின்ற 'அன் ஆர்கனைஸ்டு செக்டருக்கான' (Unorganised Sectors) குறைந்தபட்சக் கூலி விகிதங்களை நிர்ணயம் செய்ய இருக்கிறோம்.

முதல்வர் கலைஞர் அவர்களின் ஒப்புதலோடு நெசவாளர்களுக்கான திருத்தியமைக்கப்பட்ட குறைந்தபட்சக் கூலிநிர்ணயம் அமலுக்கு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் பொன். முத்து ராமலிங்கம் கூறினார்.

## நெசவுத் தொழிலாளர் ஊதிய உயர்வு விவரம்!

| வரிசை எண் | துணியின் ரகங்கள் | 1983-ஆம் வருடம் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் | தற்போது மறு நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த பட்ச ஊதியம் | மறு நிர்ணயம் செய்யப்பட்டதால் கிடைத்த ஊதிய உயர்வு |
|---|---|---|---|---|
| | | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 1. | சேலை (கோடம்பாக்கம் ரகம் உட்பட) 100 கவுண்ட்டுக்கு 1 மீட்டருக்கு | 4.42 | 6.65 | 2.23 |
| 2. | வேட்டி 100 கவுண்ட்டுக்கு 1 மீட்டருக்கு | 5.50 | 8.25 | 2.75 |
| 3. | நீளபாவு 100 கவுண்ட்டுக்கு மீட்டருக்கு | 3.86 | 5.80 | 1.94 |
| 4. | காடாபீஸ் 2/80 × 60 காடா 1 மீட்டருக்கு | 2.47 | 3.70 | 1.23 |
| 5. | லுங்கி 80×80 மீட்டருக்கு | 6.63 | 9.95 | 3.32 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | முழு ஆர்ட் சில்க் ரகம் சாதாரண ரகம் 21.60 மீட்டர் கொண்ட ஒரு பாவுக்கு | 29.70 | 44.55 | 14.85 |
| 7. | 26 கவுண்ட் நூல் 16.00 பேண்டேஜ் துணி 1 பீஸுக்கு | 6.24 | 9.36 | 3.12 |
| 8. | மதராஸ் கைக்குட்டை 1 மீட்டருக்கு | 6-2-82 தேதி அன்று கொடுக்கப்பட்ட சம்பளத்திற்கு மேல் 25% அல்லது ரூபாய் 6.25 இதில் எது அதிகமோ அதைக் கொடுக்கவேண்டும். | 1-7-87-இல் கொடுக்கப்பட்ட சம்பளத்திற்கு மேல் 25% அல்லது ரூ. 9.50 இதில் எது அதிகமோ அதைக் கொடுக்க வேண்டும். | 3.25 |
| 9. | துண்டு ஜக்குவார்டு ரகம் 30×60 முழுவதும் | 11.59 | 17.40 | 5.81 |
| 10. | பவானி ஜமுக்காளம் சாதாரண ரகம் பாவு 2×10 சைஸ் 40'×78' ஒரு நபர் நெய்த சாதாரண பாவு அல்லது ஊடு இழை | ஒரு கார்பெட்டுக்கு ரூ. 8.12 அல்லது ஒரு சதுர அடிக்கு 37 பைசா | ஒரு கார்பெட்டுக்கு ரூ. 12.20 அல்லது ஒரு சதுர மீட்டருக்கு ரூ.6.20 | 4.08 |
| 11. | படுக்கை விரிப்பு (பெட்ஷீட் ரகம்) 2×2, 30×90 | 8.05 | 12.10 | 4.05 |

## ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி அரசுடைமை ஆக்கப்பட்டது



ஸ்ரீராமச்சந்திரா எஜுகேஷனல் ஹெல்த் டிரஸ்ட் 1985-இல் நிறுவப்பட்டது. இந்த நிறுவனம், மருத்துவக்கல்லூரி-மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் என்ற அமைப்பை சென்னை போரூருக்கு அருகில் பூந்தமல்லி சாலையில் நிறுவியிருந்தது. இந்த இடம் சுமார் 176 ஏக்கர் பரப்பளவு உள்ளது. இதில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலம் 122 ஏக்கராகும். மேற்படி நிறுவனத்தினர், தனியாரிடமிருந்து 54 ஏக்கர் நிலத்தை மட்டும் விலைக்கு வாங்கியிருந்தனர். இந்த மருத்துவக் கல்லூரியை தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும் என்றும், அந்த வளாகத்துக்குள் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டுமென்றும் முதல்வர் கலைஞர் விரும்பினார். முதல்வரின் விருப்பத்தை நிறுவனத்தினர் ஏற்று, அரசிடம் - ஒப்படைத்துள்ளனர். இந்த அமைப்பு தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்வி, விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி மையம் என்ற பெயரில் ஓர் உயர்தர மையமாகச் செயல்படும்.





# வேர்

## வண்ணதாசன்

இன்னும் எழுந்திருக்கவில்லை.

இப்பொழுதுதான் இமை பிரிந்திருக்கிறது. கை, சன்னல் விளிம்பில் வைத்திருக்கிற கைக்கடிகாரத்தைத் தடவுகிறது! இரண்டு விரல்களின் முதுகுகள் சன்னல் கம்பியின் டைமன் முகப்பின் கூர்மையில் படுகின்றன. ஆ! மார்கழிக்குளிர்! மணி ஆறேமுக்காலுக்கு மேல். இதற்குள் பஜனை போயிருக்கும். வாயாலேயே 'டியூந் டியூங்ஞ்' என்று மோர்சிங் வாசிக்கிற தாடிக்காரரை இன்று ரசிக்க முடியாது. வைகறைப் பண்ணையே சுண்டுவிரலால் கொக்கியிட்டுக் கூட்டிப் போவது போல் அந்தச் சின்னஞ்சிறு பையன் கண்ணில்லாத புல்லாங்குழல்காரரைக் கூட்டிப் போயிருப்பான். கண்ணில்லாதவர்களுக்குத்தான் புல்லாங்குழல் வாசிக்க வரும் என்று நான் சிறு வயதில் நம்பியிருக்கிறேன். எதிர்த்த வீட்டுப்பிள்ளைகளுக்கு எப்படியென்று தெரியவில்லை. கேட்க வேண்டும். அவர்கள் இன்னேரம் பூக்களுக்காகக் காத்திருக்கலாம்.

இந்த நாளைப் பூவோடுதான் தொடங்க வேண்டும்.

ஜன்னல் கம்பிகளூடே வெளியில் பார்க்கிறேன். கரும்பச்சையாய்ப் பின்னிக் கிடக்கிற படவரைக் குழியில் தட்டுத் தட்டாய் பீர்க்கம் பூக்கள். சந்தனக் கிண்ணத்தில் இரண்டு விரலை நனைக்கிற நளினத்தோடு இதையும் இங்கிருந்தே தொடவேண்டும் போலிருக்கிறது. நட்சத்திரங்கள் உதிர்ந்து கிடப்பதுபோல் வெள்ளைப் புடலம் பூக்கள். கருநீல அவரை மஞ்சரி. பக்கத்தில் ஒரு பலசரக்குக் கடைக்காரர் பொட்டலம் போடத் தாளை உருட்டின சுருளைப் போல ஒரு வாழைக்குருத்து. எவ்வளவு பெரிது, எவ்வளவு நீளம் ஒவ்வொரு இலையும்! பத்து வயதுப் பிள்ளை புரண்டு படுக்கலாம். கொஞ்சம் இலைகளில், 'நசுக்கூட்டான்' விழுந்திருக்கிறது. அதற்கு உயரே எதிர்த்த வீட்டு 'செப்டிக் டேங்க்'கின் சிமெண்ட் கம்பம், அதையும் தாண்டிப் பார்த்தால் ஒரு அந்தரங்கமான ரகசியத்தைப் பகிர்ந்து சலசலவெனக் கீழ்க்குரலில் ரசித்துச் சிரிக்கின்ற அரசமரத்தின் பசிய இலைகள். உச்சியில் ஒரே ஒரு காய்ந்த கிளை மின்னல் கிழித்த உருவம்போல் கீறலிட்டு நீண்டிருக்கிறது. ஒரு பச்சைக் கிளி அல்லது ஒரு பல வண்ண மீன்கொத்தி பறந்து வந்து அதில் இப்போது உட்கார்ந்தால் எப்படியிருக்கும்?

எனக்குள் ஒரு உருவமில்லாத கவிதை உதைத்துப் புரள்கிறது. இது ஒரு அனுபவம். நான் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டு 'கீசுகீ' சென்று ஆனைச்சாத்தன் கலந்து பேசின பேச்சரவம், என்று ஒவ்வொரு வரியாய்ச் சொல்லிப் பார்க்கிறேன். தினசரி இந்த மாதம் ஒவ்வொரு பாட்டைப் பாராமல் படிக்க வேண்டுமென்கிற திட்டம். "காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து..." என்பதற்கு மேல் வண்டி நகரவில்லை. மறந்து போயிற்று. திருப்பாவையைப் புரட்ட வேண்டும். இல்லை, தோட்டத்திற்குப் போகையில், குளிக்கையில் ஞாபகப்படுத்த வேண்டும். முடியா விட்டால்தான் புரட்டல்.



தோட்டத்துக்குப் போய்விட்டு வருகிறேன். ஈரம் பட்டதும் சுவரோரமாய் ஒதுங்கிச் சுருண்ட பூச்சிகள் இப்போது, சுருளை நிமிர்த்தி மறுபடி நகர ஆரம்பித்திருக்கும். தொழுவத்துச் சாணம் நாற்றமெடுக்கிறது. நான் அடுத்த வீட்டுக் கன்றுக் குட்டியையே பார்க்கிறேன். இளங்கன்று. தொப்புள் கொடி காய்ந்திருக்காது இன்னும். தாய்ப்பசுவிற்குச் சீம்பால் நிறம்கூட மாறவில்லை. அவ்வளவு இளையது. பாவம். எழுந்திருக்க முடியவில்லை. ஒரு தவளையைப்போல், முனிவர்கள் வரித்திருக்கிற ஒரு புலித்தோலைப் போல், கால்களை அகலப் பரப்பிக் கொண்டு படுத்துக் கிடந்தது. பழஞ் சாக்கிற்கு மேல் சண்டு வைக்கோலைத் தூவிப் படுக்கப் போட்டிருந்தார்கள். லேசாக வந்து கொண்டிருக்கிற வெயிலில் முகத்தைத் தூக்கிக் காட்டியபடி புசுபுசுவென்று மூச்சு விட்டுக் கொண்டிருந்தது. கிறங்கிக் கிறங்கிக் கண்கள் மூடின.

ஒரு சங்கடமான அனுதாபத்தோடு அதைத் தூக்கி நிறுத்தினேன். கைகள் இரண்டையும் இடுப்புக்குக் கீழ் கொடுத்துத் தாங்கிப் பிடித்தேன். கையெல்லாம் ஒரே நாற்றம். ஒரு வெற்றியணியின் புகைப்படத்தில் கோப்பைக்கு இருபுறம் சாத்திய ஹாக்கி மட்டைகளைப் போல முன்னங்கால்கள் இரண்டும் பக்கவாட்டில் திக்குக்குத் திக்கு வளைந்தன. அந்தக் கம்பீரமில்லை. வாழைத்தார் மாதிரி ஒரு தொய்வு. ஒரு பனிச் சறுக்கு நடன நிலையைப் போல கால்கள் கட்டுப் படாமல் நழுவுகின்றன. உடல் பாரம் அழுத்த அழுத்த காம்பஸ் [illegible] களைப் பிளந்தது போல் கால்கள் விரிகின்றன. குளம்புப் பக்கம் [illegible] கியது. பின்னங்கால்கள் இரண்டும் தான் ஸ்திரம். அவைகூட கொஞ்ச நேரத்திற்கு ஒரு தடவை, கூடு கெட்ட

எதிரி ஒருவனைத் தாக்குகிற ஆக்ரோஷத்தோடு விலுக்கிட்டன. உடல், சற்று நேரத்திற்கு முன் யாரோ ஆட்டி விட்டுப் போன ஊஞ்சல் வேகம் மட்டுப்பட்டு, சுயகதிக்கு வருகின்ற மெல்லென்ற அசைவைப் போல் முன்னும் பின்னும் ஆடுகிறது''. அதைப் போட்டு ஏன் தூக்கி விடுதிய, அதுக்கு விதிச்சது அவ்வளவுதான்'' எதிர்த்த வீட்டுக்காரர் தண்ணீர் வாளியோடு வந்தார்.

''இல்லையண்ணாச்சி, நான் அதெல்லாம் சரியாய்ப்போய்விடும்னுல்லா அன்றைக்கு நினைச்சேன். இப்போ பார்த்தா பரிதாபமால்லா இருக்கு''

''நீரும் லிஸ்ட்டிலே சேர்ந்துட்டேரா. இனிமே பூசிணிப் பூக்காரி பேச்சிதான் பாக்கி''. அவ ஒருத்திதான் நாள் தவறாமல் ''கண்ணுக்குட்டி நடக்கும், கண்ணுக்குட்டி நடக்கும்'ணு சொல்லிக்கிட்டு இருக்கா. அவளைக் கூட நேத்தைக்குக் கண்ணுலேயே காணும். பூவும் கொண்டாரலை. இன்றைக்கும் இது நேரம் வரை ஆளைக் காணும்''.

''அன்றைக்கெல்லாம் சரியாப் போயிரும்னுல்லா நினைச்சேன்.''

நான் மறுபடியும் சொன்னேன்.

ஆமாம். வாஸ்தவமாகவே அன்றைக்கு எனக்கு நம்பிக்கை இருந்தது. நாலாம் நாள் காலையில் இதேமாதிரித் தான் நான் எழுந்திருந்து வருகிறேன். நடுவாசலில் ஒரு உரலைப் புரட்டிப் போட்டு மாடைக்கட்டிப் போட்டிருக்கிறார்கள். சரசரவென்று முன்னால் கிடக்கிற கன்றுக்குட்டியை நக்கிக் கொண்டு, வயிற்றை எக்கி எக்கிச் சீறிக்கொண்டிருந்தது பசு.



''என்ன, கண்ணுக்குட்டி போட்டுட்டதா'' எதிர்த்த வீட்டுக்காரரிடம் கேட்கிறேன்.

''ஆமா சவம். இம்புட்டாவது போட்டுதே, போடா வழியாய்ப் போகாமல்''.

என்ன அப்படி சடைவாச் சொல்லுதய?''

''பின்னே என்னங்கேன். சட்டம் சுருங்கலை மடுக்கட்டு விடலை. ஈணுகிறதற்குப் பௌர்ணமி வரைக்கும் ஆகும்ணு சொல்லி, நேற்றுச் சாயுங் காலம் கிராமத்திலேயிருந்து கொண்டாந்து விட்டிருந்தான். அது என்னடாண்ணா ராத்திரியோட ராத்திரியா ஈணிவிட்டு நிக்கு. காலையில் முகங் கால் கழுவுறதுக்காக எழுந்திருச்சிப் போகிறவன் பார்த்தால், சாக்கடையோரமா இது மண்ணுளிப்பாம்பாச் சுருண்டு கிடக்கு...''

''அதுக்கென்ன? கண்ணுக்கு முன்னால் தான் ஈணனும்னு என்ன கணக்கா? காட்டில் மான்பெறுகிற மாதிரி கண்காணாமப் பெத்திருக்குண்ணு வைச்சுக்கிட வேண்டியது தானே!''

''மானுக்கும் இதுக்கும் எள்ளுத் தான் குறை. ஆக்கங்கெட்டது! இன்னும் எழுந்திருச்சுக்கூட நிற்க மாட்டேங்கு. நீங்க என்னடாண்ணா மானு மயிலுண்ணு சொல்ல வந்திட்டியோ''.

''பாலு கீலு கொடுத்தா அதெல்லாம் சரியாப் போயிடும்.''

''அதுதான் நானும் பார்க்கேன். பாலு பீச்சணும். பாங் கிணற்றில ஊத்தணும். கண்ணுக் குட்டியை குடிக்க விடணும். இன்னும் இளங் கொடி விழுந்த பாடில்லை. இவ்வளவும் இருக்கையில் இன்றையப் பார்க்க கோனாரையும் காணும். என்னமோ கொள்ளையெடுத்துட்டுது''—



மனித சமுதாயத்திற்கே நல்வழிகாட்டி, நன்னெறியூட்டி, நற்பண்புகளையும் ஒழுக்கங்களையும் கற்பிக்கும் வகையில் எழுதப் பட்ட நூல்தான் திருக்குறள். எனவே தான், எல்லா மக்களும் எல்லா மதத்தவரும் ''எங்கள் குறள்'' ''எங்கள் மதக் கருத்தை ஒப்புக்கொள்ளும் குறள்'' என்றெல்லாம் அதைப் போற்றி வருகிறார்கள்.

-தந்தை பெரியார்

சொல்லிக் கொண்டிருக்கையிலேயே கோனார் வந்தார். கன்றுக் குட்டியைப் பார்த்ததுமே உதட்டைப் பிதுக்கி விட்டார்.

''இது என்னத்தைப் பிழைச்சு, எனத்தை நடக்கப்போது? நான்தான் வாங்கும் போதே சொன்னேனே. ஆட்டு ஈத்துமாடு, ஆறாம் மாதம் காலைத் தூக்கீரும். வாங்க வேண்டாம்ச்சிண்ணு எவ்வளவோ சொன்னேன். கேளாமல் வாங்கினயோ''.

''வாங்கினயோ, கொடுத்தியோண்ணு எதுக்குவே போன வருஷத்துக் கதையெல்லாம். அதுக்கும் கண்ணுக்குட்டி இப்படி இருக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்? என்னத்தையாவது காலங் காத்தால உளறப்படாது'' எதிர்த்த வீட்டுக்காரருக்கு எரிச்சல்.

''முதலாளி, நாஞ் சொல்லுதணேண்ணு கோபப்படக் கூடாது. ஆறாம் மாதத்திலேயே மாடு கூப்பிட ஆரம்பிச்சிட்டது. முதலியார் வீட்டில் அடங்க விட்ர வேண்டியதுதான்னு நான் சொன்னபடி கேட்டிருந்தா இன்றையத் தேதிக்கு கண்ணுக்குட்டி இப்படியா சொங்கிப் பெத்தாரு மாதிரிக் கிடக்கும்? புறவாசலுக்கும் முன் வாசலுக்கும் தரையில் கால் பாவாமல் அப்படித் துள்ளிக் கிட்டுல்லா நிக்கும்'' ... கோனார் ரசமாய்க் கைகளால் துள்ளுவது போல் காட்டினார்.

எனக்கும் ஒரு காட்சி, ஒரு கண்ணுக்குட்டி பின்னங் கால்களை உதைத்துக்கொண்டு, தூக்கிய வாலோடு இங்குமங்கும் ஓடுவது போல. அந்தக் காட்சியை, 'இந்த கன்றுக் குட்டி நடக்குமா?' என்ற கறுப்பு நம்பிக்கையால் போர்த்தி மூடுகிறேன். எதிர்த்த வீட்டுக்காரர் உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தார்.

''துள்ளும்வே துள்ளும், ஏன் ஏன் துள்ளாது? அஞ்சும் மூணும் எட்டு ரூவா அடங்க விடுகிறதுக்குக் கொடுத்தா ஆண்டியாய்ப் போக வேண்டியது தான். முதலியாருக்கும் அஞ்சாம். இவாளுக்கு மூணாம்... ம்ஹீம் ஒவ்வொண்ணுக்கும் ரேட்டுல்ல வச்சிருக்கியோ ரேட்டு. பேசாமல் கிராமத்துக்குப் போனா மந்தையிலே அடங்கிட்டுப் போது''.

''மந்தையில் அடங்கின ஓவியம் தான் தெரியுதே. எழுந்திருச்சி நிற்கிறதுக்குக் கூடச் சீவனைக் காணோம்!'' கோனார் விடுவதாயில்லை.

''சரி. சரி. கண்ணுக் குட்டியைத் தூக்கி நிறுத்தி ஊட்டிவிடும். பாலைக் குடித்தாலாவது நிற்காண்ணு பார்ப் போம். ஈணுன கையோட யாராவது நல்ல விலைக்குக் கேட்டா கொடுத்துட்டு சனியனைக் கையைக் கழுவீரலாம்னு நினைச்சுக்கிட்டிணுருந்தேன். இதுக்கு என்னடாண்ணா பிறக்கும் போதே குணக்குது. செத்துக் கித்துத் தொலைச்சுதுண்ணா எவன் கட்டியழுகிறது இதை?''

தோல் கண்ணுக்குட்டி போடலாம்லா'' ... நான் இடையில் நுழைகிறேன்.

''தோல் கண்ணுக்குட்டியாவது மண்ணாங்கட்டியாவது? ஒழுங்காகக் குடுக்கிற நேரத்திலேயே ஆறு மாசம் தோல் கண்ணுக்குட்டி போட்டால் கேட்கவே வேண்டாம். ஆறே நாளோட சரி, ஆட்டம் க்ளோஸ்''.

''ஏன் முதலாளி கவலைப் படுதிய? ஆறு நாளோட சரீண்ணு தோணுனா அஞ்சாம் நாளே மாட்டைக் கையடித்துக் கொடுத்திருவோம். ஒண்ணரை விலைக்குத் தள்ளி விட்ரலாமா?'' கேட்டுக் கொண்டே கன்றுக் குட்டியை அணைத்து நிறுத்தி பெருவிரலைக் கடைவாயில் கொடுத்து ஒவ்வொரு காம்பாய் ஊட்டுகிறார். கோனாருக்குச் சிரிப்பு முகத்தில்.

''என் நீரு பேச மாட்டேரு? ஒண்ணு ஒண்ரைங்கிறதுக்கு இது என்ன சீனிக்குச்சி வியாபாரம்ணு நினைச்சேரா?'' பால் செம்பை நீட்டிக் கொண்டு சொல்கிறார்.

நான் செம்பில் பால் விழுகிற முதல் 'சுரிங்' குக்காகக் காத்திருக்கிறேன். ''மாமா, வந்து ஓட்டுமேல இருக்கிற பூவைப் பறிச்சுக் கொடுங்களேன்''. எதிர்த்த வீட்டுக்காரர் பையன் என்னை வந்து கூப்பிடுகிறான். கூப்பிட வந்தவன் இரண்டு கன்னத்திலும் கைகளை அழுத்திக் கொண்டு கன்றுக் குட்டியைப் பார்க்கிறான்.

'பால் குடிச்சா நடக்கும்லா மாமா'ன்னு என்னைக் கேட்கிறான், 'ஆமாம்' என்று சொல்லியபடி அவனுடன் நடக்கிறேன். அவனுடைய தங்கை பத்து பதினைந்து பீர்க்கம் பூவைத் தரையில் எண்ணியெண்ணி வட்டமாக வைத்துக் கொண்டிருந்தது. ஒரு பித்தளைத் தாம்பாளத்தை விளக்கி வெயிலில் காய வைத்தது போல் பளீரிடுகிறது மஞ்சள்.

''இன்றைக்கு நம் வீட்டில்தான் பூ ஜாஸ்தி'' தங்கை சொல்கிறது.

''இதையும் சேர்த்து எத்தனை யாச்சு?'' நான் குதிகாலில் உன்னி, ஓட்டுக்குமேல் இருக்கிற பூவைப் பறித்துப் போடுகிறேன்.

''பத்தொன்பது, இன்னம் ரெண்டு இருக்கு மாமா?''

''அது காய்ப் பூ' டீ''.

ரெண்டுமா?''

''ஆமா'' நான் இருந்த இடத்திலேயே காலை அகட்டாமல் அரை வட்டமாய்த் திரும்பிப் பந்தலைப் பார்க்கிறேன். ஒரு இடத்திற்கு வந்ததும், முருங்கை இலைகளுக்கு இடையே சடாரென்று சூரிய ஒளி கண்ணில் குதித்துப் பாய்கிறது. தகதகவெனச் சுற்றுகிறது சூரிய கோளம். கொஞ்ச நேரத்தில் கண்களில் நீர் கோர்க்கிறது. பார்வையை மாற்றினால் ஒரு வினாடி எல்லா இடத்திலும் பனி பெய்கிறது.

''ஆச்சி. பூ'' வாசலில் குரல் கேட்கிறது. பேச்சி வந்துவிட்டாள்.

''பூசணிப் பூக்காரி வந்தாச்சு'' என்று சொல்லிக் கொண்டே பெண் குழந்தை ஓடுகிறது. பையன் பந்தலிலிருந்து பொத்தென்று குதிக்கிறான். கைகளைத் தட்டி விடுகிறான். முகர்ந்து பார்த்துக் கொள்கிறான். பிறகு இரண்டு உள்ளங் கைகளையும் நீட்டிக் கொண்டு ''மாமா, பூவைக் கையிலே அடுக்கி வையுங்களேன்'' என்கிறான்.

மூன்று நான்கு பூக்கள் வைக்கக் கூட இடமில்லை.

''ரெட்டை ரெட்டையா அடுக்கட்டுமா?''

''ம்ம். அடுக்குங்க.''

நான் அடுக்குகிறேன். இரண்டு மிஞ்சுகிறது.

''நீங்க வச்சுக்கிடுங்க ஓங்க வீட்டுக்கு'' என்றபடியே பையன் இரண்டு கைகளையும் அலுங்காமல் தலைக்கு மேல் உயர்த்தி 'வடை, முறுக்கு, போளி' என்று சத்தம் போட்டுக் கொண்டு போகிறான். நான் இரண்டு பூக்களையும் உள்ளங்கையில் கார்த்திகைக்கு இருக்காஞ்சட்டி விளக்கை ஏந்திப் போகிற பாவனையில் பின்னால் போகிறேன். டான்ஸ் ஆட வேண்டும் போலிருக்கிறது அந்தக் கோலத்தில்.

வாசலில் நார்ப்பெட்டியிலிருந்து பேச்சி ஒவ்வொரு பூசணிப் பூவாக எடுத்துத் தரையில் குப்புறக் கவிழ்த்து வைக்கிறாள். புத்தம் புதிய அந்த நார்ப் பெட்டியின் பச்சை, கருஞ்சிவப்புக் கட்டங்களின் பின்னணியில், ஊசிக் கோபுரங்களைப் போன்று மூன்று காவி வண்ணப் பூசணிப் பூக்களை வைத்திருப்பது சிலிர்ப்பூட்டுகிற கம்பீரமாக இருந்தது. வீட்டுக்காரம்மாவிடம் பேச்சி கேட்டாள்.

''என்ன ஆச்சி. இன்னைக்குத்தான் ஈனுச்சா?''

''ஆமா மூதி. ஈனுனதும் தெரியாது, கொண்டாடினதும் தெரியாது. காலையில்தான் பார்த்தோம்''

''என்ன கன்னுக்குட்டி ஆச்சி. கிடாரியா, காளையங்கண்ணா ?''

''எந்த மண்ணா இருந்து என்னத்துக்கு, எழுந்திருச்சு நிற்கலையே முதற் காரியம்.''

''எழுந்திருச்சு நிற்கலையா?'' கேட்டுக்கொண்டே பேச்சி கன்றுக் குட்டியிடம் போனாள். முகத்தைத் தடவிக் கொடுத்தாள். உடம்பை இரண்டு பக்கமும் பூப்போலத் தேய்த்து நீவினாள். முதுகுச் சுழி சிலிர்த்து வெடவெடவென்று துடித்தது...முன்னங்கால்களை உருவி விட்டாள். ஒவ்வொரு காலாகக் கையில் தூக்கிச் செண்டுபோல் அசைத்தாள். இடது முன்னங்கால் குளம்புக்குப் பக்கத்தில் மாத்திரம் வீக்கம் கண்டு வளைந்திருந்தது.

மாடு 'பூஸ்' என்று கொம்பைச் சிலுப்பியது.

'அடியம்மா பிள்ளையைத் தொடு தம்ணு ஆங்காரத்தைப் பாருங்களேன். ராசாத்தி' என்று கன்றுக் குட்டியை மார்போடு சேர்த்துத் தூக்கினாள்.

''ராத்திரி முழுவதும், விழுந்த விழுக்காட்டிலேயே பனியிலியும் குளிரிலேயும் கிடந்திருக்கு. அம்மைக்காரி நக்கிக் குடுக்கவும் வகையில்லை. அதுதான் இப்படி'' என்றபடி கன்றுக் குட்டியை இறக்கி நிறுத்தினாள். ஆள் காட்டி விரலைச் சுவைக்கக் கொடுத்து விட்டு...

''வேணும்ணா பாருங்க, சங்கரன் கோயில் கோமதியம்மா ,சத்தியமா சொல்லுதேன். நிச்சயமா இந்தக் கண்ணுக்குட்டி நடக்கும். கொஞ்ச நாளில் இங்க அவிழ்த்து விட்டா ஒரு குதியில் அம்மா மடியை முட்டிகிட்டு நிக்கும் என்றாள் எதிர் வீட்டுக்கார அம்மாவைப் பார்த்து.

''ஆமா. இவ ஆயிரத்தையும் கண்டுட்டா'' என்பதுபோல் எதிர்த்த வீட்டுக்காரர் அலுப்பால் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

''ஒரு தடவைக்கு நாலு தடவை தூக்கி நிப்பாட்டணும். காலைத் தடவிக் குடுக்கணும். சன்னஞ்சன்னமா நடக்கும். நடக்காமல் எங்கே போயிரும்... கன்றின் நெற்றியில் வழுக்கின தடவலில், விரலைக் குவித்து ஒற்றின முத்தத்தில், கன்றின் கால்களுக்கு ஒத்தடமிட்ட கண்களின் பளபளப்பில் பேச்சியின் நம்பிக்கை துளித்துளியாய்ப் பூத்துக் கிடந்தது.

''நிச்சயமாக நடக்கும்'' என்னைப் பார்த்து பேச்சி சொன்னாள்.

''பேச்சி வரலையோ இன்னமும்? எதிர்த்த வீட்டுக்காரரிடம் கேட்டுக் கொண்டே எட்டி வாசலைப் பார்க்கிறேன். இரண்டு வீட்டு வாசலிலும் கோலம்போட்டுச் சுற்று இடங்களில் எல்லாம் பீர்க்கம் பூக்கள் குத்தப்பட்டிருந்தன. நடுமத்தியில் மாத்திரம் சாணி உருண்டை. நிறைந்த தர்பாரில் ராஜாவின் வருகைக்காகக் காத்துக் கிடக்கிற சிம்மாசனம்போல், வைக்கப் பட்டிருந்தது. அப்படியொரு தோரணையான வெற்றிடம். பேச்சி வந்தால் அது இருந்திருக்காது. இன்னும் வரவில்லைதான்.

''ப்ச்சு...'' என்னுடைய கேள்வியை ஆமோதித்துக் கொண்டே மாட்டுக்கு முன்னால் தண்ணீர் வாளியை வைத்துக் கையால் கிண்டுகிறார். எள்ளுப் புண்ணாக்கும், புளித்த கழுநீரும் கலவையாய் மணங்கிளப்பிப் பரவுகிறது. 'விற்கணும்னீங்களே. யாராவது வந்தாங்களா?''

''வந்தாங்க, வந்தாங்க, யாரோ ரெண்டுபேர் கோனார் தாக்கல் சொன்னதா வந்து கண்ணுக்குட்டியையும் மாட்டையும் பார்த்தாங்க. வாளியின் அடியில் மொழுக்கையான துண்டுகளாய்க் கிடந்த புண்ணாக்கை எடுத்துப் பக்கத்திலிருந்த சருவச் சட்டிக்குள் போட்டபடியே சொல்கிறார். முழங்கை வரை தவிடும் உளுத்தந்தோலும் நனைந்த கையில் ஒட்டியிருக்கிறது. ஒன்றிரண்டு கழுநீர்க் கொப்புளங்களும் பெரியதும் சிறியதுமாய்க் கீழ்க்கையில் அரும்பியிருக்கிறது.

''என்ன சொன்னாங்க பார்த்துட்டு?''

என்ன ''சொல்லுவாங்க தெரியாதா? கண்ணுக்குட்டி இப்படியிருக்கு. இதிலே சொள்ளை. அதில சொத்தை. அதனால் முக்கால் நோட்டுக்கு அமையும்னா பார்க்கலாம் கானுவ.

''வெறும் முக்காலா?''

''க்கும்.''



சீர்திருத்தங்கள் - மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமைய வேண்டும்.

—தந்தை பெரியார்




## அரசு விளம்பர அமைப்பு

தமிழ்நாடு அரசுத் துறைகள், வாரியங்கள், கழகங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள் அனைத்தும் இப்பொழுது, செய்தி-மக்கள் தொடர்புத் துறை மூலம் வெளியிடப்படுகின்றன. அவை அனைத்தும் அரசு அறிவித்துள்ள விளம்பர நிறுவனங்கள் மூலம் நாளிதழ்கள், ஏடுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

அறிக்கையை, அரசு விளம்பரங்களைவெளியிட 'அரசு விளம்பர அமைப்பு' (அரசு அட்வர்டைசிங் கார்ப்பரேசன்) என்ற நிறுவனத்தை அமைக்க, தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதனால் விளம்பரச் செலவு குறையும்; அரசுக்கு இலாபம் கிடைக்கும்; அரசு விளம்பர அமைப்பு, அரசின் ஏனையக் கழகங்கள்போல் பணியாற்றும்; ஆரம்பத்தில் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுவார். இந்த விளம்பர அமைப்பிற்குப் பின்வரும் அலுவலர்கள் (Board of Directors) இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்:

1. செயலர், செய்தி மற்றும் சுற்றலாத் துறை; 2. செயலர், நிதித் துறை; 3. செயலர்,வருவாய்த் துறை; 4. இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை; 5. தனி அலுவலர், கோ-ஆப்டெக்ஸ்; 6. மேலாண்மை இயக்குநர்,தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் மேம்பாட்டுக் கழகம்; 7. இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் துறை; 8. இயக்குநர், சிறுசேமிப்புத் துறை; 9. விளம்பர அமைப்பின் தலைமை நிர்வாகி மேலாண்மை இயக்குநர்.

அரசின் பல்வகை விளம்பரப் பணிகளையும், மக்கள் தொடர்பு அலுவலர் பயிற்சியினையும் இந்த விளம்பர அமைப்பு கவனிக்கும்.


''அதுவும்....... பார்க்கலாம் தானோமா?'' இதற்குப் பதில் வரவில்லை. அவர் வாளித் தண்ணீரைச் சுற்றி விட்டுக் கிண்டிக்கொண்டிருந்தார். மாடு வாளிக்குள்ளிருந்து தலையைத் தூக்கி புஸ்லென்று மூச்சு விட்டது. வாயிலிருந்து கம்பி கம்பியாய் தண்ணீர் ஒழுகியது. சரட் சரட்டென்று நாக்கை வீசி மூக்குக் கருப்பையும் நாசித் துவாரங்களையும் நக்கிச் சுத்தம் பண்ணியது. ஒரு முறை கழுத்தைத் திருப்பி பாதி வயிற்றில் உட்கார்ந்திருந்த ஈயை விரட்டியது. கழுத்து மணி சிணுங்கியது. மறுபடியும் வாளிக்குள் முகத்தைப் புதைத்தது.

இவ்வளவு மௌனத்திற்குப் பின்...

''எல்லாம் இந்தக் கன்னுக்குட்டியால் வந்த வினை. அன்னா பாருங்களேன். சவம் தவக்கா பாய்கிற மாதிரிக் கிடக்கிறதை'' என்று சொல்லி விட்டு வாளியைச் சாய்த்து மாட்டுக்குக் காட்டினார்.

எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

''ஆச்சி, பூ'' வாசலில் கேட்ட சத்தம் புதிதாயிருந்தது. நான் வந்தேன். வாசலில் ஏழெட்டு வயதிற்கு ஒரு பெண் புள்ளை இடுப்பில் ஒரு கைப் பிள்ளையும் தலையில் நார்ப்பெட்டியுமாய் நின்றது. எதிர் வீட்டம்மாவும் குழந்தைகளும் வந்தனர்.

''யாருட்டீ நீ, பேச்சி மகளா?''

''ஆமா''.

''உங்கம்மை ஏன் வரலை?''

''உடம்புக்குக் குணமில்லை. காய்ச்சல் ரெண்டுநாளா?''

''அதுயாரு இடுப்பிலே. தம்பியா தங்கச்சியா?''

''தங்கச்சி''.

''சரி கொடுத்துட்டுப்போ. தாவலையான்னு ஆச்சி கேட்டான்னு சொல்லு.''

''ஆட்டும். சொல்லுதேன்.''

கூட ஒரு பூக்கொடு. நேத்து வரலேல்லா'' இது அந்த வீட்டுப் பெண். இடுப்பில் குழந்தை வௌவாலாய்த் தொங்கத் தொங்கக் குனிந்தபடி, நார்ப் பெட்டியிலிருந்து ஒவ்வொரு பூவாய் எடுத்து வைக்கிறது.

''இன்னொண்ணு''

அதையும் வைக்கிறது. அப்புறம் என் வீட்டு வாசல் நடையில் தூணுக்குப் பக்கமாய்க் கொண்டு வந்து பூக்களை வைக்கிறது. கம்பிக் கோல இழைகளுக்குமேல் பூக்கள் கோடியாய் அணி வகுத்தன. நான் எதிர்த்த வீட்டுப் பையனும் பெண்ணும் பூக் குத்துவதைப் பார்க்கிறேன். குத்துக்காலிட்டு அந்தப் பையன் கையில் பூக்களோடு கோலத்திற்கு அருகில் உட்கார்ந்திருக்கிறான். அவன் தங்கை சாணியுருண்டையைக் கையில் உருட்டிக் கொண்டு...

ஒரு பூவைக்கிழி. பாவாடை போடணும்'' என்றது. ஒரு மகுடத்தைச் சூட்டுவது போல் சற்று நேரத்தில், காம்பைச் சற்றுக் கிள்ளி சாணியுருண்டையின் உச்சியில் பூவைச் சொருகினார்கள். இதுவரை காலியாகக் கிடந்த தர்பாருக்கு ராஜ களை வந்துவிட்டது. கோலம் முழுவதற்கும் உரிய அழகையெல்லாம் அம்பாரமாய்க் கூட்டி நடு மையத்தில் குவித்தது போல் பூசணிப் பூ சிரித்துக் கொண்டிருந்தது.

நான் என் வீட்டிற்குப் பார்வையை நகர்த்துகிறேன். அந்தப் பூக்காரச் சிறுமி இன்னும் நிற்கிறது. 'என்ன வேணும்' என்பதுபோல் புருவத்தைச் சுருக்குகிறேன். தயங்கினாற்போல என் பக்கம் வருகிறது.

''கன்னுக்குட்டி எங்கேயிருக்கு?'

''அங்?''....எனக்குக் கேள்வி புரியவில்லை.

கன்னுக்குட்டி எங்கேயிருக்கு? எங்கம்மா பார்த்துட்டு வரச் சொன்னா?''

## அரசு அலுவலகங்களில் சனிக்கிழமை வேலை நாள்

இதுவரை அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வாரம் ஐந்து நாட்கள் வேலை நாட்களாக இருந்தன. அதன்படி எல்லா அரசு அலுவலகங்களிலும் சனிக்கிழமைகளும், ஞாயிற்றுக் கிழமைகளும் விடுமுறை நாட்களாக இருந்தன.

ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையினை அரசு ஏற்று மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகள் தவிர, மற்ற எல்லா சனிக்கிழமைகளும் அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு வேலை நாட்களாக இருக்கும்என்று அரசு ஆணையிட்டுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள வேலை நேரத்தில் எவ்வித மாறுதலும் இல்லை.

இந்த மாற்றப்பட்ட பணிமுறை 1.7.1989 முதல் செயலுக்கு வந்துள்ளது

## தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்திற்கு ரூ.16 இலட்சம் அரசு அனுமதி.

தஞ்சாவூரிலுள்ள சரஸ்வதி மகால் நூலகத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காக இவ்வாண்டுக்கு ரூ.14 இலட்சம் மத்திய அரசு வழங்கியுள்ளதாகவும், நூலகப் பராமரிப்புச் செலவிற்கான முதல் தவணையாக ரூ.2 இலட்சத்தை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளதாகவும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., தெரிவித்தார்.

மேலும், சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர் வரலாற்று ஆவணச் செய்தி மடலை வெளியிட்டு வருவதாகவும், எனவே தஞ்சாவூர் வரலாறு தொடர்பான செய்திகள், ஆவணங்கள் வைத்துள்ளவர்கள் அவற்றைச் சரஸ்வதி மகாலுக்குத் தெரிவித்திடுமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

''உங்கம்மா பார்த்துட்டு வரச்: சொன்னாளா?''

''ப்ச்சு''

''நடக்குதாண்ணா?''

''க்கும்.''

''தொழுவுல இருக்கு. போய்ப் பாரு'' - நான் அந்தப் பிள்ளையின் இடுப்பிலிருந்த குழந்தையைப் பார்த்தபடியே சொல்கிறேன். குழந்தையின் மெலிந்த பாதங்கள் மாத்திரம் இதனுடைய வயிற்றில் இறங்கிக் கொடியாய்க் கிடந்தன. இடுப்பிலிருந்த குழந்தையை இறக்கி நார்ப் பெட்டியையும் பக்கத்தில் வைத்து விட்டுத் ''தொழுவுக்கு இப்படியா போகணும்?'' என்று கேட்டுக் கொண்டே போகிறது.

நான் பதில் சொல்லவுமில்லை. அது காத்திருக்கவுமில்லை.

மீண்டும் மீண்டும் அந்தக் குழந்தை தான். ஒரு உயிருள்ள சோகம் அது. வறுமையும் ஆரோக்கியக் குறைவும் கூட்டாகச் சேதப்படுத்தின உடம்பு அதற்கு. ஒரு லிவர்க்யூர் விளம்பரக் குழந்தையைப் போல வயிறு தள்ளிப்போய், காலில் மடங்கிய தொய்வுக்கு மத்தியில் கைககளை ஊன்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தது. கழுத்தில் வேர் கட்டியிருந்தார்கள். இடுப்பு அரைஞாணில் ஓலைமடக்கு நூலில் தொங்கியது சின்ன டப்பியைப் போல.

நான் சொடுக்கின விரலால் அதைக் கூப்பிட்டேன், ஏறிட்டுப் பார்த்தது. திடீரென உடனே அழ ஆரம்பித்தது. சைக்கிள் பெட்லை உதைக்கிறதுபோல் காலை ஆத்திரமாய் உதைத்து அழுது கொண்டு அது நகர ஆரம்பித்தது. 'நகர' என்பது சரியான வார்த்தை. கன்னிச்சாம்பல் பூத்த இடுப்பைத் தரையோடு தரையாய் இழுத்து நகர்ந்தது. கால்கள் துவளத் துவள, கைகளின் தாங்களில் உடம்பு பாய்ந்து பாய்ந்து இழுபட்டு முன்னேறியது.

'சொளக்கட்டி சொளக்' என்று ஒரு நடையை வர்ணிப்பதில் இருக்கிற கொடூரம் எனக்கு அப்போது புரிந்தது. ஆனால் அந்த வினாடியின் நிஜம், குழந்தையை அதே சொற்களுக்குள் சட்டமிட்டது. அந்த குழந்தையினுடைய பெயர்ச்சியின் தன்மை என்னைத் தாக்கியது. பாதித்தது. இரண்டு கலவையான உணர்ச்சிகளின் மாறுபாட்டினால் நான் சிக்கலாகிக் கொண்டிருந்தேன். குழந்தையை ஏதேனும் செய்து விடுவேனா, விடலாமா என்பது போன்ற சிக்கல்கள், எனது வலது கழுத்தின் நரம்பில் சிறுவலி கீறாகக் குதித்தது. குழந்தை சந்தனமாய்த் தன்னைத் தரையில் தேய்த்து மேலும் மேலும் செல்கையில், சடாரென்று அந்தக் குழந்தை எனக்கும் கன்னுக்குட்டியாயத் தெரிகிறது. ஒரு தவளையைப் போல, முனிவரின் புலித்தோலைப் போல, கால்களைப் பரப்பிக்கொண்டு எழுப்பப் பிரயத்தனப்படுகிற கன்றுக் குட்டியின் அவஸ்தையை மௌனமாகச் சீரணிக்க முயல்கிற பசுவின் கண்கள் நினைவுக்கு வந்தன. பேச்சியின் குரல் 'ம்மா' வென்று பசுவாய்க் கூப்பிட்டது. குழந்தையைத் தூக்கிப் பசுவின் மடியில் ஊட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

'கன்னுக்குட்டி நிச்சயமாய் நடக்கும்' - பேச்சி குழந்தையில் வேர் விட்டு கோடியாகப் படர்ந்து கன்றுக் குட்டியின் மேல் நம்பிக்கைகளைப் புஷ்பிக்கிறாள். பூக்களாய் என் பார்வை நிறைகிறது. நான் குழந்தையைப் பார்க்கிறேன். என்னைத் தொட்டு ''மாமா, உங்க வீட்டுக்கும் பூசணிப் பூக் குத்தி விடட்டுமா'' என்று எதிர்வீட்டுப் பெண் கேட்கிறது. தலையாட்டுகிறேன். தொழுவிலிருந்து பேச்சியின் பெண் வந்து கொண்டிருக்கிறது.

கோலம் நிரம்புகிறது. பூசணிப் பூ நடு நாயகமாக வானம் பார்த்துச் சிரிக்கிறது. எனக்குப் பூத் தெரியவில்லை. என் சிந்தனை இங்கில்லை.

நான் வேர்களைப் பற்றி நினைக்கிறேன்.

அவை எங்கோ தூரமாக ஓர் ஆழத்தில் இருக்கும்.



# புதிய சம்பள விகிதம் சில தகவல்கள்...

அரசு ஊழியர்களின் ஊதிய உயர்வு குறித்த சில விவரங்கள் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

## COMMON CATEGORIES

| Serial number and name of Post (1) | | Existing pay scale (2) Rs. | Revised pay scale (3) Rs. |
|---|---|---|---|
| 1 Superintendent | ... | 905-1545 | 1600-2660 |
| 2 Commercial Accountant/Commercial Accountant and Auditor | ... | 905-1545 | 1600-2660 |
| 3 Head Clerk | ... | 705-1230 | 1200-2040 |
| 4 Accountant/UD Accountant/Junior Accountant/ Commercial Accountant, Grade-II | ... | 705-1230 | 1200-2040 |
| 5 Assistant | ... | 705-1230 | 1200-2040 |
| 6 UD Steno-typist | ... | 705-1230 | 1200-2040 |
| 7 Steno-typist | ... | 610-1075 | 975-1660 |
| 8 Typist | ... | 610-1075 | 975-1660 |
| 9 Junior Assistant/Junior Assistant-cum-Typist... | | 610-1075 | 975-1660 |
| 10 Telephone Operator | ... | 610-1075 | 950-1500 |
| 11 Driver/Van Driver | ... | 610-1075 | 950-1500 |
| 12 Record Clerk | ... | 475-775 | 775-1025 |
| 13 Lift Operator | ... | 475-775 | 775-1025 |
| 14 Lift Attendant | ... | 450-720 | 750-940 |
| 15 Office Assistant/Duffadar | ... | 450-720 | 750-940 |
| 16 Chowkidar | ... | 450-720 | 750-940 |
| 17 Office Boy | ... | 450-720 | 750-940 |
| 18 Scavanger | ... | 450-720 | 750-940 |
| 19 Watchman/Watchman-*cum*-Sweeper | ... | 450-720 | 750-940 |
| 20 Waterman/Water Boy | ... | 450-720 | 750-940 |
| 21 Sweeper/Sweeper-*cum*-Sanitary Worker | ... | 450-720 | 750-940 |
| 22 Sanitary Worker | ... | 450-720 | 750-940 |
| 23 Masalchi/Masalchi-*cum*-Watchman | ... | 450-720 | 750-940 |
| 24 Mazdoor/Unskilled Mazdoor | ... | 450-720 | 750-940 |
| 25 Librarian Grade-I (Degree with B. Lib. Science) | ... | 1045-1775 | 1640-2900 |
| 26 Librarian, Grade-II (Degree with Diploma in Library Science) | ... | 905-1545 | 1400-2600 |
| 27 Librarian, Grade-III (Degree with Certificate in Library Science) | ... | 705-1230 | 1200-2040 |
| 28 Librarian, Grade-IV (S.S.L.C. and Trained) | ... | 610-1075 | 975-1660 |
| 29 Cine Operator | ... | 705-1230 | 1100-1660 |
| 30 Artist/Cameraman/Photographer | | | |
| Grade-I | ... | - | 1400-2600 |
| Grade-II | ... | - | 1200-2040 |
| Grade-III | ... | - | 950-1500 |

## APPENDIX-V

(See paragraph of the Order)

### THE METHOD OF ADJUSTMENT OF THE INTERIM RELIEF OF Rs.70 p.m. SANCTIONED WITH EFFECT FROM Ist JUNE 1988 AGAINST THE REVISED PAY

A Junior Assistant draws a pay of Rs.610 in the existing scale of pay of Rs.610—20—730—25—955—30—1,075 on the Ist June 1988. His revised scale of pay is Rs.975—25—1,150—30—1,660 The net arrears after adjusting the interim relief of Rs.70 p.m. is computed as follows:-

| | | June 1988 | From July 1988 to December 1988 | From January 1989 |
|---|---|---|---|---|
| | | (1) Rs. | (2) Rs. | (3) Rs. |
| **Before Revision:—** | | | | |
| Pay | ... | 610 | 610 | 610 |
| Dearness Allowance at 608 points | ... | 92 | 92 | 92 |
| Additional Dearness Allowance | ... | 126 | 161 | 161 |
| Total (A) | ... | 828 | 863 | 863 |
| **After Revision:—** | | | | |
| Pay fixed | ... | 975 | 975 | 975 |
| Dearness allowance in the revised pay | ... | 176 | 224 | 283 |
| Total (B) | ... | 1,151 | 1,199 | 1,258 |
| **Increase in Pay and D.A.—** | | | | |
| (B) - (A) | ... | 323 | 336 | 395 |
| Less Interim Relief | ... | 70 | 70 | 70 |
| Net increase in Pay + D.A. | ... | 253 | 266 | 325 |



## APPENDIX-IX

*Statement 1.*

**House Rent Allowance admissible in the revised pay range**

| *Serial number and Pay Range (Rupees per Mensum)* | | *Amount of House Rent Allowance (Rupees per mensum)* | | | |
|---|---|---|---|---|---|
| | | *Grade I(a) Madras City and places around the City at a distance not exceeding 32 kms. from the City limits* | *Grade I(b) Cities of Coimbatore and Madurai and places around them at a distance not exceeding 16 kms. from the city limits.* | *Places in Grade-II* | *Places in Grade-III* |
| | | Rs. | Rs. | Rs. | Rs. |
| 1. Upto 899 | ... | 65 | 50 | 40 | 25 |
| 2. 900-1,149 | ... | 95 | 70 | 55 | 35 |
| 3. 1,150-1,399 | ... | 125 | 90 | 70 | 45 |
| 4. 1,400-1,599 | ... | 155 | 110 | 85 | 55 |
| 5. 1,600-1,849 | ... | 185 | 130 | 100 | 65 |
| 6. 1,850-2,099 | ... | 215 | 150 | 115 | 75 |
| 7. 2,100-2,399 | ... | 245 | 170 | 130 | 85 |
| 8. 2,400-2,599 | ... | 275 | 190 | 145 | 95 |
| 9. 2,600-2,799 | ... | 305 | 210 | 160 | 105 |
| 10. 2,800-3,099 | ... | 335 | 230 | 175 | 115 |
| 11. 3,100-3,399 | ... | 365 | 250 | 190 | 125 |
| 12. 3,400-3,599 | ... | 395 | 270 | 205 | 125 |
| 13. 3,600-3,899 | ... | 425 | 290 | 220 | 125 |
| 14. 3,900-4,099 | ... | 455 | 300 | 225 | 125 |
| 15. 4,100-4,299 | ... | 485 | 300 | 225 | 125 |
| 16. 4,300 and above | ... | 515 | 300 | 225 | 125 |

## APPENDIX-X

### City Compensatory Allowance admissible in the revised pay range

| *Serial number and pay range (Rupees per mensum)* | | *Amount of City Compensatory Allowance (Rupees per mensum)* — *Madras City and areas around the City at a distance not exceeding 32 kms limits* | *Cities of Coimbatore, Madurai, Salem and Tiruchirappalli and areas around them at a distance not exceeding 16 kms. from the City limits.* |
|---|---|---|---|
| | | Rs. | Rs. |
| 1. Upto 899 | ... | 40 | 25 |
| 2. 900-1,149 | ... | 55 | 35 |
| 3. 1,150-1,399 | ... | 70 | 45 |
| 4. 1,400-1,599 | ... | 85 | 55 |
| 5. 1,600-1,849 | ... | 100 | 65 |
| 6. 1,850-2,099 | ... | 115 | 75 |
| 7. 2,100-2,399 | ... | 130 | 85 |
| 8. 2,400-2,599 | ... | 145 | 95 |
| 9. 2,600-2,799 | ... | 160 | 105 |
| 10. 2,800-3,099 | ... | 175 | 115 |
| 11. 3,100-3,399 | ... | 190 | 125 |
| 12. 3,400-3,599 | ... | 205 | 125 |
| 13. 3,600 and above | ... | 225 | 125 |



## APPENDIX III

### REVISED RATES OF DEARNESS ALLOWANCE ADMISSIBLE FROM 1ST JUNE 1988 ON REVISED PAY

| Pay range | With effect from 1st June 1988 | With effect from 1st July 1988 | With effect from 1st January 1989 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| Rs. | Rs. | Rs. | Rs. |
| 750 | 135 | 173 | 218 |
| 762 | 137 | 175 | 221 |
| 774 | 139 | 178 | 224 |
| 775 | 140 | 178 | 225 |
| 786 | 141 | 181 | 228 |
| 787 | 142 | 181 | 228 |
| 798 | 144 | 184 | 231 |
| 799 | 144 | 184 | 232 |
| 800 | 144 | 184 | 232 |
| 810 | 146 | 186 | 235 |
| 811 | 146 | 187 | 235 |
| 815 | 147 | 187 | 236 |
| 822 | 148 | 189 | 238 |
| 823 | 148 | 189 | 239 |
| 825 | 149 | 190 | 239 |
| 830 | 149 | 191 | 241 |
| 834 | 150 | 192 | 242 |
| 835 | 150 | 192 | 242 |
| 840 | 151 | 193 | 244 |
| 845 | 152 | 194 | 245 |
| 846 | 152 | 195 | 245 |
| 847 | 152 | 195 | 246 |
| 855 | 154 | 197 | 248 |
| 858 | 154 | 197 | 249 |
| 859 | 155 | 198 | 249 |
| 860 | 155 | 198 | 249 |
| 870 | 157 | 200 | 252 |
| 871 | 157 | 200 | 253 |
| 875 | 158 | 201 | 254 |
| 883 | 159 | 203 | 256 |
| 884 | 159 | 203 | 256 |
| 885 | 159 | 204 | 257 |
| 890 | 160 | 205 | 258 |
| 895 | 161 | 206 | 260 |
| 898 | 162 | 207 | 260 |
| 900 | 162 | 207 | 261 |
| 905 | 163 | 208 | 262 |
| 907 | 163 | 209 | 263 |
| 912 | 164 | 210 | 264 |
| 919 | 165 | 211 | 267 |
| 920 | 166 | 212 | 267 |
| 926 | 167 | 213 | 269 |
| 931 | 168 | 214 | 270 |
| 935 | 168 | 215 | 271 |
| 940 | 169 | 216 | 273 |
| 943 | 170 | 217 | 273 |
| 950 | 171 | 219 | 276 |
| 955 | 172 | 220 | 277 |
| 960 | 173 | 221 | 278 |
| 965 | 174 | 222 | 280 |
| 969 | 174 | 223 | 281 |
| 970 | 175 | 223 | 281 |
| 975 | 176 | 224 | 283 |
| 980 | 176 | 225 | 284 |
| 983 | 177 | 226 | 285 |
| 990 | 178 | 228 | 287 |
| 995 | 179 | 229 | 289 |
| 997 | 179 | 229 | 289 |
| 1,000 | 180 | 230 | 290 |
| 1,010 | 182 | 232 | 293 |
| 1,011 | 182 | 233 | 293 |
| 1,020 | 184 | 235 | 296 |
| 1,025 | 185 | 236 | 297 |
| 1,030 | 185 | 237 | 299 |
| 1,040 | 187 | 239 | 302 |
| 1,050 | 189 | 242 | 305 |
| 1,060 | 191 | 244 | 307 |
| 1,070 | 193 | 246 | 310 |
| 1,075 | 194 | 247 | 312 |
| 1,080 | 194 | 248 | 313 |
| 1,090 | 196 | 251 | 316 |
| 1,100 | 198 | 253 | 319 |

## APPENDIX III-cont

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| Rs. | Rs. | Rs. | Rs. |
| 1,110 | 200 | 255 | 322 |
| 1,120 | 202 | 258 | 325 |
| 1,125 | 203 | 259 | 326 |
| 1,130 | 203 | 260 | 328 |
| 1,140 | 205 | 262 | 331 |
| 1,150 | 207 | 265 | 334 |
| 1,160 | 209 | 267 | 336 |
| 1,170 | 211 | 269 | 339 |
| 1,175 | 212 | 270 | 341 |
| 1,180 | 212 | 271 | 342 |
| 1,190 | 214 | 274 | 345 |
| 1,200 | 216 | 276 | 348 |
| 1,210 | 218 | 278 | 351 |
| 1,225 | 221 | 282 | 355 |
| 1,230 | 221 | 283 | 357 |
| 1,240 | 223 | 285 | 360 |
| 1,250 | 225 | 288 | 363 |
| 1,260 | 227 | 290 | 365 |
| 1,270 | 229 | 292 | 368 |
| 1,275 | 230 | 293 | 370 |
| 1,290 | 232 | 297 | 374 |
| 1,300 | 234 | 299 | 377 |
| 1,320 | 238 | 304 | 383 |
| 1,325 | 239 | 305 | 384 |
| 1,330 | 239 | 306 | 386 |
| 1,350 | 243 | 311 | 392 |
| 1,360 | 245 | 313 | 394 |
| 1,375 | 248 | 316 | 399 |
| 1,380 | 248 | 317 | 400 |
| 1,390 | 250 | 320 | 403 |
| 1,400 | 252 | 322 | 406 |
| 1,410 | 254 | 324 | 409 |
| 1,420 | 256 | 327 | 412 |
| 1,425 | 257 | 328 | 413 |
| 1,440 | 259 | 331 | 418 |
| 1,450 | 261 | 334 | 421 |
| 1,470 | 265 | 338 | 426 |
| 1,475 | 266 | 339 | 428 |
| 1,480 | 266 | 340 | 429 |
| 1,500 | 270 | 345 | 435 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| Rs. | Rs. | Rs. | Rs. |
| 1,510 | 272 | 347 | 438 |
| 1,520 | 274 | 350 | 441 |
| 1,530 | 275 | 352 | 444 |
| 1,540 | 277 | 354 | 447 |
| 1,560 | 281 | 359 | 452 |
| 1,570 | 283 | 361 | 455 |
| 1,600 | 288 | 368 | 464 |
| 1,630 | 293 | 375 | 473 |
| 1,640 | 295 | 377 | 476 |
| 1,650 | 297 | 380 | 479 |
| 1,660 | 299 | 382 | 481 |
| 1,680 | 302 | 386 | 487 |
| 1,700 | 306 | 391 | 493 |
| 1,720 | 310 | 396 | 499 |
| 1,750 | 315 | 403 | 508 |
| 1,760 | 317 | 405 | 510 |
| 1,800 | 324 | 414 | 522 |
| 1,820 | 328 | 419 | 528 |
| 1,840 | 331 | 423 | 534 |
| 1,850 | 333 | 426 | 537 |
| 1,880 | 338 | 432 | 545 |
| 1,900 | 342 | 437 | 551 |
| 1,920 | 346 | 442 | 557 |
| 1,940 | 349 | 446 | 563 |
| 1,950 | 351 | 449 | 566 |
| 1,960 | 353 | 451 | 568 |
| 2,000 | 360 | 460 | 580 |
| 2,040 | 367 | 469 | 592 |
| 2,050 | 369 | 472 | 595 |
| 2,060 | 371 | 474 | 597 |
| 2,100 | 378 | 483 | 609 |
| 2,120 | 382 | 488 | 615 |
| 2,150 | 387 | 495 | 624 |
| 2,180 | 392 | 501 | 632 |
| 2,200 | 396 | 506 | 638 |
| 2,240 | 403 | 515 | 650 |
| 2,250 | 405 | 518 | 653 |
| 2,275 | 410 | 523 | 660 |
| 2,300 | 414 | 529 | 667 |
| 2,350 | 423 | 541 | 682 |





| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| Rs. | Rs. | Rs. | Rs. |
| 2,360 | 425 | 543 | 684 |
| 2,375 | 428 | 546 | 689 |
| 2,420 | 436 | 557 | 702 |
| 2,425 | 437 | 558 | 703 |
| 2,450 | 441 | 564 | 711 |
| 2,480 | 446 | 570 | 719 |
| 2,500 | 450 | 575 | 725 |
| 2,525 | 455 | 581 | 732 |
| 2,540 | 457 | 584 | 737 |
| 2,575 | 464 | 592 | 747 |
| 2,600 | 468 | 598 | 754 |
| 2,650 | 477 | 610 | 769 |
| 2,660 | 479 | 612 | 771 |
| 2,675 | 482 | 615 | 776 |
| 2,725 | 491 | 627 | 790 |
| 2,750 | 495 | 633 | 798 |
| 2,800 | 504 | 644 | 812 |
| 2,825 | 509 | 650 | 819 |
| 2,875 | 518 | 661 | 834 |
| 2,900 | 522 | 667 | 841 |
| 2,950 | 531 | 679 | 856 |
| 2,975 | 536 | 684 | 863 |
| 3,000 | 540 | 690 | 870 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| Rs. | Rs. | Rs. | Rs. |
| 3,025 | 545 | 696 | 877 |
| 3,050 | 549 | 702 | 885 |
| 3,100 | 558 | 713 | 899 |
| 3,125 | 563 | 719 | 906 |
| 3,200 | 576 | 736 | 928 |
| 3,300 | 594 | 759 | 957 |
| 3,400 | 612 | 782 | 986 |
| 3,500 To 4,600 | 630 | 805 | 1,015 |
| 4,650 | 630 | 805 | 1,023 |
| 4,700 | 630 | 805 | 1,034 |
| 4,725 | 630 | 805 | 1,040 |
| 4,800 | 630 | 816 | 1,056 |
| 4,850 | 631 | 825 | 1,067 |
| 4,950 | 644 | 842 | 1,089 |
| 5,000 | 650 | 850 | 1,100 |
| 5,100 | 663 | 867 | 1,122 |
| 5,150 | 670 | 876 | 1,133 |
| 5,250 | 683 | 893 | 1,155 |
| 5,300 | 689 | 901 | 1,166 |
| 5,400 | 702 | 918 | 1,188 |
| 5,550 | 722 | 944 | 1,221 |
| 5,700 | 741 | 969 | 1,254 |

# REVISED SCALES OF PAY

### TABLE-1

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 350-10-550 | Rs. 750-12-870-14-940 |

### TABLE-2

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 450-10-570-15-720 | Rs. 750-12-870-14-940 |

### TABLE-3

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 475-10-555-15-615-20-775 | Rs. 775-12-955-14-1025 |

### TABLE-4

EXISTING SCALE:
Rs. 505-10-555-15-615-20-795-25-845

REVISED SCALE:
Rs. 800-15-1,010-20-1,150

### TABLE-5

EXISTING SCALE:
Rs. 505-10-555-15-615-20-795-25-845

REVISED SCALE:
Rs. 825-15-900-20-1200

### TABLE-6

EXISTING SCALE:
Rs. 505-10-555-15-615-20-795-25-845

REVISED SCALE:
Rs. 950-20-1,150-25-1,500

### TABLE-7

EXISTING SCALE:
Rs. 555-15-615-20-795-25-970

REVISED SCALE:
Rs. 825-15-900-20-1,200

### TABLE-8

EXISTING SCALE:
Rs. 555-15-615-20-795-25-970

REVISED SCALE:
Rs. 950-20-1,150-25-1,500

### TABLE-9

EXISTING SCALE:
Rs. 555-15-615-20-795-25-970

REVISED SCALE:
Rs. 975-25-1,150-30-1,660

### TABLE-10

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

REVISED SCALE:
Rs. 950-20-1,150-25-1,500

### TABLE-11

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

REVISED SCALE:
Rs. 975-25-1,150-30-1,660

### TABLE-12

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

REVISED SCALE:
Rs. 1,100-25-1,150-30-1,660



### TABLE-13

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1075.

REVISED SCALE:
Rs. 1,200-30-1,560-40-2,040

### TABLE-14

EXISTING SCALE:
Rs. 705-20-745-25-845-35-1,230

REVISED SCALE:
Rs. 950-20-1,150-25-1,500

### TABLE-15

EXISTING SCALE:
Rs. 705-20-745-25-845-35-1,230

REVISED SCALE:
Rs. 975-25-1,150-30-1,660

### TABLE-16

EXISTING SCALE:
Rs. 705-20-745-25-845-35-1,230

REVISED SCALE:
Rs. 1,100-25-1150-30-1,660

### TABLE-17

EXISTING SCALE:
Rs. 705-20-745-25-845-35-1,230

REVISED SCALE:
Rs. 1,200-30-1,560-40-2,040

### TABLE-18

EXISTING SCALE:
Rs. 705-20-745-25-845-35-1,230

REVISED SCALE:
Rs. 1,320-30-1,560-40-2,040

### TABLE-19

EXISTING SCALE:
Rs. 705-20-745-25-845-35-1,230

REVISED SCALE:
Rs. 1,350-30-1,440-40-1,800-50-2,200

### TABLE-20

EXISTING SCALE:
Rs. 780-35-1,025-40-1,385

REVISED SCALE:
Rs. 975-25-1,150-30-1,660

### TABLE-21

EXISTING SCALE:
Rs. 780-35-1,025-40-1,385

REVISED SCALE:
Rs. 1,100-25-1,150-30-1,660

## TABLE-22

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,200-30-1,560-40-2,040 |

## TABLE-23

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,320-30-1,560-40-2,040 |

## TABLE-24

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,350-30-1,440-40-1,800-50-2,200 |

## TABLE-25

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-26

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,600-50-2,300-60-2,660 |

## TABLE-27

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 905-45-1,445-50-1,545 | Rs. 1,200-30-1,560-40-2,040 |

## TABLE-28

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 905-45-1,445-50-1,545 | Rs. 1,320-30-1,560-40-2,040 |

## TABLE-29

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 905-45-1,445-50-1,545 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-30

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 905-45-1,445-50-1,545 | Rs. 1,600-50-2,300-60-2,660 |



## TABLE-31

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 905-45-1,445-50-1,545 | Rs. 1,640-60-2,600-75-2,900 |

## TABLE-32

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 1,045-45-1,450-65-1,775 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-33

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 1,045-45-1,450-65-1,775 | Rs. 1,600-50-2,300-60-2,660 |

## TABLE-34

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 1,045-45-1,450-65-1,775 | Rs. 1,640-60-2,600-75-2,900 |

## TABLE-35

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 1,160-50-1,460-70-1,950 | Rs. 1,640-60-2,600-75-2,900 |

## TABLE-36

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 1,160-50-1,460-70-1,950 | Rs. 2,000-60-2,300-75-3,200 |

## TABLE-37

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 1,160-50-1,460-70-1,950 | Rs. 2,000-60-2,300-75-3,200-100-3,500 |

## TABLE-38

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 1,160-50-1,460-70-1,950 | Rs. 2,200-75-2,800-100-4,000 |

## TABLE-39

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 1,340-75-1,715-90-2,435 | Rs. 2,200-75-2,800-100-4,000 |

## TABLE-40

EXISTING SCALE:
Rs. 1,575-90-1,845-100-2,245-110-2,685

**REVISED SCALE:**
**Rs. 2,200-75-2,800-100-4,000**

## TABLE-41

EXISTING SCALE:
Rs. 1,575-90-1,845-100-2,245-110-2,685

**REVISED SCALE:**
**Rs. 2,500-75-3,100-100-4,200**

## TABLE-42

EXISTING SCALE:
Rs. 1,800-110-2,900

**REVISED SCALE:**
**Rs. 3,000-100-3,500-125-4,500**

## TABLE-43

EXISTING SCALE:
Rs. 2,150-110-2,590-125-3,090

**REVISED SCALE:**
**Rs. 3,700-125-4,700-150-5,000**

## TABLE-44

EXISTING SCALE:
Rs. 2,500-125-3,375

**REVISED SCALE:**
**Rs. 4,100-125-4,850-150-5,300**

## TABLE-45

EXISTING SCALE:
Rs. 2,750-150-3,650

**REVISED SCALE:**
**Rs. 4,500-150-5,700**

## TABLE-46

EXISTING SCALE:
Rs. 3,100-150-3,700-175-4, 050

**REVISED SCALE:**
**Rs. 5,100-150-5,700**

## TABLE-47

**(Typist drawing a special pay of Rs.30)**

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

**REVISED SCALE:**
**Rs. 975-25-1,150-30-1,660**

## TABLE-48

**(Typist drawing a special pay of Rs.40)**

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

**REVISED SCALE:**
**Rs. 975-25-1,150-30-1,660**



## TABLE-49

**(Steno-Typist drawing a special pay of Rs.50)**

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

**REVISED SCALE:**
**Rs. 975-25-1,150-30-1,660**

## TABLE-50

**(Steno-Typist drawing a special pay of Rs.60)**

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

**REVISED SCALE:**
**Rs. 975-25-1,150-30-1,660**

## TABLE-51

**(Steno-Typist drawing a special pay of Rs.70)**

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

**REVISED SCALE:**
**Rs. 975-25-1,150-30-1,660**

## TABLE-52

**(Steno-Typist drawing a special pay of Rs.80)**

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

**REVISED SCALE:**
**Rs. 975-25-1,150-30-1,660**

## TABLE-53

**(Steno-Typist drawing a special pay of Rs.90)**

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

**REVISED SCALE:**
**Rs. 975-25-1,150-30-1,660**

## TABLE-54

**(Typist drawing a special pay of Rs.100)**

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

**REVISED SCALE:**
**Rs. 975-25-1,150-30-1,660**

## TABLE-55

**(Steno-Typist drawing a special pay of Rs.120)**

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

**REVISED SCALE:**
**Rs. 975-25-1,150-30-1,660**

## TABLE-56

**(Steno-Typist drawing a special pay of Rs.140)**

EXISTING SCALE:
Rs. 610-20-730-25-955-30-1,075

**REVISED SCALE:**
**Rs. 975-25-1,150-30-1,660**

## TABLE-57
(Upper Division Steno-Typist drawing a special pay of Rs.50)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 705-20-745-25-845-35-1,230 | Rs. 1,200-30-1,560-40-2,040. |

## TABLE-58
(Upper Division Steno-Typist drawing a special pay of Rs.60)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 705-20-745-25-845-35-1,230 | Rs. 1,200-30-1,560-40-2,040 |

## TABLE-59
(Upper Division Steno-Typist drawing a special pay of Rs.70)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 705-20-745-25-845-30-1,385 | Rs. 1,200-30-1,560-40-2,040 |

## TABLE-60
(Upper Division Steno-Typist drawing a special pay of Rs.80)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 705-20-745-25-845-30-1,385 | Rs. 1,200-30-1,560-40-2,040 |

## TABLE-61
(Upper Division Steno-Typist drawing a special pay of Rs.90)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 705-20-745-25-845-35-1,230 | Rs. 1,200-30-1,560-40-2,040 |

## TABLE-62
(Upper Division Steno-Typist drawing a special pay of Rs.100)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 705-20-745-25-845-35-1,230 | Rs. 1,200-30-1,560-40-2,040 |

## TABLE-63
(Upper Division Steno-Typist drawing a special pay of Rs.120)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 705-20-745-25-845-35-1,230 | Rs. 1,200-30-1,560-40-2,040 |

## TABLE-64
(Upper Division Steno-Typist drawing a special pay of Rs.140)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 705-20-745-25-845-30-1,230 | Rs. 1,200-30-1,560-40-2,040 |



## TABLE-65
(Personal Assistant drawing a special pay of Rs.50)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-66
(Personal Assistant drawing a special pay of Rs.60/Rs.50 + 10)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-67
(Personal Assistant drawing a special pay of Rs.70/Rs.60 + 10)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-68
(Personal Assistant drawing a special pay of Rs.80/Rs.70 + 10)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-69
(Personal Assistant drawing a special pay of Rs.90/Rs.80 + 10)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-70
(Personal Assistant drawing a special pay of Rs.100/Rs.90 + 10)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-71
(Personal Assistant drawing a special pay of Rs.110/Rs.100 + 10)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-72
(Personal Assistant drawing a special pay of Rs.120)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-73

(Personal Assistant drawing a special pay of Rs.130/Rs.120 + 10)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-74

(Personal Assistant drawing a special pay of Rs.140)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

## TABLE-75

(Personal Assistant drawing a special pay of Rs.150/Rs.140 + 10)

| EXISTING SCALE: | REVISED SCALE: |
|---|---|
| Rs. 780-35-1,025-40-1,385 | Rs. 1,400-40-1,600-50-2,300-60-2,600 |

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் ஊதிய உயர்வுக் கோரிக்கை தொடர்பாக 5வது ஊதியக் குழுவைத் தமிழ்நாடு அரசு சென்ற ஆண்டு நியமித்தது. முன்னாள் நீதிபதி திரு. ஜி. இராமனுஜம் அவர்கள் குழுவின் தலைவராக நியமிக்கப் பெற்றார்.

ஊதியக்குழு எல்லாத் துறையினரின் முறையீடுகளையும் பரிசீலித்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் 16.5.1989 அன்று, தனது அறிக்கையை வழங்கியது.

அந்த அறிக்கையைக் குறித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அமைச்சரவையினருடன் பரிசீலித்து, ஊதியக்குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள முடிவு குறித்து ஓர் அறிக்கையை 8.6.1989 அன்று வெளியிட்டார். அந்த அறிக்கை 16.6.89 தமிழரசு இதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



# புதிய சம்பள விகிதத்தினால் கிடைக்கும் ஊதியப் பலன்கள் நிலை

மத்திய அரசு ஊதிய விகிதமும், மத்திய அரசின் முறையிலேயே திருத்தப்பட்ட அகவிலைப்படியும், தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. புதிய சம்பள விகிதம், மாற்றப்பட்ட அகவிலைப்படி மற்றும் இதர படிகள் ஆகியவற்றைக் கொண்டு ஊதிய நிர்ணயம் செய்யும்முறை குறித்து அரசு ஆணையும் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. புதிய ஊதிய விகிதம் மற்றும் அதனால் பெறும் பயன்கள் குறித்து அரசு ஊழியர்களின் சில தரப்பினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதுகுறித்த நிலை கீழே விளக்கப்பட்டுள்ளது. புதிய சம்பள விகிதப்படி நிர்ணயம் செய்யும்போது ஏற்கெனவேயுள்ள சம்பளத்தின் வெவ்வேறு நிலைகளில் தனிப்பட்ட ஒவ்வொரு ஊழியருக்கும் கிடைக்கும் ஊதியப் பயன்கள் வேறுபடும். பொதுவாக, ஊதிய நிர்ணய முறையில் (Fitment Procedure) தற்போது குறைந்தபட்ச ஊதியம் பெறுபவர் சற்றே அதிக அளவில் பயன்பெறுகிறார். இது எல்லா ஊதிய நிர்ணய முறைகளிலும் பொதுவானதாகும்.

தற்போது குறைந்த அளவில் ஊதியம் பெறுபவர்களுக்கு, குறைந்தபட்சப் பயன் ரூ.100/- என்பது போதுமான நலன் பயக்கும். எடுத்துக்காட்டாக, ரூ.450/- ஊதியம்பெறும் அலுவலக உதவியாளர் தற்போது ஊதிய நிர்ணயத்தினால் 22 சதவீதம் பயன் பெறுகிறார். ரூ.610/- குறைந்தபட்ச ஊதியம்பெறும் இளநிலை உதவியாளர் 16.4 சதவீதம் பயன்பெறுகிறார். ரூ.100/- குறைந்தபட்சம் என்பது இந்த ஊதிய நிர்ணய முறை 22% லிருந்து 10% வரை பரவலாக உள்ளது என்பதை உறுதி செய்கிறது.

தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ள ஊதிய விகிதங்களில் 608 புள்ளிகள் வரையான அகவிலைப்படி இணைக்கப்பட்டுள்ளதால், உண்மையில் தற்போது கிடைக்கும் ஊதியப் பயன் எவ்வளவு என்பதை ஊதியம் மற்றும் அகவிலைப்படி இரண்டையும் ஒன்று சேர்த்து அதன் அடிப்படையில்தான் கணக்கிட வேண்டும். ஒருசில பிரிவினருக்கு உண்மையில் கிடைக்கும் ஊதியப் பயன் கணக்கிடப்பட்டுப் பின் வரும் அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன.

ஊதிய உயர்வு நிலைகளைப் (Increment Rates) பொறுத்தமட்டில், மத்திய அரசு விகிதங்கள் முழுதுமாகப் பின்பற்றப்பட்டுள்ளன. எனவே, மத்திய அரசு ஊதிய விகிதங்களிலும் ஊதிய உயர்வு நிலைகளே பின்பற்றப்பட்டுள்ளன. பெரும்பான்மையான திருத்தியமைக்கப்பட்டுள்ள ஊதிய விகிதங்களில் ஊதிய உயர்வு நிலைகள் ஏற்கனவேயுள்ள நிலைகளை விட அதிகம். மத்திய அரசு ஊதிய விகிதங்களைப் பின்பற்றும்போது, அதிலுள்ள ஊதிய உயர்வு நிலைகளைத் தான் பின்பற்ற இயலும். ஒருசில எடுத்துக்காட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| பணி | தற்போது ஊதிய விகிதம் | திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதம் |
|---|---|---|
| இளநிலை உதவியாளர் | 610-20-730-25-955-30-1075 | 975-25-1150-30-1660 |
| அலுவலக உதவியாளர் | 450-10-570-15-720 | 750-12-870-14-940 |
| இடைநிலை ஆசிரியர் | 610-20-730-25-955-30-1075 | 1200-30-1560-40-2040 |

சிறப்பு ஊதியத்தைப் பொறுத்தவரை, ஊதியக் குழுவின் பரிந்துரைகள் முழுதுமாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன. எந்தவொரு ஊழியருக்கும் சிரமங்கள் ஏதும் ஏற்படாவண்ணம், 1.6.1990 முதல் மட்டுமே அமுலாகும்வகையில், சில பிரிவு ஊழியர்களுக்குச் சிறப்பூதியம் வழங்குவது நிறுத்தப்படுகிறது.

பெருமளவில் ஊதிய விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்டதைக் கருத்தில்கொண்டும், மாற்றப்படும் புதிய ஊதிய விகிதங்களில் நிர்ணயம் செய்ய உச்சவரம்பு நிர்ணயிப்பது இயலாது என்பதாலும், அதிகபட்ச ஊதியப் பயன் நிர்ணயம் செய்யப்படவில்லை.

இருப்பினும், தற்போதுள்ள அதிகபட்ச ஊதியத்திற்கும், குறைந்தபட்ச ஊதியத்திற்கும் உள்ள விகிதாச்சாரம், திருத்தியமைக்கப்பட்டதில் முன்பைவிடக் குறைந்திருக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டது. தற்போது இந்த விகிதாச்சாரம் 9:1 என்றுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட புதிய விகிதங்களில் இது 8:1 என்று குறைந்துள்ளது.

ஊதியக்குழு குறிப்பிட்டிருந்தவாறு இடைக்கால நிவாரணம், ஓய்வூதியப்பயன் போன்றவையும் சேர்ந்து அரசுக்கு ஆகும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.262 கோடி. தற்போது அரசு அறிவித்துள்ள ஊதியப் பயன்மூலம் ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு இனம்வாரியாகக் கீழே பிரித்துத் தரப்பட்டுள்ளது:

(ரூ. கோடியில்)

| | | |
|---|---|---|
| இடைக்கால நிவாரணம் உள்ளடங்கிய திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதங்களினால் | - | 195 |
| 608 புள்ளிகளில் மத்திய அரசு அகவிலைப்படி விகிதத்துடன் இணைத்ததால் அதிகப்படியான அகவிலைப்படி பயன் | - | 50 |
| ஓய்வூதியப் பயன்கள் | - | 40 |
| ''ஒட்டுமொத்த ஊதியத்தின்'' உயர்வு, பயணப்படி போன்றவை | - | 27 |
| திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதங்களில் 1.1.89 முதல் செயலுக்குவரும் அகவிலைப்படி | - | 88 |
| | | 400 |



## ANNEXURE

### SECONDARY GRADE TEACHER

Present scale of pay: 610-20-730-25-955-35-1075
**Revised scale of pay: 1200-30-1560-40-2040**

| | Pay + DA as per present scales of pay | | | Latest Pay + DA as per revised scales of pay | | |
|---|---|---|---|---|---|---|
| | At the minimum | At the middle | At the top | At the minimum | At the middle | At the top |
| Pay | 610 | 830 | 1075 | 1200 | 1260 | 1350 |
| DA at 608 points | 92 | 125 | 161 | — | — | — |
| Addl. DA | 161 | 200 | 284 | 348 | 365 | 392 |
| | 863 | 1175 | 1520 | 1548 | 1625 | 1742 |
| Increase in Pay + DA inclusive of interim relief | | | | 685 | 450 | 222 |



சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன், காமராசர் மாவட்டங்களைச் சேர்ந்த

# காட்டு நாயக்கள்

டாக்டர் நே. தேவசகாயம்
காப்பாட்சியர், சென்னை அரசு அருங்காட்சியகம்

*○○ சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன், காமராஜர் மாவட்டங்களில் வாழும் 'காட்டு நாயக்கன்' என்னும் பழங்குடிகளைப் பற்றி ஆராய்கிறது இக்கட்டுரை. இந்தப் பழங்குடி மக்களின் பூர்வீகம், பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலான சிறப்பு அம்சங்களை நேரில் கண்டறிந்து சுவையாக வழங்குகிறார் கட்டுரையாசிரியர்.*

சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன், காமராசர் ஆகிய இம்மூன்று மாவட்டங்களிலும் பரவலாக நகர்ப்புற ஓரங்களில் வாழும் காட்டுநாயக்கன்களைப் பற்றி ஆய்வு செய்து, அரும் பொருள் சேகரிப்புப் பணிகளில் அருங்காட்சியகத் துறை இறங்கியது.

இப்பழங்குடிகளின் பூர்வீகம் யாது? இவர்களின் முன்னோர் ஆந்திர பெல்லாரி மாவட்டத்திலுள்ள துங்கபத்திரா நதிக் கரையிலுள்ள கம்பலி என்ற ஊரிலிருந்து 14-ஆம் நூற்றாண்டில் வெளியேறி, கம்பிளியர்கள் என்ற பெயருடன் தமிழ்நாட்டில் குடியேறினர். இப்பெயர் நாளடைவில் மருவி, கம்பளத்தார் அல்லது கம்பள நாயக்கன் என்று அழைக்கப்பட்டது. தமிழ் நாட்டில் குடியேறிய இவர்களில் ஒரு வகையினரான கொல்லாவார் எனப்படுவோர் பொருளாதார நிலையில் சற்று உயர்ந்தவராவர்.

எர்ர கொல்லாவார் என்ற மற்ற பிரிவினர் சற்று தாழ்ந்த நிலையில் உள்ளவராவர். இந்த எர்ர கொல்லவார் பிரிவினரே, பிற்காலத்தில், தமிழ்நாட்டு மக்களால், தமிழில் 'காட்டு நாயக்கன்' என்றும், 'கம்பள நாயக்கன்' என்றும் 'காட்டுத் தொட்டியன்' என்றும் அழைக்கப்பட்டு வந்தனர்.

இவர்கள், மேற்கு, கிழக்குத் தொடர்ச்சி மலைச் சாரல்களிலும், அதன் அருகிலுள்ள காடுகளிலும் குடியேறி, மூங்கில் வில்கள், வேட்டை நாய் ஆகியவைகளால், காட்டுப் பன்றி, காட்டுப்பூனை, நரிகள், மலை அணில் மற்றும் காட்டுப் பறவைகளை வேட்டையாடியும், காட்டில் கிடக்கும் காட்டுப் பொருள்களைச் சேகரித்தும், அவற்றை அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று விற்றும் வந்தனர். இவர்கள் சுரைக்காய்க் குடுவைகளில் அன்னம் எடுத்தனர். ஈச்சம் இலையால் பாய்பின்னி அவைகளைக் கிராமங்களில் விற்று வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் குடிப்பதிலும் பழக்கப்பட்டிருந்தனர். ஒத்து மொத்தமாக இவர்களின் ஆடை, அணிகலன்கள், பழக்கங்கள் யாவும் சற்றுக் கரடுமுரடாகவே அமைந்திருந்தன. அறியாமையால் சூழப்பட்ட வாழ்க்கையைக் கொண்ட இம்மக்கள், நான்கைந்து தலைமுறைகளாக, மலைக்காடுகளில் நிலையாக நிலைத்து வாழ்க்கையை நடத்தாமல் நாடோடி வாழ்க்கையாக மலைகளையும், மலைச் சாரல்களையும் சுற்றி வந்தே வாழ்ந்து வந்தனர். இவ்விதமாக வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, நீலகிரி, சேலம், கோவை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதிகளின் காட்டுப் பகுதிகளில் வாழ்ந்த காட்டுநாயக்கன் பழங்குடியினரில் ஒரு பகுதியினர் நகர்ப்புறங்களுக்கு நாளடைவில் வரத்தொடங்கினர். மேலும் அவர்கள் ஊராட்சி, நகராட்சிப் பகுதிகளில் நகரத்தையும், ஊரையும் தூய்மை செய்யும் பணியில் இருபாலரும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். அப்பணி தொடர்பாக, அந்த அந்த ஊருக்கு நகருக்கு அருகாமையிலுள்ள ஒதுக்குப்புறப் பகுதிகளான மலை அடிவாரங்களில் கூட்டமாகக் குடிசைகளை அமைத்து வாழத் தொடங்கினர்.

ஊரைத் தூய்மைச் செய்யும் பணிமட்டும் அல்லாமல், பன்றியின் சாணம் எடுத்தல்,

இராசபாளையம் பகுதி காட்டு நாயக்கன்





ஆமையைக் கண்டுபிடிக்க உதவும் குத்தூசி

அன்னம் வாங்குதல், எச்சில் சாதம் எடுத்தல் போன்ற இதரப் பணிகளிலும் இவர்கள் ஈடுபட்டனர். இவ்வித எளிய சமூக நிலை மாற்றமுள்ள இப்பணிகளைச் செய்ததால் இவர்களைத் தோட்டி, தொம்பன், குழுவன், கூத்தாடியன், ஜோகி, பண்ணியாண்டி என்ற பெயர்களாலும் மற்றவர்கள் இவர்களை அழைத்தனர்.

தங்கள் இருப்பிடங்களில் இவர்கள் பன்றியை வளர்க்க ஆரம்பித்தனர். இவர்கள் பேசும் மொழி, தங்களுக்கென்று உரித்தான தெலுங்கு எனப்படும், தெலுங்கு இனத்தவருக்கே புரியாத வண்ணம் காணப்படுகிறது. அதாவது இவர்கள் காடு மலையிலிருந்து வந்ததால் இம்மொழி கொச்சதெலுங்கிற்குச் சமானமாகக் கருதுகின்றனர். காடுகளில் கிடைக்கும் பாசி, பவளம், ஆகியவைகளைப் பெண்கள் அணிகின்றனர்.

மேலும் மூக்குத்தி, ஒன்னப்புதட்டு, கருகு மணி ஆகிய அணிகலன்களையும் இவர்கள் அணிகின்றனர். ஆகவே காடுகளின் நாயக்கன் என்ற பெயரைக் கொண்ட, காட்டை ஆண்ட, காட்டில் முன்பு வசித்த இந்தப் பழங்குடியினர் தற்சமயம், நகர்ப்புறம், மற்றும் ஊர்ப்புறப் பகுதிகளில் வாழ்க்கை நடத்திவந்தாலும், இன்றும் மேற்குறிப்பிட்ட பூர்வீகச் சடங்குகள், பழக்க வழக்கங்கள் ஆகியவைகளை நேரில் இவர்களைச் சந்தித்த போது பார்க்க நேர்ந்தது. முக்கியமாக, நாய்கள் வளர்த்தல், பன்றி வளர்த்தல், அன்னம் எடுத்தல் ஆகியவை ஒருசில!

செண்பகவல்லி அம்மன்கோவிலும், பூவனநாதசாமி கோவிலும், கோவில்பட்டியில் (சிதம்பரனார் மாவட்டம்) நம்மை வரவேற்கும் சிறப்புமிகு ஆலயங்களாகும். கோவில்பட்டி நகருக்குச் சற்று அருகிலுள்ள கதிரேசன் மலைப் பக்கத்தில் காட்டுநாய்க்கன் பகுதியில், பட்டா நிலத்தில் புதியதாகக் கல், மண் சுவர், ஓடு, தகரம் ஆகியவைகளைக் கொண்ட விடுகளில் சுமார் நூறு குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களின் முக்கிய சிறு கைத்தொழில் தீக்குச்சிகளை வீடுகளில் தயாரிப்பதாகும்.

இப்பகுதிக் காட்டுநாயக்கன், வேட்டையாடுவதில் முற்காலத்தில் சிறந்திருந்ததால், இன்னும் வேட்டைக்கென, தாங்களாகவே தயாரித்த பசை, அதை வைக்கும் பசைப்பட்டி மிகவும் குறிப்பிடத்தக்கது. அரசமரப்பாலை (latex), பனைமரக் கொட்டையில் சேகரித்து அதன் வாயில் ஒரு குச்சியைக் கரண்டி போல உபயோகிப்பர். இந்த வேட்டைப்பொறி, பருந்து போன்ற பறவைகளைப் பிடிக்க மிகவும் உதவுகின்றது. அதாவது ஒன்றரை அடி நீளமுள்ள ஒரு [illegible] நடுவில் இறந்த எலியைக் கட்டிவிடுவர். மூங்கில் பத்தையின் இருமுனைகளிலும் அரசமரப்பாலை, பசையைத் தடவி விடுவர். இந்தப் பொறியைக் குறிப்பிட்ட இடத்தில் காட்டுப்பக்கத்தில் தரையில் வைத்துவிடுவர். பருந்து எலியைக் கண்டதும், எலியை தனது கால்களில் எடுக்க இறங்கும். எலியைக் காலில் கவ்வியவுடன் இருபுற இறக்கைகளை விரித்துப் பறக்க முயலும்போது, இப்பசையினால் இறக்கையின் இறகுகள் ஒட்டிக் கொள்ளுகின்றன. உடனே ஒளிந்திருக்கும் காட்டுநாயக்கன் ஓடிவந்து கழியினால் பருந்தை அடித்துப் பிடிப்பர்.

மற்றொரு அரும்பொருள், ஆமைகளைப் பிடிக்க உதவும் குத்தூசியாகும். இது ஆறு முதல் ஒன்பது அங்குலம் நீளமுள்ள, ஒரு முனையில் எறிசட்டியைப் (Harpoon) போன்று நுனி உள்நோக்கி கொக்கி போன்றதாக அமைக்கப்பட்டுள்ளது. இதனை ஒரு நீண்ட மூங்கில் கழியுடன் இணைத்து, அதிக ஆழம் இல்லாத ஆறு அல்லது குளத்தில் ஆமை உண்டா என்று பார்க்கலாம். இதனை ஆற்றில் குத்திக் கொண்டே சென்றால், ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஆமை இருந்தால் இந்த ஊசி பூமியில் இறங்காமல் ஆமை மேல் ஓட்டின் மேல் படும். இது ஒரு அறிகுறியாகும். உடனே காட்டுநாயக்கன் ஆமை பிடிக்க உதவும் வலையைப் போட்டு ஆமையைப் பிடிப்பர்.

கழுகுமலை (சிதம்பரனார் மாவட்டம்) முருகன் திருக்கோவில் மிக்க பெயர் பெற்றது. இக்கோயிலைப்பற்றி அருணகிரிநாதர் பாடியுள்ளார். இது அக்காலத்தில் எட்டயபுரம் சமஸ்தானத்துடன் சம்பந்தப்பட்டதாக இருந்தது. இங்கு மாடு பால் கறக்கும்போது கழுகு சுற்றி வந்ததால் இதற்குக் கழுகுமலை எனப் பெயர் வந்ததாக இங்குக் கூறப்படுகிறது. திருச்சியில் உள்ளதுபோல இம்மலையின் மேல், பிள்ளையார் கோவில் ஒன்று உண்டு. சரித்திரத்தில் சமணர்கள் கழுகுமலையில் தங்கினர், மலையைச் செதுக்கிச் சிற்பங்களை உண்டுபண்ணினர் என்பது குறிப்பிடத்தக்கது.



கோவில்பட்டி காட்டுநாயக்கன் மகளிர் தீப்பெட்டி - தீக்குச்சிகள் செய்யும் பணி

கழுகுமலை ஊரில், காட்டுநாயக்கன் குடியிருப்பு, ஊருக்குச் சற்று அருகாமையில் அமைந்துள்ளது. இங்குள்ள இடும்பன் மலை அருகே காடாக இருந்த பகுதியில் 1985-ஆம் ஆண்டு 'தாட்கோ' பதிமூன்று சிறிய கல் வீடுகளைக் கட்டிக் கொடுத்தது. இவ்வாழ்விடத்தில் சுமார் 35 காட்டு நாயக்கன் குடும்பங்கள் உள்ளன. இவர்கள் இவ்வூர்ப் பஞ்சாயத்தில் துப்புரவாளர்களாகப் பணிபுரிகின்றனர். பலர் பன்றியை வளர்க்கின்றனர். இம்மக்களின் முக்கிய குடிசைத் தொழில் தீக்குச்சி செய்வதாகும். இக்குடிசைத் தொழில் தனியார்களாகப் பல குடும்பங்களில் செய்யப்பட்டாலும், பல காட்டுநாயக்கன் குடும்பங்கள் ஒன்றுசேர்ந்து கூட்டுறவு முறையில் 'காட்டு நாயக்கன் மேட்ச் வொர்க்ஸ் கம்பெனி' என்ற ஒரு நிறுவனத்தை 1987-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டுத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் (TIIC) இரண்டு லட்சம் ரூபாய் முன்பணத்துடன் ஒரு வசதியான புதிய கட்டடத்துடன் தொடங்கினர். இங்கு சராசரி 50 ஆண்களும் பெண்களும் பணி செய்கின்றனர். இவர்களுக்குத் தீக்குச்சி செய்யும் குச்சிகள் கேரள கொல்லத்திலிருந்து மட்டி மரத்திலிருந்து செதுக்கப்பட்டு, அழகாக அடுக்கப்பட்டு, ஒரு கிலோ ரூபாய் 4.65 பைசாவாக சுமார் ஒரு தடவை 40 அல்லது 50 கிலோவாக வாங்கப்படுகிறது. இக்காட்டு நாயக்கன் பெரியவர், வாலிபர், பெண்கள் யாவரும் இப்பணியில் ஈடுபட்டு, இக்குச்சிகளை ஒழுங்காக கை இயந்திரத்தில் அடுக்குதல், அதில் மெழுகை நுனியில் ஏற்றுதல், மருந்து தடவுதல், தீப்பெட்டியில் குச்சிகளை அடைத்தல், பாக்கிங் செய்து அனுப்புதல் ஆகிய பணிகளைச் செய்கின்றனர். இவ்விதமாகத் தயாரிக்கப்படும் தீப்பெட்டி ஒன்றின் விலை முப்பது பைசா ஆகும். இதில் ஆண்டிற்கு ரூ.17,000 கிடைக்கிறது. இக்கம்பெனியின் முயற்சியால் முதல் தடவையாகப் பழங்குடியினரான காட்டுநாயக்க மகளிர் ஒருவரின் வண்ணப்படம் தீப்பெட்டியின் முகப்பில் அச்சடிக்கப்பட்டு வெளிவந்துள்ளது. எழிலுடன் காட்சியளிக்கும் இந்தக் காட்டு நாயக்கன் மகளிரின் பெயர் யாது? எங்கு வசிக்கிறாள்? இவளை வரைந்த ஓவியன் யார்? என்ற பல வினாக்கள் எழக்கூடும்.



ஈச்சமர ஓலைகளை வெட்டி, பாய் பின்ன உதவும் கருவி

நாங்கள் ஆய்வுப் பயணத்தை மேற்கொண்ட இச்சமயத்தில் இந்த மகளிர் கழுகுமலையில் இல்லை. வெள்ளையம்மாள் என்ற காட்டுநாயக்கன் மகளிரைக் கடைசியில் இராசபாளையத்தில் காண நேர்ந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு சிவகாசியைச் சார்ந்த ஒரு ஓவியர் இவரின் ஆதிகாலக் காட்டுநாயக்கன் ஆடை ஆபரணங்களுடன் தீப்பெட்டியில் போடுவதற்காகத் தன்னை ஓவியம் வரைந்ததாகக் கூறினார்கள். இவரது கணவன் சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டதாகவும், இப்பொழுது தனது மகனுடன் இராசபாளையத்தில் வசித்து வருவதாகவும், மாலையில் அன்னம் எடுப்பதாகவும் கூறினார். வாலிபனான மகன் மாரியப்பன், இராசபாளையம் பஞ்சாலை ஒன்றில் வேலை செய்து வருவதாகத் தெரிவித்தார்.

கழுகுமலையின் அடுத்த பகுதி, அவ்வூரின் குளக்கரைப் பகுதியாகும். இங்கு இவ்வறண்ட குளத்தின் கரையில் புளிய மரத்தடியின் நிழலில் சுமார் பத்து காட்டு

கோவில்பட்டி காட்டு நாயக்கன்கள்



நாயக்கன் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். தாங்கள் வளர்க்கும் பன்றிகளைத் திருவிழா, பண்டிகைக் காலங்களில், தங்கள் குடியிருப்பின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள காளியம்மன் கோவிலில் பலி கொடுக்கின்றனர். இவர்கள் இப்பகுதியில் மூன்று தலைமுறையாக வாழ்ந்து வருவதாகத் தெரிய வருகிறது. சுரைக்காய்க் குடுவைகளில் கஞ்சியை ஊரிலிருந்து பெற்று வாழ்ந்து வருகின்றனர்.



**பறவையைப் பிடிக்க உதவும் பசைப்பெட்டி**

பேருந்து மூலமாக, கழுகுமலையை விட்டு நெல்லை மாவட்டக் குருவிக்குளம் காட்டு நாயக்கன் இருப்பிடத்திற்குச் சென்ற போது, பேருந்து நிலையத்தின் அருகிலே அமைந்துள்ள நீர் நிரம்பிய குளத்தையும், அதன் கரையில் வளர்ந்துள்ள அடர்ந்த அரச மரத்தையும் காண முடிந்தது. காலை தொடங்கி மாலை வரை எண்ணிக்கையிலடங்காத சிறு சிறு குருவிகளின் கூட்டமும், அவைகளால் மரத்திலிருந்து எழுப்பப்படும் கூச்சலும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. இங்குள்ள காட்டுநாயக்கன் பகுதியில் சில ஆண்டுகளுக்கு முன்பு தீ விபத்து ஏற்பட்டதால் பன்னிரண்டு குடும்பங்களுக்குப் புதியதாகப் புதிய கல்வீடுகள் கட்டித் தரப் பட்டுள்ளதாகத் தெரிய வந்தது. இருப்பிடத்தின் நடுவில் குலதெய்வக் கோவில் ஒன்று உண்டு. இவர்கள் சுரைக்காய்க் குடுவையுடனும், தட்டுகளுடனும் அன்னம் ஏற்று வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்ததாக, காமராசர் மாவட்ட ஸ்ரீவில்லிப்புத்தூரைப் பேருந்து மூலமாக அடைந்தோம். பிரமாண்டமாக அமைந்துள்ள சூடிக் கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் நாச்சியாரின் திருக்கோவில் நம்மை இங்கு வரவேற்கிறது. ஸ்ரீவில்லிப்புத்தூரின் காட்டு நாயக்கன் பகுதியில் சிறப்புமிக்கது மலையடிப்பட்டி கிழக்கு சஞ்சீவிநாதபுரத்தில் அமைந்துள்ள அவர்களின் இருப்பிடமே. இது ஊருக்குச் சற்றுத் தொலைவில் சஞ்சீவ மலை அடிவாரத்தில் நாற்பதுக்கு மேற்பட்ட காட்டுநாயக்கன் குடும்பங்களைக் கொண்டதாகும். 1966-ஆம் ஆண்டு இந்த பட்டா நிலங்களில் குடிசை வீடுகளை அமைத்து, குயவர்கள், குறவர்கள் நடுவில் காட்டு நாயக்கர்களும் வாழ்கின்றனர். இவர்களின் முக்கிய தொழில் பன்றி வளர்த்தல், பன்றிச் சாணத்தைச் சேர்த்து உரமாக விற்றல், தீக்குச்சிகளைத் தனிக் குடும்பங்களாகச் செய்தல், அன்னம் எடுத்தல் ஆகும்.

இராசபாளையத்தின் ஒரு கோடியில் அமைந்துள்ளதே செட்டிக்குளம் காட்டு நாயக்கன் பகுதியாகும். சுமார் முப்பது குடும்பங்களுக்கு மேற்பட்ட இவர்கள் பன்றி வளர்த்தல், எருவு எடுத்தல், அன்னம் எடுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அன்னம் எடுப்பது இவர்களின் முக்கியப் பணியாக ஆகியது என்பதை விளக்க இம்மக்களிடம் ஒரு புராணக்கதை நிலவி வருகிறது. அக்காலத்தில் பொதுவாக, இக்காட்டுநாயக்கன் மக்கள் காட்டிலிருந்து ஊருக்கு வந்து அன்னத்தைப் பெற்று ஊரின் புறம்போக்குப் பகுதியில் சற்று இளைப் பாறுவது பழக்கமாக இருந்து வந்ததாம். ஒரு சமயம், பார்வதியும் சிவனும் பர்வதத்திலிருந்து இம்மக்களின் நிலையைப் பார்த்து வரவும், இவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்று பார்வதி, சிவனிடம் வேண்ட, இருவருமாக நேராகப் பூலோகத்திற்கு இறங்கினர். தூரத்தில் சிவனும் பார்வதியும் வருவதைக் கண்ட இம்மக்கள், பார்வதியை ஏதோ தவறான எண்ணத்தோடு பார்த்ததாகவும், மேலும் தங்களுக்குள் ஏதோ சலனத்துடன் பேசிக்கொண்டதாகவும் இதைக் கேட்ட சிவன் மிகவும் கோபமடைந்து, இந்தக் காட்டுநாயக்கன் காலமெல்லாம் இரஞ்சி, அன்னம் எடுத்து வாழ வேண்டும் என்றும், சுரைக்காய்க் குடுவையை வைத்து, பகல் நேரத்தில் 'இராமா, இராமா' என்றுகூறி அன்னம் எடுக்கவும், 'அம்மா, தாயே' என்று இரவு நேரங்களில் பனை நார்ப் பெட்டியை வைத்து அன்னம் எடுக்கவும் சபித்ததாக இக்கதை கூறுகிறது.

ஒத்து மொத்தமாக இவர்களிடம் காணப்படும் ஒரு சில சிறப்புப் பண்பாடுகள் - பொதுவாக ஊருக்குச் சற்றுத் தள்ளிய இடத்தில் குடியேறினவர்களாகிய இவர்களின் இருப்பிடங்களின் அருகிலேயே தற்சமயம், படிப்படியாக ஊரும், ஊராரின் வீடுகளும் விரிவடைந்து வளர்ந்து இம்மக்களின் இருப்பிடங்களருகே வந்துள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இம்மக்கள்தான் தீக்குச்சி செய்யும் குடிசைத் தொழிலில் தனித்தனிக் குடும்பமாகவும், கூட்டுறவு முறையிலும் தீவிரமாக ஈடுபட்டுச் சிறந்து விளங்குகின்றனர். காட்டு நாயக்கன் தான் அதிகப்படியான அளவில், தங்கள் உணவிற்கும், தெய்வ பலிக்கும் பன்றிகளைப் பேணி வளர்க்கின்றனர். அவைகளின் சாணத்தையும் உரமாக ஏற்று விற்கின்றனர். இவர்களின் மகளிர் பனை ஓலைகளைச் சிறிதாகச் சுருட்டி, காதின் சிறிய துவாரத்தில் ஆனைமலைக் காடரைப் போன்று அணிகலன்களாக உபயோகிக்கின்றனர். காலப்போக்கில் பனைஓலைக்காதணி விரிவடைய காதின் துவாரமும் பெரியதாகும் போது வண்டிக் கம்மல் எனப்படும் உலோக வளையத்தைக் காதில் போடுகின்றனர்.

காட்டு நாயக்கன் இருப்பிடங்களில் எல்லாம் கட்டாயமாக ஊர் காக்கும் கோவில்களை ஏற்படுத்தி, காளி, மாரியம்மன் ஆகிய கிராமியத் தெய்வங்களுக்கு முறையே, தவறாது, வழிபாடும், பன்றிபலியும் நடப்பது இம்மக்களின் இறையியல் நிலையை நன்கு காட்டுகிறது. மற்ற பழங்குடிகள் மூங்கிலை மூலப்பொருளாகக் கொண்டு சிறு குடிசைத் தொழில்களில் ஈடுபட்டிருக்க, காட்டு நாயக்கன் ஈச்சம் மரஓலையை முதற்பொருளாகக் கொண்டு அவற்றினால் பாய்கள் முடைவதும், அவைகளைத் தங்கள் குடிசையின் கூரைக்கென உபயோகிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மற்ற பழங்குடிகள் அதிக அளவில் வில் அம்புகளை வேட்டைக்கு உபயோகிக்கும் போது, காட்டு நாயக்கன் குத்தூசி, மற்றும் நூல் வளையினால் ஆமையைப் பிடிப்பது, இவர்களின் மற்றொரு சிறப்பு அம்சமாகும்.

இக்காட்டுநாயக்கனிடமிருந்து பெறப்பட்ட பல விதச் சுரைக்காய் குடுவைகள் (அன்னம் எடுக்க), குத்தூசிகள், பசைப் பெட்டி, ஈச்ச ஓலைகளை வெட்ட உதவும் சிறிய கத்தி, தீப்பெட்டிகள், நூல் வலைகள் ஆகிய அரும்பொருள்கள் விரைவில் அருங்காட்சியகத்தில் சிறப்புக் கண்காட்சிக்கு ஏற்ற ஒளிப்படங்களுடன் வைக்கப்படும்.






## தெரிந்து கொள்வோம்!

ஆத்ம. அர்விந்தன்

1. உலகில் பரப்பளவில் பெரிய நாடு எது?
2. உலகில் மக்கள் தொகையில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
3. உலகில் தேயிலை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
4. உலகிலேயே அதிக மழை பெய்யும் இடம் எது? எங்குள்ளது? மழையின் அளவு எவ்வளவு?
5. உலகில் உயர்ந்த நீர்வீழ்ச்சி எது? எங்குள்ளது?
6. உலகில் பெரிய பாலைவனம் எது? எக்கண்டத்திலுள்ளது?
7. உலகில் நீளமான ரயில் எது? எந்நாட்டிலுள்ளது?
8. உலகிலேயே உயரமான கட்டடம் எங்குள்ளது? எவ்வளவு உயரம்?
9. உலகிலுள்ள பெரிய மியூசியம் எது? எங்குள்ளது?
10. உலகிலுள்ள பெரிய மருத்துவ மனை எது? எங்குள்ளது?
11. உலகிலுள்ள பெரிய சர்ச் எது? எங்குள்ளது?
12. உலகிலேயே பெரிய மசூதி எது? எங்குள்ளது?
13. உலகிலேயே நீளமான சுவர் எது? எவ்வளவு நீளமுள்ளது?
14. உலகில் பெரிய பறவை எது?
15. உலகில் நீளமான பாலம் எந் நதியின்மீது கட்டப்பட்டுள்ளது?

**விடைகள்:**

1. ரஷ்யா; 2. சீனா; 3. இந்தியா; 4. சிரபுஞ்சி, இந்தியாவிலுள்ளது. ஆண்டுக்கு 1232 செ.மீ.; 5. ஆஞ்சல் பால்ஸ், வெனிசுலாவில்; 6. சகாரா, ஆப்ரிக்காக் கண்டத்தில்; 7. டிரான்ஸ்-சைபீரியன், இரஷ்யாவிலுள்ளது; 8. நியூயார்க்கில் உள்ள எம்பயர் பில்டிங், 381 மீட்டர்; 9. பிரிட்டிஷ் மியூசியம், லண்டன்; 10. கிங்கண்டிரி ஹாஸ்பிடல், நியூயார்க்; 11. செயின்ட் பீட்டர் சர்ச், வாட்டிகன்; 12. ஜும்மா மசூதி, டில்லி; 13. கிரேட்வால் ஆப் சைனா, 27.10 கி.மீ.; 14. ஆஸ்ட்ரிஜ்; 15. லோவம் சாம்பாசி நதியின்மீது

## மாணவர் பக்கம்

## கண்மணியே!

—தஞ்சை மணவழகன்

கண்மணி யேஉன்னை நம்பி-எதிர்
காலம் இருக்குது தம்பி!
நன்மணி யாய்நீ வளர்ந்து-தாய்
நாட்டைக் காத்திடு தம்பி!
(கண்மணி)

ஐந்தில் வளைந்திட வேண்டுமப்பா-அது
அதிகம் உழைத்திட தூண்டுமப்பா!
மந்த நிலையினை ஓட்டிடப்பா-எதிலும்
முயற்சி தனைநீ நாட்டிடப்பா!
(கண்மணி)

இளமைப் பருவம் படிப்பதற்கும்-செயல்
எதையும் செய்து முடிப்பதற்கும்
வளமும் நலமும் கொழிப்பதற்கும்-நல்ல
வழியை வளர்க்கும் தெரிஞ்சுக்கப்பா!
(கண்மணி)

தாய்த்திரு நாடுநம் அன்னையப்பா-இதைத்
தினமும் மனதில் எண்ணிடப்பா!
வாய்த்திடும் பொழுதில் தொண்டாற்றிட-நம்
மாநிலத் தாயை உயர்த்திடப்பா!

(கண்மணி)



# நகைச்சுவை மன்னர் சார்லி சாப்ளின்

சார்லி சாப்ளினின் முழுப் பெயர் சார்லஸ் ஸ்பென்ஸர் சாப்ளின் என்பதாகும். லண்டன் நகரில் இசைக் குழு ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த ஒரு தம்பதியின் மகனாக 1889-ஆம் ஆண்டு ஏப்ரல்16-ஆம் தேதி பிறந்தார்.

ஐந்து வயதிலேயே மேடை ஏறி விட்டார் சார்லி சாப்ளின். குழந்தை நட்சத்திரமாக இங்கிலாந்து முழுவதும் பயணம் செய்து பல மேடைகளில் தோன்றி நடித்து அனைவரையும் மகிழ்வித்தார்.

சாப்ளின் தமது 24-வது வயதில் தான் திரைப்படத் துறையில் நுழைந்தார். விரைவிலேயே திரையுலகிலே ஒரு புதிய சரித்திரத்தைப் படைக்க வல்ல பாத்திரம் ஒன்றை உருவாக்கினார் அவர். 'தி லிட்டில் ட்ராம்ப்' எனப்படும் நாடோடிப் பாத்திரம் தான் அது. தொளதொளவென்று இருக்கும் பெரிய பாண்ட்; இதற்கு நேர் எதிர் மாறான விதத்தில் உடலை இறுக்கமாகக் கவ்விப் பிடிக்கும் சட்டை; நறுக்கு மீசை; அளவு பெரிதான ஷூக்கள்; இந்தக் கோலத்திலே காட்சி அளிப்பவன் தான்''தி லிட்டில் ட்ராம்ப்''.

சாப்ளினின் இந்த அபிமான கதாநாயகன், திரைப்பட ரசிகர்கள் அனைவரையும் வெகு சீக்கிரத்திலேயே கவர்ந்து விட்டான். உலகமே தனக்கு எதிராக வந்தபோதிலும், எப்போதும் யாருக்கும் நன்மையே செய்கின்ற



சார்லி சாப்ளின்

பொன்மனம் கொண்டவனான இந்த அப்பாவி மனிதனின் பாத்திரம் அனைவரின் உள்ளங்களிலும் எளிதில் குடிபுகுந்து விட்டது.

இந்தப் பாத்திரம் மட்டுமன்றி, இதை ஏற்று நடித்த சார்லி சாப்ளினும் அதிவேகமாகப் புகழ்பெற்றார். 30 வயது நிரம்புவதற்கு முன்னமேயே அவர் ஒரு லட்சாதிபதியாகி விட்டார்.

பல்வேறு ஸ்டுடியோக்கள் தயாரித்த ஒன்று அல்லது இரண்டு ரீல் கொண்ட சுமார் 80 படங்களில் சாப்ளின் நடித்தார். அதன்பிறகு 1918-ஆம் ஆண்டில் தமது சொந்தப்படக் கம்பெனியை நிறுவினார். அபாரமான நகைச்சுவையும், நெஞ்சத்தை நெகிழ்விக்கும் காட்சிகளும் கொண்ட பல படங்களை உருவாக்கினார். எ டாக்ஸ் லைப், ஷோல்டர் ஆர்ம்ஸ், தி கிட், தி கோல்ட் ரஷ், சிட்டி லைட்ஸ், மாடர்ன் டைம்ஸ், தி கிரட் டிக்டேடர், மான்ஷர் வெர்டோஸ், லைம்லைட் என அவர் தயாரித்த படங்கள் யாவுமே வெற்றி வாகை சூடின.

வாய்விட்டுச் சிரிக்க வைக்கும் நகைச்சுவையையும், கண்ணீர் விட்டு அழ வைக்கும் உருக்கமான சம்பவங்களையும் ஒரே காட்சியிலேயே கலந்து தரக்கூடிய அபாரத் திறமை பெற்றிருந்தார் சாப்ளின்.

இந்த நூற்றாண்டின் கலை வடிவமான திரைப்படத் துறைக்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவை கருதி, 1971-ஆம் ஆண்டில் அவருக்குச் சிறப்பு ஆஸ்கார் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

## விளையும் பயிர்



பூண்டி புஷ்பம் கல்லூரியில் தாவரவியல் முதலாம் ஆண்டு படிக்கும் எஸ். அமல்ராஜ் என்ற மாணவர் 1984-ஆம் ஆண்டில் 8-ஆம் வகுப்பில் திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்திலேயே முதல் ரேங்கில் வெற்றி பெற்று கிராமப்புறப் பகுதிகளில் பயிலும் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசியப் படிப்புதவித் தொகை பெற்றுள்ளார்.

1986-இல் 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழில் 90 மதிப்பெண்கள் பெற்று, தஞ்சாவூர் மாவட்டத்திலேயே முதல் மாணவராகவும், தமிழ்நாட்டிலேயே 2-வது மாணவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ. 300 பரிசுத் தொகையினையும் அண்ணா அறக்கட்டளையின் மூலம் பெற்றுள்ளார். மேலும் அறிவுக்கூர்மை மாணவர் விருதையும் (Bright Student Award) பெற்றுள்ளார். நேரு நூற்றாண்டு விழாவையொட்டி சிறந்த தாவர வியல் மாணவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டு நேரு நினைவுப் புத்தகப் பரிசுகளைப் பெற்றுள்ளார்.

## கடம்பை மான் பால் ஓர் அரு மருந்து

கடம்பை மான்களைப் பழக்கி அவற்றிடமிருந்து பாலைக் கறக்க வேண்டும் என்ற யோசனையைச் செயல்படுத்த பல ஆர்வலர்கள் முயன்றனர். ஆனால், சோவியத் நாட்டில் உள்ள சரணாலயத்திலும், பைன் மரக் காடுகளிலுள்ள ஆராய்ச்சியாளர்களும் கடம்பை மான்களைப் பழக்குவதிலும் அவற்றிடமிருந்து பாலையும் புகழ் பெற்ற ''பந்தோகிரின்'' என்ற மருந்தைவிடச் சிறப்பான ''அல்த்செசின்'' என்ற மருந்தையும் (இளம் கடம்பை மான் கொம்புகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது) பெறுவதிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

கடம்பை மானின் பால், பசுப் பாலைப் போன்றே சுவையாக உள்ளது. பசுப் பாலிலுள்ள சத்தே இதிலும் இருக்கிறது. இதில் உயர் ரகப் புரதச் சத்தும், கொழுப்புச் சத்தும் உள்ளன. மேலும் தாது உப்புக்களும், ஊட்டச் சத்துக்களும் அதிக அளவில் உள்ளன. குடல் புண் வராமல் தடுக்கவும், அதைக் குணப்படுத்தவும் கடம்பை மான் பால் அருமருந்தாகும்!

# வெண்பாப் போட்டி

## 2. நலிந்தாரும் பெற்றார் நலன்

நீ சோறும் ஊர் நாடும் நிலம் ஆண்டார் என்னபலன்?
யாரோ நலம்பெற்றார்; ஏழையல்ல - பாரில்
நலிந்தகுலம் சிறந்த நன்முத்தால் இன்று
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-டாக்டர் ம.அ. சின்னத்தம்பி,
அலங்கம்பட்டி.

வண்ணரியார்க்கு, மீனவர்க்கு வண்ணார், மருத்துவர்க்கு,
இன்னபிற சாதிக்(கு) இட மொதுக்கி - நன்மை
''மெலியார்க்கே'' என்றநிலை மேவியதால் நாட்டில்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

—புலவர் நாகு. ஆறுமுகம்,
அரிக்காரன்வலசு.

நலவாழ்வுத் திட்டங்கள் தீட்டியும் நாட்டில்
சிலரான செல்வரே பெற்றார் - நலனே
மெலிந்தார்க் கருள்செய் கலைஞர்திட் டத்தால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-சிவ. அசோகன்,
முளப்பாக்கம்.

கண்ணிலார் கால்கைகள் தாமிலார் எதிலார்
அண்டு ஏணாக் கூட்டப் பிணியினார் - நாட்டில்
கலைஞர்தன் ஆட்சி மலர்ந்ததனால் எல்லா
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-எம்.எஸ். வெங்கடாசலம்,
திருச்சி.

தேவர் துயர்தீர்ந்தார் சீதைக் கணவனால்
மூவர் கொடையால் தமிழ்ப்புலவர் - யாவர்
மெலிந்தார்? மணிக்கலைஞர் ராட்சியில் பாவாய்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-ஜே. ராஜம்மாள்,
உடன்குடி.

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர் என்றவழி
கண்டு கலைஞர் கழிவிரக்கம் - கொண்டின்(று)
இலவச மாய்அரிசி ஈதலால் வாழ்வில்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

க. காத்தப்பன்,
நாட்டரசன்கோட்டை.

பாரி கொடுத்த கொடையாய், பருவத்தில்
மாரி பொழிந்த நிலமாய், - அரசு
நலவாழ்வுத் திட்டங்கள் நாட்டமுடன் தீட்ட
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-ஏ.ஆர். சுப்ரமணியன்,
அனுப்பப்பட்டி.

பிற்பட்டோர் ஊனமுற்றோர் பெண்ணினத்தோர் வாழ்வுக்கு
முற்பட்ட ஆட்சி முனைந்ததோ - பற்றும்
கலிநீக்க வந்த கருணா நிதியால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-தெ. பழனியாண்டி,
மெய்த்தலைவன்பட்டி.

மீட்சிக்குப் போராடும் மேன்மைசால் நம்கலைஞர்
ஆட்சியினால் மக்கள் அகமகிழ்ந்தார் - காட்சி
மலிவாய் நடத்தாமல் மாண்புடனே ஆள
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-கடலூர் மணிமாறன்,
கிருட்டிணராயபுரம்.

● பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

டாக்டர் ம.அ. சின்னத்தம்பி,
அலங்கம்பட்டி
கம்பூர்(அஞ்சல்)
மேலூர் வட்டம்
மதுரை மாவட்டம்

'நலிந்தாரும் பெற்றார் நலன்' என்னும் வெண்பாப் போட்டிக்கு வந்திருந்த ஏராளமான வெண்பாக்களில், பரிசு பெற்ற வெண்பாவும், வெளியிடுவதற்குத் தகுதி படைத்த வெண்பாக்களும் இந்த இதழில் இடம் பெறுகின்றன.

சில நேயர்கள், பிரசுரமான எல்லா வெண்பாக்களுக்குமே பரிசு உண்டு என எண்ணிக் கொள்கின்றனர். ஒரே ஒரு வெண்பாதான் பரிசுக்குரியது எனத் தேர்ந்தெடுக்கப் பெறுகிறது. அதற்குத்தான் பரிசு அளிக்கப்படுகிறது. அதாவது தமிழரசு ஓராண்டுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படுகிறது. இதனை வெண்பாப் போட்டி நேயர்கள் நினைவிற் கொள்ள வேண்டுகிறோம்.

– ஆசிரியர்

எம்கலைஞர் ஆட்சியிலே ஏழையர்கள், ஏந்திழைகள்
தம்நிலையின் மேலுயர்ந்தார்; நாமுயர்ந்தோம் - நம்முன்
மெலிந்தாரும் மேன்மையுற்றார்; மேலும் தொடர்ந்தே
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-கவிஞர் கோமகன்,
மாக்கவி பாரதிநகர். சென்னை

கண்ணொளி மங்கியவர் காயத்தில் ஊனமுற்றோர்
பெண்டிர் உழவர் பிறதொழிலோர் - தொண்டர்
மலிந்திட்ட பட்டதாரி மற்றவரும் சாதி
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-தி. ஞானப்பிரகாசம்,
நாலாட்டின்புத்தூர்.

பாவை மணமுடிக்கப் பட்டப் படிப்புபெற
ஆவலுடன் நன்குதவும் ஆட்சியடி - கோவாம்
கலைஞர் நமையாளும் காலத்தில் அன்றோ
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-பல்லவன்,
திருக்கழுக்குன்றம்.

கைம்பெண்ணும் வாடும் குறைப்படிப்புக் கன்னியரும்
பைந்தமிழ் நாட்டில் பரிமளிக்க - மைந்தன்
வலிந்துநல் திட்டம் வழங்கியதால் இங்கு
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-தி. சிவசுப்பிரமணியன்,
தென்காசி.

பொற்காலம் பூத்ததெனப் பூந்தமிழர் தாமகிழத்
தற்காலம் வாய்த்ததுபார் தக்கபடி - இற்று
வலியார்முன் நொந்தபடி வாழ வழி காணா
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-புலவர் வ. சிவசங்கரன்,
திருக்கழுக்குன்றம்.

மங்கையர்க்குச் சொத்துரிமை; வாகனங்கள் ஓட்டுநர்க்கு;
தங்கநிகர் மாணவர்க்குச் சத்துணவு - பொங்கிப்
பொலிந்திடும் நல்லாட்சி பூத்தலான் வாழ்வில்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-புலவர் நா. சிவஞானம்,
தாஞ்சூர்.

முத்தான திட்டமே நம்முதல்வர் திட்டமே
சத்தான முட்டை உணவிட்டார் - நித்தம்
சலித்தார் களித்தார் கலைஞர் வரவால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-ந. சம்பந்தன்,
அச்சிறுப்பாக்கம்.

வலியவர்க்கு மட்டுமே வழிகிடைத்து நாட்டில்
குளித்தார்கள் பன்னீர்க் குளத்தில் - விழித்தோம்!
எழிலார் தமிழகத்தில் ஏழைமகன் ஆட்சியிலே
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-சந்தனக்குமார்,
திண்டுக்கல்.

மின்னல் மயக்காய் மிளிரும் புதுக்கவிதை
கன்னல் மரபைக் கலைக்குமென - அன்னாய்
பொலிவுறும் வெண்பாவிற் போட்டியினால் உள்ளம்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-க. கிருட்டிணமூர்த்தி,
அரியமும்.

எல்லோர்க்கும் கல்வி இலவசமாய்த் தானாக்கி
இல்லாரின் இல்லாமை இல்லாக்கும் - நல்ல
பலதிட்டம் வாய்த்ததனால் பைந்தமிழ் நாட்டில்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-சீராவன்,
[illegible]

மீதி வெண்பாக்கள் அடுத்த இதழில் இடம் பெறும்

## விவசாய பம்புசெட்டுகளுக்கு மின்விசை நேரம் அதிகரிப்பு



"24.4.89 முதல், விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்குப் பகலில் 4 மணி நேரமும் இரவில் 4 மணி நேரமும் மின்சாரம் வழங்கப் பட்டது. இனி 1.7.89 முதல், விவசாயி களின் பம்பு செட்டுகளுக்கு, பகலில் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படும்.

"தென் மேற்குப் பருவமழை தீவிரமடையும் என்று எதிர்பார்ப்பதால், 130 கே.வி.ஏ. மற்றும் அதற்குமேல் உயர் அழுத்த மின்சாரம் பெறும் தொழிற்சாலைகளுக்கு இப்போது உள்ள 60 சதவிகித மின்சார வெட்டு 40 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது. இதனால் 1,100 தொழிற் சாலைகள் பயன்பெறும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

-மாண்புமிகு முதல்வர் அவர்கள், என்னூர் அனல்மின் நிலைய அடிக்கல் நாட்டு விழாவில் பேசியது (1.7.89)



# ஜவஹர்லால் நேரு புகைப்படக் கண்காட்சி

ஜவஹர்லால் நேரு புகைப்படக் கண்காட்சித் திறப்பு விழா, தமிழ்நாடு அரசு மற்றும் நேரு நூற்றாண்டு விழாக் குழுவின் சார்பில் 23-6-89 அன்று சென்னையில் நடைபெற்றது.

விழா வரவேற்புரை ஆற்றிய மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் பேசுகையில்,

"நவீன இந்தியா உருவாக வேண்டும் என்று பண்டித நேரு விரும்பினார். அதற்குப் பெண் விடுதலை முக்கியம் என்று கருதினார். அந்தக் கருத்து நிறைவேறும் வகையில் இந்த ஆட்சியில் பெண் விடுதலைக்காக டாக்டர் கலைஞர் அவர் களால் புதிய அத்தியாயங்கள் எழுதப்பட்டு வருகின்றன" என்று கூறி, நேரு நூற்றாண் டையொட்டி, கத்திப்பாரா சந்திப்பிலிருந்து அண்ணாநகர் வரையிலான சாலைக்குப் **'பண்டித ஜவஹர்லால் நேரு சாலை'** எனப் பெயரிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் எனத் தெரிவித் தார்.

மாண்புமிகு மத்தியஅரசின் நாடாளு மன்ற விவகாரத்துறை இணை அமைச்சரும் நேரு நூற்றாண்டுச் செயல்பாட்டுக் குழுத் தலைவருமான திருமதி. ஷீலா தீக்சித் அவர்கள் விழாத் தலைமை உரை ஆற்றி னார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

"இந்தியா உலக அரங்கில் தனி இடம் பிடிக்க அடித்தளமாக இருந்தவர் பண்டித நேரு அவர்கள். இந்தியாவின் மிகச் சிறந்த குடிமகன் அவர். அவர் ஒரு மாபெரும் தலைவர். வேளாண்மை, அறிவியல் துறை களில் முன்னேற்றத்தை உருவாக்கிக் காட்டி னார். சிறந்த எழுத்தாளர், நல்ல சிந்தனை யாளர். நேரு நூற்றாண்டு விழாவையொட் டிப் பெரிய அளவில் நல வாழ்வுத் திட் டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜவ ஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பத்தில் ஒரு வருக்கு வேலை வாய்ப்பு ஆகியவை இத் திட்டங்களில் முக்கியமானவை."

புகைப்படக் கண்காட்சியினைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமது உரையில்,

"பண்டித நேரு அவர்களுடைய நினை வினைப் போற்றுகின்ற வகையிலும், அவர் எந்த இலட்சியத்திற்காகப் பாடுபட்டாரோ, அந்த இலட்சியங்களைப் பின்பற்றி நம் முடைய நாடு முன்னேறுவதற்காகவும், அந்தக் குறிக்கோளோடு இளைய சமுதாயம் வளர வேண்டும், வளம்பெறவேண்டும் என்பதற் காகவும், இந்த நூற்றாண்டு விழாவை இந்தியத் திருநாட்டின் பல பகுதிகளில் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

"நேரு அவர்களைப் பற்றி அமைச்சர் திருமதி ஷீலா தீக்சித் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்., தியாகத்தின் உருவாக, சிந்தனைச் சுரங்கமாக, எழுத்தின் வேந்த ராக, தலைசிறந்த ராஜதந்திரியாக, நாடு போற்றும் வல்லவராக அவர்கள் திகழ்ந் தார்கள் என்று குறிப்பிட்டார்.

"பண்டித நேரு அவர்களைப் பற்றி எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் சென்னைக் கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டது எனக்கு நினை வுக்கு வருகிறது-'நான் கொட்டிக் கிடக்கும் செங்கல். நேரு கட்டி முடிக்கப்பட்ட கோபுரம்' என்று குறிப்பிட்டார்.

"எத்தனையோ கருத்து மாறுபாடுகள் இருந்த போதிலும், அவற்றிற்கு அப்பாற் பட்டு மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் தரும் என்ற பரந்த மனப்பான்மை யோடு, தியாகிகளை, விடுதலை வீரர்களாக இந்த நாட்டினுடைய விடுதலைக்காகப் போரிட்ட தானைத் தலைவர்களை, தளகர்த் தர்களைப் பாராட்டுகின்ற அந்த இதயம் படைத்தவர்கள் நாங்கள் என்ற காரணத்தினால், பண்டித நேருவை, நேரு, போன்ற இந்த நாட்டு விடுதலை வீரர்களை என்றைக்குமே போற்றத் தவறியதில்லை" என்று கூறினார்.

தொடர்ந்து உரையாற்றும்போது முதல்வர் அவர்கள், 1970-ஆம் ஆண்டில் பண்டித நேரு குறித்து சென்னையில் நடைபெற்ற கவியரங்கத்திற்குத் தாம் தலைமை வகித்துப் பாடிய கவிதையை நினைவுகூர்ந்தார்.

மேலும், நவம்பர் திங்களில் சென்னை மாநகரில் நேருவினுடைய நூற்றாண்டு நிறைவு விழாவைத் தமிழக அரசு பிரம் மாண்டமான முறையில் கொண்டாடும் என் றும் முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

மத்திய அரசு இணைச் செயலாளர் திரு. அருண் சேத்ரபால் நன்றி நவின்றார். விழாவில் முரசொலி மாறன், எம். பி., திரு. டி. ஆர். பாலு, எம்.பி., திருமதி வைஜ யந்திமாலா பாலி, எம். பி, மத்திய அமைச்ச ரவைச் செயலக இணைச் செயலர் திரு. பி. வி. கிருஷ்ணமூர்த்தி, செய்தி மற்றும் சுற்றுலாத் துறைச் செயலாளர் (கூடுதல் பொறுப்பு) திரு.வே.சங்கரசுப்பையன் இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. கி. இராசமாணிக்கம்(கூடுதல் பொறுப்பு) ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

## பெருந்தலைவர் காமராஜ்



நாடு முன்னேற வறுமையும் அறியாமையும் போக வேண்டும். இவை இரண்டும் போனாலன்றி நாடு முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

அப்பாவியான ஏழை மக்களை வசதி படைத்தவர்களும், கல்மனம் படைத்தவர்களும் கசக்கிப் பிழிந்து விடாதபடி தடுக்க வேண்டியது அவசியம்.

சுதந்திரம் என்றால் பயமில்லாது வாழ்வதுதான். பயமில்லாது வாழ நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

பெண்கள் விழிப்பு அடைந்தால், குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும். தேசமே முன்னேறும்.

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலுந்தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.

# படமும் செய்தியும்



தமிழகம் வருகை தந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களை, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், சென்னை ஆளுநர் மாளிகையில் சந்தித்து (1-7-89) உரையாடினார்.



தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகமும் விளையாட்டு மற்றும் இளைஞர் பயிற்சித் துறையும் இணைந்து ஏற்பாடு செய்த "ஒலிம்பிக் தின ஓட்டம்" சென்னை மெரீனா கடற்கரையில் (25-6-89) மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு உள்துறைச்செயலாளர் திரு. ஆர். நாகராஜன், இ.ஆ.ப., கலந்து கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 4-7-89 அன்று இராமநாதபுரம் பெரிய கண்மாய் வறட்சிப் பணிகளைப் பார்வையிட்டார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் உடன் உள்ளார்.





கிராம நிர்வாகத்தினை சீரமைப்பது குறித்த அறிக்கையினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் கிராம நிர்வாக உயர்மட்டக் குழுவின் தலைவர் திரு. கே. லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் தலைமைச் செயலகத்தில் 3-7-89 அன்று அளித்தார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்களும், தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களும் உடன் உள்ளனர்.



மௌலானா அபுல்கலாம் ஆசாத் நூற்றாண்டு விழாவில், அவரது திருவுருவப்படத்தை மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திருமதி ஷீலா தீக்சித் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. எஸ். ஜெ. சாதிக் பாட்சா, மாண்புமிகு செய்தி- தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம், செய்தித் துறைச் செயலாளர் திரு. வே.சங்கரசுப்பையன், இ.ஆ.ப., செய்தித்துறை இயக்குநர் திரு. சி.இராஜமாணிக்கம், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி வைஜயந்திமாலா பாலி ஆகியோர் உடன் உள்ளனர். (23.6.89)

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 4-7-89 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில், இராமேசுவரம் பேருந்து நிலையக் கட்டடம் மற்றும் பரமக்குடி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் (1989-90), ஆதி திராவிடர் குடியிருப்புகள் கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார். விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் மு.தமிழ்க்குடிமகன் தலைமை தாங்கினார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் உடன் உள்ளார்.



“**ச**முதாயம் என்பது தனி மனிதர் எனும் சங்கிலிகளால் இணைக்கப்பட்டது. ஒரு சங்கிலிக் கரணை பழுதடைந்தாலும் சமுதாயச் சங்கிலித் தொடரே பாதிக்கப்படுகிறது”

என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒருமுறை அழகாகக் குறிப்பிட்டார்கள்.

சமுதாயச் சங்கிலித் தொடரின் எல்லாப் பகுதியும் வளம் பெற்று வலிவுடன் திகழ்ந்திட நமது அரசு நடவடிக்கை எடுத்து வருவதை நாடு நன்கறியும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்தநாளையொட்டி செயல்படுத்தப்பட்ட மூன்று முத்தான திட்டங்களே போதும் - மக்கள் நலனில் அரசுக்குள்ள அக்கறையைப் பறைசாற்ற-

கண்புரை நோயுடையவர்களுக்கு கண்ணொளி-

ஏழைகளுக்கு இலவச அரிசி-

சத்துணவு மையக் குழந்தைகளுக்கு இலவச முட்டை




# புதுக்கோட்டையில் முத்தான திட்டங்கள்

இவை, மக்கள் நலம் பேணிடும் அரசின் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாளில் செயல்வடிவம் பெற்ற மகத்தான திட்டங்கள்.

பார்வையற்ற மனிதர்கள் விழி பெற்று உயரவும்- அரிசி வாங்கிச்சாப்பிடும் அடித்தள மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி தவழவும், எதிர்காலத்தலைமுறையாம் இளம் குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஆக்கம் தரவும், அரசு கண்ட மூன்று திட்டங்களும் புதுக்கோட்டை மாவட்டத்தில் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டன.

ஜூன் திங்கள் 2-ஆம் நாள் புதுக்கோட்டையில் நடைபெற்ற இலவச அரிசி வழங்கும் விழாவில் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன் பங்கேற்றார்.

ஏழை எளிய மக்களுக்கு தலா 5 கிலோ அரிசியை விநியோகித்த மாண்புமிகு அமைச்சர் அடித்தள மக்களின் நலனிற்காக அரசு ஆயிரமாயிரம் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாகக்குறிப்பிட்டார்.

நிகழ்ச்சிக்குத்தலைமை வகித்த தமிழ்நாடு அரசு நிலச்சீர்திருத்த ஆணையர் திரு. சி.என். இராமதாஸ் பேசும்போது-

“மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயரில் கருணையும் உண்டு - நிதியும் உண்டு - அதனால்தான் நிதிப்பற்றாக்குறை இருந்தபோதிலும் ஏழை எளிய மக்களின் நலனுக்காக, பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.” என்று குறிப்பிட்டார்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. பெரியண்ணன் பேசும்போது “சொன்னதைச் செய்வோம் - செய்வதைச் சொல்வோம்” என்ற இலட்சிய உணர்வோடு அரசு வீறுநடைபோடுகிறது என்று குறிப்பிட்டார்.

இந்த இலவச அரிசி வழங்கும் விழா மாண்புமிகு அமைச்சர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்க அண்டக்குளம், கறம்பக்குடி ஆகிய இடங்களிலும், அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்தநாளையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 2,49,541 குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா 5 கிலோ வீதம் இலவச அரிசி வழங்கப்பட்டது.

இந்நாளில் மொத்தம் 1,248 மெட்ரிக் டன் அரிசி விநியோகிக்கப்பட்டது. இந்த அரிசியின் மொத்த மதிப்பு சுமார் 22 இலட்சம் ரூபாய் ஆகும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்தநாளான ஜூன் திங்கள் 3-ஆம் நாள் புதுக்கோட்டையில் இலவச கண் சிகிச்சை முகாம் தொடங்கியது.

“கண்ணில்லா மாந்தர்களுக்குக் கண் கொடுப்போம்- நம் கலைஞரின் செயல்களுக்குக்கைகொடுப்போம்”

என்ற கவிதை வரிகளுக்கேற்ப புதுக்கோட்டை இராணியார் அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சை முகாம நடைபெற்றது. இந்த கண் சிகிச்சை முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த கண் சிகிச்சை முகாமில் கண் புரையோடிய 102 பேருக்கு அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

எதிர்காலத் தலைமுறை ஏற்றமும் வலிமையும் பெற்று எழுச்சியுடன் திகழ்ந்திட வேண்டுமென்பதில் ஆர்வம்கொண்ட நமது முதல்வர் அவர்களின் பிறந்த நாளில் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றொரு சீரிய திட்டம் சத்துணவு மையக் குழந்தைகளுக்கு இலவச முட்டை வழங்கும் திட்டமாகும். இத்திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கிக்கு அருகில் உள்ள நாகுடி கிராமத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. பழ. சுப்பையா, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அரசு அலுவலர்கள் விழாவில் பங்கேற்றார்கள். இந்த இலவச முட்டை வழங்கும் திட்டத்தின் கீழ், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 1,275 குழந்தைகள் நல மையங்கள், 1,327 பள்ளி சத்துணவு மையங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 2,22,900 குழந்தைகளுக்கு சத்துணவுடன் முட்டை வழங்கப்பட்டது. மாதம் இருமுறை இலவச முட்டை வழங்கும் இத்திட்டத்திற்காக புதுக்கோட்டை மாவட்டத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.2.50 இலட்சம் வீதம் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.30 இலட்சம் செலவழிக்கப்படும்.






புதுக்கோட்டை மாவட்டத்தில் சத்துணவு மையங்களில் முட்டை வழங்கும் திட்டத்தைக் கண்காணிக்க ஊராட்சி ஒன்றிய அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சத்துணவு மையக் குழந்தைகள் முட்டையைக் கரங்களில் வாங்கிச் சுவைத்த காட்சி இன்றும் கண்கொள்ளாக்காட்சியாக உள்ளது

**இரெ. மகாலிங்கம்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
புதுக்கோட்டை மாவட்டம்

## உலகிலேயே மிகப் பெரிய புத்தகம்!

உலகிலேயே மிகப் பெரிய புத்தகம் எது?

பிரான்ஸ் நாட்டிலுள்ள டௌலூஸ் நகரில், ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனம், வெளியிட்டுள்ள புத்தகம்தான் அது!

இந்தப் புத்தகம் அளவிலும் சரி, எடையிலும் சரி உலகிலேயே மிகப் பெரிய புத்தகமாக விளங்குகிறது.

இந்தப் புத்தகத்தின் நீளம் 4 மீட்டர் (13.33 அடி); அகலம் 3 மீட்டர் (10 அடி) எடையோ 6 டன்! விந்தையாக இருக்கிறதல்லவா?

இந்தப் புத்தகத்தின் 30 பக்கங்கள், பளுதூக்கும் வலுவுள்ளவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாகப் புத்தகத்தின் பக்கத்தை அனாயசமாகப் புரட்டி விடுவோமல்லவா? அப்படி இந்த [illegible] புத்தகத்தின் பக்கத்தைப் புரட்டிவிட முடியாது. ஆம்... ஒவ்வொரு பக்கமும் [illegible] கிலோ கிராம் ஆகும்!



## கல்விக் கண் தந்த காமராஜர்



கல்விக் கண்ணைத் திறந்தார் - நம்
கருத்தில் ஒன்றிக் கலந்தார்

செல்வச் செழிப்பை வெறுத்தார் - பலர்
சிந்தையில் என்றும் நிறைந்தார்.

அல்லல் உற்ற ஏழையர் - படிப்பு
அறிவை வாழ்வில் எய்திட

அல்லும் பகலும் உழைத்தார் - பல
அரிய திட்டம் படைத்தார்.

கல்லாய் இருந்த பேர்களை - அவர்
கற்றவர் என்றே ஆக்கினார்.

வல்லார் அவர்தம் தொண்டால் - இவ்
வையம் நிமிர்ந்தே நின்றிடும்.

எல்லார் வீட்டுப் பிள்ளையும் - உயர்
எழுத்தறி வதனைப் பெற்றிட

நல்ல பாதை காட்டினார் - அவரை
நாளும் நினைத்து உய்வோமே!

-கே. எஸ். நாகராஜன்

162339



# ஆதரவற்ற அனைத்து முதியோர், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை

முதுமை அடைந்த நிலையில், ஆதரவற்றவர்களாக இருப்பவர்களுக்கு நிதி உதவி வழங்கும் ''முதியோர் உதவித் தொகைத்திட்டம்'' நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதியோர்களுக்கு இத்திட்டத்தின் ஆரம்ப காலத்தில் மாதம் 20/- ரூபாய் வழங்கப்பட்டது. பின்னர், 1979-இல் இத்தொகை 25/- ரூபாய் ஆகவும், 1982-இல் 35/- ரூபாய் ஆகவும் உயர்த்தப்பட்டது.

ஆனால், இந்தத் தொகை போதுமானதாக இல்லை என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வந்தது. இக்கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்த இன்றைய அரசு, தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு இந்த உதவித் தொகையை ரூ.35/- ரூபாயிலிருந்து 50/- ரூபாய் ஆக 1-5-89 முதல் உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.

இதன்படி, பின்வரும் ஐந்து வகைப் பிரிவினர் மாதந்தோறும் அதிகரிக்கப்பட்ட ஐம்பது ரூபாய் உதவித் தொகையைப் பெறலாம்.

1. சாதாரண முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள்.
2. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்
3. ஆதரவற்ற கைம்பெண்கள்
4. ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்
5. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள்

## விண்ணப்பம் செய்யும் முறை

அச்சிட்ட விண்ணப்பத்தில் வயது, ஏழ்மை நிலை போன்ற விவரங்களை எழுதி வட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

அச்சிட்ட விண்ணப்பம் கிடைக்காவிட்டால், முழு விவரங்களுடன் கையால் எழுதி அனுப்பலாம். விண்ணப்பதாரர் அண்மையில் எடுத்த புகைப்படத்தினையும் ஒட்டி அனுப்ப வேண்டும்.

ஊராட்சி ஒன்றியம், வட்டாட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகிய அலுவலகங்களில் விண்ணப்பங்கள் இலவசமாகக் கிடைக்கும்.





வட்ட ஆட்சியர் தானே நேரில் விசாரித்து அல்லது தனது உதவி அலுவலர் மூலம் விசாரித்து தகுதியுடையவர்களின் விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்வார். மாவட்டங்களில் கோட்டாட்சித் தலைவரும், சென்னை மாவட்டத்திலும், நீலகிரி மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்களும் உதவித்தொகை அனுமதி செய்வார்கள்.

## எண்ணிக்கை வரம்பின்றி தகுதியுடைய அனைவருக்கும் உதவித் தொகை

1.5.89க்கு முன்னர் முதியோர் உதவித் தொகை தரப்படும் எண்ணிக்கை வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த எண்ணிக்கை வரம்பு 1.5.89 முதல் முற்றிலும் நீக்கப்பட்டு விட்டது. இதன்படி தகுதி உடைய அனைவரும் உதவித்தொகை பெறலாம்.

முதியோர் உதவித் தொகை பெற விண்ணப்பித்துக் காத்திருப்பவர்களின் விண்ணப்பங்களை ஆய்வு செய்து, அவர்களுக்கு உடனடியாக உதவித்தொகை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதியோர் நிதி உதவி பெறும் அனைவருக்கும் சத்துணவுக் கூடங்களில் மதிய உணவு வழங்கப்படுகிறது.

இச்சீரிய திட்டம் வெற்றிபெற அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டுகிறோம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பட்டு வகைகள்



உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

100% உண்மையான பட்டு
உத்தரவாதமான ஜரிகை

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள், இணையில்லா புதுமைகள், எண்ணிலா வகைகள்.

Black

தமிழரசு

பதிவு எண். M. 8576
Licence No. TN/MS(C)/PP-23



தஞ்சை மாவட்டத்தில் முதல்வர் கலைஞர் நிகழ்ச்சிகள் (28-6-89)

